அறைவு 04 இயம் 33 March 19-25, 2016

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு

MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka

பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்

பக்கங்கள் : 20 விலை : 30.00

IELTS
LIFE SKILL
UK SPONCER
VISA
CALL:
0770203201

HELLO MOBILE WORLD

122, NC Road
Trincomalee
0777154663 - 0712674050



### 1957ல் திருமலை மாநாட்டின் பிரகடனப்படி

# "தனி மாகாணம் வேண்டும்"

வடக்கும்கிழக்கும் இணைக்கப்படுமானால் முஸ்லிம்களுக்குத் தனியான -தொரு மாகாணத்தை அந்நிலப்பரப்பில் உருவாக்க வேண்டும் என நீர்வழங்கல் அமைச்சரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

" வடக்குகிழக்கில் வாழும் முஸ்லிம்களுக்கென மாகாண-மொன்றை உருவாக்குவதென்பது புதியதொரு முற்பகர்வு அல்ல. 1957ம் ஆண்டில் திருகோணமலை மாநாட்டில் பல்வேறு தமிழ்த் தலைவர்களால் முன்மொழியப் பட்டதும், 1977ல் தந்தை செல்வநாயகத்தால் முன்மொழியப்பட்ட தீருவுத் திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்ட-துமானதொரு முன்மொழிவே இம் முன்மொழிவு" என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம்களின் அபிலாசை -களைக் கருத்திற்......................

பக் 17

## அனல் மின் நிலையத்திற்கு எதிராக நடவடிக்கைகள் முன்னெடுப்பு




ஸ்ரீலங்கா-இந்தியக் கூட்டு முயற்சியின் கீழ் சம்பூரில் அமைக்கப்பட உத்தேசிக் -கப்பட்டுள்ள அனல் மின் நிலையத்தால் மக்கள் அடையவிருக்கும் பாதிப்புக் -களை அம்மக்களுக்கு விளக்கிச் சொல்லும் பணிகளை பசுமை இயக்கம் திருகோணமலை முன்னெடுத் -துள்ளது.

இம்முயற்சிக்கு பல்கலைக்கழக மாணவர்கள் இணைந்து வலுச்சேர்த் -திருப்பதாக அவ்வமைப்பின் செய்திக் குறிப்புக்களில் இருந்து தெரியவருகின்றது.

கடந்த வாரம் கட்டைப் -பறிச்சான் பகுதியில் சுமார் பன்னிரெண்டு பல்கலைக் -கழக மாணவ மாணவிகளால்............

பக் 17

## - மாணவர்களுக்குத் தடியடி - ஆசிரியர் மன்னிப்பைக் கோரினார் ?

### குளக்கோட்டன் வித்தியாலயத்தில் சம்பவம்




தம்பலகாமம் குளக்கோட்டன் வித்தியாலயத்தில் ஆசிரிய -ரொருவரால் மாணவர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டதாக காவல்துறையில் மேற்கொள்ளப் -பட்ட முறைப்பாட்டை அடுத்து குறித்த ஆசிரியர்.....

பக் 17

## தரவையில் பெரும்பான்மைக் குடியிருப்பு - தடுக்க வேண்டும்

### நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன்

மட்டக்களப்பு தரவையில் அமைக்கப்பட்டி-ருந்த தமிழினத்தின் விடுத-லைக்காக போராடிய எமது உறவுகளின் சமாதிகள் அழிக்கப்பட்டு அந்த பகுதி-களில் பெரும்பான்மை இனத்தவர் குடியேற்றப்படு-வதை ஒருபோதும் அனும-திக்க முடியாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்-டக்களப்பு மாவட்ட நாடாளு-மன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் தெரி-வித்தார்.

அவர் தொடர்ந்தும் உரை-யாற்றுகையில், இந்த பிர-தேச மக்களைப் பொறுத்த-வரை கடந்த பாராளு-மன்ற தேர்தலின்.......

பக் 17

## திருகோணமலையில் கப்பம் செலுத்தும் கூலித்தொழிலாளிகள்??

திருகோணமலையில் நாளாந்த உழைப்பில் ஈடுபடும் தொழிலாளர்கள் கப்பம் செலுத்திக் கடமைக்குச் செல்ல -வேண்டிய நிலையில் இருப்பதாக மலைமுரசிற்குத் தெரியவந்துள்ளது.

திருகோணமலையில் இயங்கும் சீமெந்து ஆலைக்கு நாளாந்தத் தொழிலுக்குச் செல்லும் கூலித் -தொழிலாளிகளே இவ்வாறு கப்பம் செலுத்துமாறு நிரப்பந்திக்கப் -படுகின்றனர்.

பாலையூற்று, மட்கோ, அண்ணாநகர் பிரதேசத்தில் இருந்து தொடருந்துப் பாதை ஊடாகக் கால்நடையாக சீமெந்து ஆலைக்குச் செல்லும்.....

பக் 17


## காணாமலாக்கப்பட்டோரைக் கண்டறிதல் - கலந்துரையாடல்

காணமலாக்கப் பட்டவர்களுக்கான சர்வதேச ஆணைக்குழுவும், குவாத்த -மாலாவின் மனித உடல்த் தடயவியல் கட்டளையகமும் இணைந்து திருகோண மலையில் கலந்துரையாடல் ஒன்றை நடாத்தியுள்ளன.

கடந்த இருபத்தைந்து வருட காலங்களாக நடைபெற்றுவரும் போரினால் காணாமலாக்கப்பட்டவர்களை சரியாகக் கணக்கெடுப் -பதற்கான முறையானதும், வினைத்திறன் வாய்ந்த-துமான முறையைப் பற்றி ஆய்வு செய்யும் கலந்துரை -யாடலாகவே இச்சந்திப்பு நடைபெற்றுள்ளது.

திருகோணமலையில் வண. யோகேஸ்வரன் அடிகளைப் பணிப்பாளராகக் கொண்டு இங்கும் மனித உரிமை விருத்திக்கும் பாதுகாப்பிற்குமான (சிபிபி-எச் ஆர்) அமைப்பும், கொழும்பில் இயங்கும் மனித உரிமை விருத்திக்கான (சிஎச்ஆர்டி) அமைப்பும் இக் கலந்துரையாடலுக்குத்...

பக் 17



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
026 2227677
malaimurasu@hotmail.com 075 4252042

# எதிர்த்தரப்பின்றித் தொடரும் கிழக்கும் - நாடும்...

சனநாயக நாடொன்றின் எதிர்தரப்பு என்பதன் முழுமையான அர்த்தத்தைப் புரிந்துகொள்வதற்கு பரந்த நேர்மையான அரசியல் பார்வையென்பது தேவையானது.

ஆளுந்தரப்பின் அதிகாரம் கட்டுக்கடங்காமல் போகும் போது உறுதியான எதிர்த்தரப்பால் மாத்திரமே ஆளும் தரப்பைக் கட்டுக்குள் வைத்திருக்க முடியும். எதிர்த் தரப்பைத் தவிர வேறு எந்தச் சக்தியாலும் ஆளுந்தரப்பின் அதிகார பிறள் செயற்பாடுகளை கட்டுப்படுத்த முடியாது.

இதனைச் சரியாகப் புரிந்துகொண்ட முன்னாள் ஸ்ரீலங்காவின் ஆட்சியாளர் மஹிந்த ராஜபக்ச எதிர்த்தரப்பைப் பலமிழக்கச் செய்வதற்குக் கையாண்ட முறைகள் அனைவரும் அறிந்தவை. அவர் தனக்கு எதிரான தரப்பை இல்லா - தொழிப்பதற்கு அல்லது அவ்வெதிர்த்தரப்பின் பலத்தைச் சிதைப்பதற்கு ஒரே வகையான அனுகுமுறைகளைக் காலத்திற்குக் காலம் தனது எதிர்தரப்புக்களை நோக்கிச் செயற்படுத்தி - யிருந்தார்.

தனது முதலாவது தேர்தல் வெற்றியைப் பதிவு செய்த பின்னர் அரசியல் கட்சியாகப் பலமிழக்கச் செய்த கட்சி ஜேவிபி எனப்படும் மக்கள் விடுதலை முன்னணியையே.

அக்காலத்தில் மக்கள் விடுதலை முன்னணியின் பிரச்சாரப் பீரங்கியான விமல் வீரவன்சவைத் தனது கட்சிக்குள் இழுக்காமல் அவருக்கென்றொரு கட்சியை உருவாக்கி அக்கட்சியை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்ற கூட்டுக்குள் இணைத்துக் கொண்டதன் ஊடாக மஹிந்த முதலில் சிதைத்த கட்சி ஜேவிபி.

பின்னர் நாளாந்தம் நாடாளுமன்ற உறுப்பினர்களை வாங்குவதன் ஊடாக ஐக்கிய தேசியக் கட்சியின் பலத்தை அழித்த மஹிந்த, அவ்வாறு வாங்கிய நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தனது அணியில் சேர்த்துத் தன்னை வலுவாக்கிக் கொண்டார். அப்பொறியிற் சிக்கிய ஒரேயொரு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அம்பாறையைச் சேர்ந்த பியசேனவே!

மிகத் திறமையாக எதிரியை அழிக்காமல் சிதைத்து அச்சிதைவில் தன்னைப் பலப்படுத்திக்கொண்ட மஹிந்த, எதிர்க்கட்சியின் ஒட்டுமொத்த பலத்தைச் சிதைத்தன் பின்னரே தனது எதேச்சாதிகாரப் போக்கில் செயற்படத் தொடங்கினார்.

மேற்சொல்லப்பட்ட உண்மைக் கதையானது நாடொன்றின் எதிர்க்கட்சியின் மகத்துவம் எத்தகையது என்பதைக் கோடிட்டு நிற்கின்றது.

எதிர்க்கட்சியைச் சிதைப்பதில் மஹிந்தவின் அணுகுமுறை இரத்தமும் [illegible]பும் சார்ந்த அணுகுமுறையாக இருந்தது. ஆ[illegible] தற்போதைய நல்லாட்சியின் கூட்டான ரணில்-மைத்திரி கூட்டு அதே அணுகுமுறையை இரத்தமும் சதையும் இன்றி நிறைவேற்றியிருக்கின்றது என்பதே உண்மை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பலமான ஆதரவுடன் ஆட்சிக் கட்டேறிய தற்போதைய நல்லாட்சி அரசு நடத்தி முடித்த நாடாளுமன்றத் தேர்தலின் போது பலமான கூட்டு எதிர்க்கட்சியொன்று களத்தில் உருவாகியிருந்த போதிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை எதிர்க்கட்சியாக உருவாக்கியது ஏன்.??

நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையின் அடிப்படையிற் பலமிழந்த நிலையிலுள்ள தமிழணியை எதிரணியாக உருவாக்கிக் கொள்வதன் ஊடாக தனது நடவடிக்கைகளுக்கு இன்றியமையாததும் ஆமாம் போடக் கூடியதுமானதொரு எதிர்க்கட்சியை நாடாளுமன்றில் பேரினவாத அரசு விட்டு வைத்துள்ளது.

இந்த அணுகுமுறையானது இரத்தமும் சதையுமற்ற இராசதந்திர அணுகுமுறை. விளைவு ஒன்றுதான் தன்னிச்சையாகப் போய்க்கொண்டிருக்கும் அரசினை எதிர்த்து நிற்பதற்கு எவரும் துணைபோகாததோர் நடவடிக்கைதான்.

யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படும் வீடுகள் தொடர்பாக அண்மையில் வடக்கின் முதல்வரும் மீள் குடியேற்ற அமைச்சரும் முரண்பட்ட போது மக்களுடைய விருப்பத்திற்கு அமையவே இவ்வாறான வீடுகள் அமைக்கப்பட வேண்டும் எனக் கோரப்பட்டது. இன்று வரை அவ்விடயத்தைக் கருத்தில் எடுப்பதற்கோ, மேற்கொண்டு பேசுவதற்கோ அரசு தயாராகவில்லை.

வலுமிக்கதொரு எதிர்க்கட்சி களத்தில் இருந்திருந்தால் இவ்வகையான வீடுகள் தொடர்பாக நாடாளுமன்றில் பேசப்பட்டிருக்கும். ஆனால் எதிர்கட்சி வலுக்குன்றியிருப்பதால் நல்லாட்சியும் தனது உண்மை முகத்தைப் பதிவு செய்துள்ளது. ஒரு சனநாயக நாட்டில் கேள்விகளும் பதில்களும் மிகவும் இயற்கையானவை. கேள்விகள் கேட்பவர்களாலேயே பதில்களும் வழங்கப்படும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள பங்களிப்பு ஆட்சி மத்தியிலும் கிழக்கு மாகாணத்திலும் இன்று வலுவிலிருக்கின்றன.

இந்நிலை தொடருமானால் மீண்டும் ஒரு தன்னாட்சி கலாசாரத்தினை நோக்கி சனநாயகப் போர்வைக்குள் ஒளிந்திருப்பவர்கள் பயணப்படத் தொடங்கி விடுவார்களோ என்ற அச்சம் மேலோங்கியே நி[illegible]ன்றது.

# எய்ட்ஸ் ஆட்கொல்லி நோய் அடையாளம் காணப்பட்டவர்கள் 24 பேர் ஒருவர் மரணம்

திருகோணமலை மாவட்டத்தில் 1997ஆம் ஆண்டு முதல் இன்றுவரை 24 பேர் எயிட்ஸ் நோய்த் தொற்றுக்கு உள்ளானமை தொடர்பில் இனங் காணப்பட்டுள்ளதுடன், இவர்களில் ஒருவர் உயிரிழந்ததாகவும் திருகோண -மலை பொது வைத்தியசாலையின் பாலியல் நோய் சிகிச்சைப்பிரிவு - க்கான பொறுப்பதிகாரி, வைத்தியர் வி.கௌரீஸ்வரன் தெரிவித்தார்.

2006ஆம் ஆண்டின் பின்னர் 12 நோயாளர்கள் திருகோணமலை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவதாகவும் அவர் கூறினார்.

திருகோணமலை மாவட்டத்தில் உல்லாசப் பயணிகளின் வருகை அதிகரித்துக் காணப்படுகின்றது.




அத்துடன், அதிகளவில் மசாஜ் நிலையங்களும் காணப்படுகின்றன. எனவே, மக்களை அவதானத்துடன் இருக்குமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். மேலும், இம்மாவட் - டத்தில் பாலியல் நோய் தொடர்பான விழிப்புணர்வு மற்றும் அறிவூட்டல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் கூறினார்.

| ஆர்.எம்.கிஸ்ணம்

# பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கூட்டம்

திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்தி சங்கப் பொதுக்கூட்டம் இன்று (19) சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெற இருப்பதாக அறிவிக்கப் - பட்டுள்ளது.

மின்சார நிலைய வீதியில் அமைந்துள்ள கல்லூரியின் ஆரம்ப பிரிவு வளாகத்தில் நடைபெறும் கூட்டத்தில் புதிய நிர்வாகசபைத் தெரிவும் இடம்பெறவிருப் - பதால் அனைத்துப் பெற்றோர்களையும் கலந்து - கொள்ளுமாறு கோரப்பட்டு - ள்ளது.

| கதிரவன்

# பழைய மாணவர் சங்கக் கூட்டம்

திருகோணமலை ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் பொதுக் கூட்டம் எதிர்வரும் 27.03.2016 மாலை 4.00 மணிக்கு கல்லூரி சம்பந்தர் மண்டபத்தில் இடம்பெற உள்ளது. அனைத்து பழைய மாணவர்களையும் அக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அதிபர் திருமதி சுலோசனா ஜெயபாலன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

| கதிரவன்

# பாடசாலைக் காணியைப் பதுக்கியது யார்?? கி.மா.ச உ. லாஹிர் கேள்வி



| அச்சுதன்

"திருகோணமலை கல்விக் கோட்டத்திலுள்ள அல்மின்ஹாஜ் மகாவித்தியால - யத்தின் பாடசாலைக் காணி எட்டாயிரம் சதுர அடியிலிருந்து நாலாயிரம் சதுரஅடியாகக் குறுகியதற்கான காரணம் என்ன? பாடசாலைச் சுற்றுச் சூழலிலுள்ள தனியார் அத்துமீறிப்பிடித்தனரா? அல்லது வேறு ஏதும் காரண - ங்கள் உண்டா? என்பதைக் கண்டறிய வேண்டும் பொதுச் சொத்துக்கள் தனியாரினால் அபகரிக்கப்படுவதை இனி - மேலும் அனுமதிக்க முடியாது. கல்வித் திணைக்களம் இனி - மேலும் பாராமுகமாக இருக்க - முடியாது. பொது விளையாட்டு மைதானம் இராக்காலங்களில் போதைப்பாவனையாளர் - களினதும் குடித்துவிட்டு வெறியாட்டம் ஆடுபவர்களின் [illegible]ங்களாக மாறி வருகின்றன. இதனை இனியும் அனுமதிக்க முடியாது.

அத்துமீறி பாடசாலை வளாகத்துக்குள் அல்லது விளையாட்டு மைதானத்தக்குள் உள்நுழைபவர்கள் காவல்துறையினால் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்." என கிழக்கு மாகாண சபையின் உறுப்பினர் லாஹிர் தெரிவித்து - ள்ளார்.

அல்மின்ஹாஜ் வித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட லாஹிர் வினைத்திறன் மிக்க மாணவர் சமூகத்தை உருவாக்குகின்ற இப் - பாடசாலையின் பொது விளையாட்டு மைதான - த்தைப் புனரமைப்பு செய்வதோடு பாடசா - லைச்சுற்று மதிலுக்கான ஒருபகுதி நிதியினை தனது பன்முகப்படுத் - தப்பட்ட நிதியிலிருந்து ஒதுக்கித் தருவதாக அவர் அங்கு உறுதி அளித்துள்ளார்.

பாடசாலையின் அதிபர் ஜி.டி. இக்பால் தலைமையில் இல்ல விளையாட்டுப் போட்டி -கள் நடைபெற்றன.

# கல்வி அமைச்சுக்கான நிதியில் கிராமங்களில் அபிவிருத்திப் பணிகள்

கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், மீள் - குடியேற்ற அமைச்சுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியில் இருந்து அபிவிருத்தி நடவடி -க்கைகள் முன்னெடுக்கப் - பட்டுள்ளன.



திருகோணமலை மாவட்டத்தின் முதலிக்குள (மொரவேவ) பிரதேச செயலாளர் பிரிவில் நொச்சிக்குளம். சாந்திபுரம், கிராமங்களும், குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் நாவற்சோலை கிராமத்திலும் அம்பாறை மாவட்டத்தின் மணற்சேனைக் கிராமத்திலும் தலா 50 இலட்சம் பெறுமதியான அபிவிருத்திக் கட்டுமாணங்கள் இந்நிதியின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன.

நாவற்சோலைக் கிராமத்தில் 162 மீற்றர் கொங்கிறீட் போடப்பட்ட வீதியும், 183 நீளமான வடிகானும் அமைக்கப்பட்டு கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சர் சி.தண்டாயுதபாணியால் பாவனைக்கென வழங்கப் பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU

# இலங்கைச் செய்திகள்

## நாட்டில் வெப்பநிலை அதிகரிப்பு

காற்றுப்படிவங்களின் மாற்றங்கள் மற்றும் மேலும் சிலகாரணிகள் காரணமாக தற்போது ஸ்ரீலங்காவின் வெப்பநிலையானது இரண்டு பாகை செல்சியஸ்சால் அதிகரித்திருப்பதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தற்போதுள்ள வெப்பமான காலநிலை எதிர்வரும் ஏப்ரல் மாத நடுப்பகுதிவரை நீடிக்கும் என திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் அனுஷா வர்ணகூரிய தெரிவித்துள்ளார்.

## களனி பல்கலையின் விரிவுரையாளர்கள் பணிப்புறக்கணிப்பு

புதிய மாணவர்கள் எதிர்நோக்கும் பகிடி வதையைக் கண்டிக்கும் வகையில் களனி பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் விரிவுரைகளில் இருந்து விலகிக் கொண்டுள்ளனர்.

களனி பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர்கள் கடந்த திங்கட்கிழமையில் இருந்து மாணவர்களுக்கான விரிவுரைகளில் இருந்து விலகி தொழிற்சங்க நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

பல்வேறு சந்தர்ப்பங்களில் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டாலும் சிரேட்ட மாணவர்கள் புதிய மாணவர்களை அறிமுகப்படுத்திக்கொள்ளும் போர்வையில் அவர்களைப் பகிடி வதைக்கு உட்படுத்தும் செயற்பாட்டில் ஈடுபட்டு வருவதாக விரிவுரையாளர்கள் குறிப்பிட்டனர்.

## வலி வடக்கு மக்களின் போராட்டம் தற்காலிகமாகக் கைவிடப்பட்டது.

புதிய சொந்த இடங்களில் தம்மை மீளக்குடியமர்த்துமாறு வலியுறுத்தி யாழ்ப்பாணம் - வலிகாமம் வடக்கு மக்கள் ஆரம்பித்த சுழற்சிமுறை உண்ணாவிரதப் போராட்டத்தை தற்காலிகமாகக் கைவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மூன்று மாதங்களுக்குள் தம்மை மீள்குடியேற்றுவதாக ஜனாதிபதி வழங்கிய உறுதிமொழிக்கு அமைய உண்ணாவிரதப் போராட்டத்தைத் தற்காலிகமாகக் கைவிடத் தீர்மானித்துள்ளதாக மக்கள் தெரிவித்தனர்.

கடந்த 4 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த உண்ணாவிரதப் போராட்டம் சுழற்சி முறையாக ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் முன்னெடுக்கப்பட்டு வந்தது.

தமது சொந்த நிலங்களில் விரைவில் தம்மை மீள்குடியமர்த்துமாறும், பலாலி விமான நிலையத்தை விஸ்தரிக்கக்கூடாதென்றும் கோரிக்கைகளை முன்வைத்து 24 நலன்புரி முகாம்களைச் சேர்ந்த மக்கள் இந்த போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

வலிகாமம் வடக்கு மற்றும் வலிகாமம் கிழக்கு பகுதிகளில் 26 வருடங்களுக்கு மேலாக தமது சொந்த நிலங்களையும் சொந்தத் தொழிலையும் கைவிட்டு நலன்புரி முகாம்களில் வாழ்வதால் தாம் பெரும் துன்பங்களுக்குள்ளாகி வருவதாக மக்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, இந்த சுழற்சி முறை உண்ணாவிரதப் போராட்டம் இன்றைய தினமும் மல்லாகம் கோணப்புலம் நலன்புரி நிலையத்தில் முன்னெடுக்கப்பட்டது.



## பயிற்சியில் இராணுவ வீரன் உயிர் இழந்தது ஏன்? விசாரணை ஆரம்பம்



மாதுருஓயா இராணுவ பயிற்சிக் கல்லூரியில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த இராணுவ வீரர் ஒருவர் உயிரிழந்தமை குறித்து காவல்துறை விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

பயிற்சியில் ஈடுபட்டிருந்தபோது திடீரென நோய்வாய்ப்பட்ட இராணுவ வீரர் ஒருவர், வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ஜயநாத் ஜயவீர குறிப்பிட்டார்.

இந்த மரணம் தொடர்பில் இராணுவ காவல்துறையும் விசாரணையை ஆரம்பித்துள்ளதாக இராணுவப் பேச்சாளர் கூறினார்.

கதுருகஸ்வெவ பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவரே இராணுவப் பயிற்சிக் கல்லூரியில் உயிரிழந்துள்ளார்.

மரணம் தொடர்பான பிரேத பரிசோதனைகள் இன்று நடைபெறவுள்ளதுடன், அரலகங்வில காவல்துறை மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## ஏப்ரலில் உரம் வாங்கக் காசு

விவசாயிகளுக்கு எதிர்வரும் ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதியளவில் உரம் பெற்றுக்கொள்வதற்காக நிதி வழங்கப்படும் என விவசாய திணைக்களம் தெரிவித்துள்ளது.

அனைத்து வங்கிகளுக்கும் 18ம் திகதி நேற்றைய தினம் நிதி அனுப்பி வைக்கப்படும் என விவசாய திணைக்களத்தின் ஆணையாளர் சுனில் வீரசிங்க தெரிவித்தார்.

காணி உரிமையார்களின் அடையாள அட்டைகளின் தகவல் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாடுகள் 80 வீதத்தினால் பூர்த்தி அடைந்துள்ளதாக ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

இந்த மாதம் 24 ஆம் திகதிக்கு முன்னர் வங்கிக்கு அனைத்து தகவல்களும் பெற்று கொடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதற்கு முன்னர் வழங்கப்பட்ட உர மானியத்திற்கு பதிலாக உரம் வாழங்குவதங்கு பதிலாக உரத்திற்கான பணத்தை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானம் எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


## நான்கு மாணவர்கள் மாயம்

கிளிநொச்சி பரந்தன் பகுதியைச்சேர்ந்த நான்கு சிறுவர்கள் காணாமல் போயுள்ளதாக அவர்களது பெற்றோரால் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை காலை பாடசாலைக்குச்சென்ற நான்கு சிறுவர்களும் மாலை வரை வீடு திரும்பவில்லை எனவும் அவர்களை பல இடங்களில் தேடிய போதிலும் எந்தவித தகவல்களும் கிடைக்கவில்லையென பெற்றோர்கள் தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர்.

## தமிழின அழிப்பிற்கு நீதி வழங்க சர்வதேசம் தயங்குகின்றது

### ஜெனீவா முன்றலில் தமிழர்களின் குரல்




இதில் உரையாற்றியவர்கள் சிறிலங்கா அரசு தொடர்ந்தும் திட்டமிட்டு தமிழ் இன அழிப்பை மேற்கொண்டு வருவதாக குற்றம்சாட்டியதுடன், தொடரும் காணி அபகரிப்பு, இராணுவ மயமாக்கல், சிங்கள மயமாக்கல், பாலியல் வன்கொடுமைகள் உள்ளிட்ட சம்பவங்களை ஆதாரங்களாகவும் முன்வைத்தனர்.

சிறிலங்கா ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான தற்போதைய அரசாங்கமும் எந்தவிதத் தடையும் இன்றி தமிழ் இன அழிப்பை முன்னெடுப்பதாகவும் இங்கு உரையாற்றிய பேச்சாளர்கள் குற்றம்சாட்டினர்.

இறுதிக்கட்ட போரின் போது இடம்பெற்ற போர் குற்றங்கள் உட்பட மனித குலத்திற்கு எதிரான கொடூரங்கள் தொடர்பில் கலப்பு நீதிமன்ற விசாரணையை நடத்துவதாக ஜெனீவா ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் ஏற்றுக்கொண்ட போதிலும் இதுவரை அதனை நிறைவேற்றாது இழுத்தடித்து வருவதாகவும் குற்றம்சாட்டியதுடன், இவ்வாறான நிலையில் சிறிலங்கா அரசாங்கம் எவ்வாறு தமிழ் மக்களுக்கு நீதியை நிலைநாட்டப் போகின்றது என்றும் அவர்கள் கேள்வி எழுப்பினர்.

உலகின் பல்வேறு இடங்களில் இடம்பெறும் அடக்குமுறைகளுக்கு நீதியை நிலைநாட்டுவதில் அக்கறை செலுத்திவரும் சர்வதேச சமூகம், தமிழ் மக்களுக்கான இன அழிப்பு விடையத்தில் மாத்திரம் பாராமுகத்துடன் இருப்பது ஏன் என கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. தமிழின அழிப்பிற்கு நீதிகோரி இன்றைய தினம் ஜெனீவாவிலுள்ள ஐ.நா முன்றலில் நடைபெற்ற கவனயீர்ப்புப் போராட்டத்தின் போதே இந்த கேள்வியை எழுப்பியுள்ளனர்.

தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினரால் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த இன்றைய கண்டனப் பேரணி மற்றும் போராட்டத்தில் ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலிருந்து வந்திருந்த ஆயிரக்கணக்கான புலம்பெயர் தமிழர்கள் கலந்துகொண்டனர்.

தமிழின அழிப்பிற்கு நீதிகோரிய கண்டனப் பேரணி ஐரோப்பிய நேரப்படி இன்று பிற்பகல் 2.30 அளவில் ஜெனீவா மத்திய புகையிரத நிலையத்திற்கு அருகிலுள்ள பூங்காவிற்கு முன்னாலிருந்து ஆரம்பித்தது.

வயது வித்தியாசமின்றி சிறுவர்கள் முதல் முதியோர் வரை கலந்துகொண்டு தமிழ் இன அழிப்பிற்கு சர்வதேசம் நீதி பெற்றுக் கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினர்.

சுவிஸ்சர்லாந்து மக்களுடன், ஜேர்மன், பிரான்ஸ், நெதர்லாந்து, டென்மார்க், சுவீடன், பிரித்தானியா உட்பட பல நாடுகளிலிருந்தும் விசேட பஸ்களை ஏற்பாடுசெய்து வந்திருந்த புலம்பெயர் தமிழ் மக்கள், தமிழ் இனப் படுகொலைகளை பறைசாற்றும் நிழல்படங்கள் பொறிக்கப்பட்ட பதாதைகளையும், தமது கோரிக்கைகள் அடங்கிய வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாதைகளையும் ஏந்தியிருந்தனர்.

இதற்கமைய ஜெனீவா தொடருந்து நிலையத்திற்கு அருகிலுள்ள பூங்காவிற்கு முன்னால் ஐரோப்பிய நேரப்படி இன்று பிற்பகல் 2.30 க்கு ஆரம்பமான பேரணி ஐ.நா முன்றலை சென்றடைந்ததும் அங்கு கவனயீர்ப்புக் கூட்டம் நடைபெற்றது.

இதற்கமைய இந்தக் கூட்டம் ஐரோப்பிய நேரப்படி இன்று மாலை ஆறு மணி வரை நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூர்ச் செய்திகள்

## திரிசு நிலங்கள் குறித்த ஆலோசனை

பயன்படுத்தப்படாதுள்ள தரிசு நிலங்களில் எவ்வாறான அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வது என்பது தொடர்பில் ஆராயப்பட்டது. திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் காரியாலயத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் என்.ஏ.ஏ.புஷ்பகுமாரவின் ஏற்பாட்டில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற கூட்டத்தின்போதே இது தொடர்பில் ஆராயப்பட்டது.

கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற முதலீட்டாளர் மாநாட்டைத் தொடர்ந்து கிழக்கு மாகாணத்துக்கு அதிக முதலீடுகளை மேற்கொள்வதற்கு வழி கிடைத்துள்ளது. இந்நிலையில், இம்மாகாணத்திலுள்ள வளங்களை இனங்கண்டு முதலீட்டாளர்களுக்கு தேவையான புதிய திட்டங்களை வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேலும், இத்தகைய முதலீட்டுத் திட்டங்களின் மூலம் இளைஞர், யுவதிகளின் வேலையில்லாப் பிரச்சினைக்கு தீர்வைப் பெற்றுக்கொடுக்க முடியுமென கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

## முன்பள்ளி ஆசிரியர்களுக்கு ஊக்குவிப்பு

மட்டக்களப்பு, காத்தான்குடிப் பிரதேசத்தில் முன்பள்ளி ஆசிரியர்கள் எதிர்நோக்கிவரும் மாதாந்த சம்பளப் பிரச்சினைக்கு இடைக்காலத் தீர்வாக ஆசிரியர்களுக்கு ஊக்குவிப்புத் தொகை வழங்குவதற்கு நல்லாட்சிக்கான தேசிய முன்னணி தீர்மானித்துள்ளது.

ந.தே.முன்னணியின் ஏற்பாட்டில் காத்தான்குடி மற்றும் அதனைச் சூழவுள்ள முன்பள்ளி ஆசிரியர்களுடனான கலந்துரையாடல், காத்தான்குடியிலுள்ள அதன் பிராந்தியக் காரியாலயத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதன்போதே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டதாக ந.தே.முன்னணியின் தவிசாளர் எம்.எம்.அப்துர் ரஹ்மான் தெரிவித்தார். எதிர்வரும் இரண்டு வாரகாலத்துக்குள் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படும். அத்துடன், முன்பள்ளி ஆசிரியர்களின் தொழில்சார் டிப்ளோமா பாடநெறிக்கான சகல வசதிகளையும் ந.தே.மு செய்து கொடுப்பதற்கு உத்தேசித்துள்ளது.

மேலும், கிழக்கு மாகாணத்திலுள்ள முன்பள்ளிகளில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பில் உயர்மட்ட அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு செல்லவும் உள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

## விபத்தில் அறுவருக்கு காயம்






மூதூரில் இருந்து திருகோணமலை நோக்கி வந்த தனியார் பஸ்ஸொன்று லொறியுடன் மோதி விபத்துக்குள்ளானதில், ஆறுபேர் காயம் அடைந்து கிண்ணியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

திருகோணமலை, சீனக்குடா, பம்பரஸ் வளைவில் இடம்பெற்ற இவ்விபத்தில் படுகாயமடைந்த அறுவரில், லொறியின் சாரதியான சமீர சந்தன என்பவரும் பஸ்ஸில் பயணித்த இம்தியாஸ் மற்றும் சாரா வீவீ ஆகியோரும் மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

(நன்றி தமிழ்மிரர்)

## பராமரிப்புப் பணி நீர்ப்பாசனத் திணைக்களத்திடம்



கிழக்கு மாகாண நிர்வாக எல்லைக்குள் அமைந்துள்ள சிறிய நீர்ப்பாசனக் குளங்களின் நிர்வாக, பராமரிப்புப் பணிகளை அம் மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்திடம் ஒப்படைப்பதற்கான அவசர நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென மாகாண சபை உறுப்பினர் எம்.எஸ்.உதுமாலெப்பை தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சபை அமர்வு, திருகோணமலை மாவட்டத்திலுள்ள மாகாணசபை அலுவலகத்தில் தவிசாளர் சந்திரதாச கலப்பதி தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற போது, கிழக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.நடராசா "கிராமியக் குளங்களை புனரமைத்தல், மேற்பார்வை செய்வதற்கான பணிகளை மாகாண சபைக்கு வழங்க வேண்டும்" என்ற தலைப்பில் தனிநபர் பிரேரணையை முன்வைத்தார்.

இந்தப் பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

# மலைமுரசு MALAIMURASU இலங்கைச் செய்திகள்

## தேசிய கீதம் தமிழில் இசைக்கப்பட்டமை அரசியலமைப்புக்கு முரணானது

இலங்கையின் 68வது சுதந்திர தினத்தின் போது தமிழில் தேசிய கீதம் பாடப்பட்டமையானது, அரசியலமைப்புக்கு முரணானது என்றும் இந்த நடவடிக்கையின் மூலம் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளது என்றும் அறிவிக்குமாறு கோரி, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் சட்டமா அதிபருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு தொடர்பில் எதிர்வரும் ஜூன் 01ஆம் திகதியன்று கருத்திற்கொள்ளப்படும் என உயர்நீதிமன்றம் 17.03.2016 அன்று அறிவித்தது.

## சந்தேக நபர்கள் இருவர் வெளிநாட்டிற்கு தப்பியோட்டம்

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் கொலை வழக்கின் முதல் கட்ட விசாரணைகளின் பின்னர் தீர்ப்பை அறிவித்த நீதிபதி இதனை தெரிவித்தார். ரவிராஜ் கொலை வழக்கில் கடற்படை உறுப்பினர்கள் இரண்டு பேர், காவல்துறை அதிகாரி ஒருவர். மற்றும் கருணா குழுவை சேர்ந்த இரண்டு நபர்களுக்கு எதிராக வழக்கு ஒன்றை தாக்கல் செய்தனர்.

இந்நிலையில் சந்தேக நபர்களுக்கு எதிராக மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகைகளை தாக்கல் செய்வதற்கு போதிய ஆதாரங்கள் இருக்கின்றனவா என்பது குறித்து ஆராயும் முதற்கட்ட விசாரணை கடந்த சில மாதங்களாக நடைபெற்று வந்தது. இது தொடர்பில் தீர்ப்பை அறிவித்த மஜிஸ்ட்ரேட் நீதிபதி, சந்தேக நபர்களுக்கு எதிராக மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிக்கைகளை தாக்கல் செய்வதற்கு போதிய ஆதாரங்கள் இருப்பதாக தெரிவித்தார். இது தொடர்பில் சட்டமாஅதிபருக்கு அறிவித்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இந்த வழக்கின் சந்தேக நபர்களில் இரண்டு பேர் தற்போது வெளிநாடுக்கு தப்பியோடியுள்ளவர்கள் என நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ள காவல்துறையினர், அவர்கள் இருவரும் கருணா குழுவை சேர்ந்தவர்கள் எனவும் தெரிவித்துள்ளனர். வெளிநாட்டுக்கு தப்பியோடிய இருவரையும் கைது செய்யுமாறு நீதிமன்றம் சர்வதேச காவல்துறையினருக்கு உத்தரவு ஒன்றை பிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பிணை மனு ஒத்திவைப்பு



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் கொலை தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் தாக்கல் செய்த பிணை மனு மீதான விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, சந்தேகநபரான கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் விளக்கமறியலில் இருந்து மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்திற்கு நேற்று அழைத்துவரப்பட்டிருந்தார். எவ்வாறாயினும், குறித்த பிணை மனு மீதான விசாரணை முன்னெடுக்கப்படாத நிலையில், அதனை ஏப்ரல் மாதம் முதலாம் திகதி வரை ஒத்திவைக்குமாறு மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி வீ.சந்திரமணி உத்தரவிட்டார். அதற்கமைய, சந்தேகநபரான கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

## பசுமைக் குழு மூதூரில் உருவாகியது

மூதூரில் பசுமைக் குழு (Green Committee) என்னும் புதிய அமைப்பு தோற்றம் பெற்றுள்ளது. மூதூர் பிரதேச செயலகப்பிரிவிலுள்ள சம்பூர் பகுதியில் அமைப்படவுள்ள அனல்மின்சார நிலையத்தை நிறுத்துவதற்கான வழிவகைகளை மேற்கொள்வதை முதன்மையான நோக்கமாகக்கொண்டே இவ்வமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

மூதூர் பீஸ் ஹோம் அமைப்பின் ஏற்பாட்டில் செவ்வாய்கிழமை(15) அரபா நகர் ஜும்ஆப்பள்ளி வளாகத்தில் இடம்பெற்ற சமூக மற்றும் சன்மார்க்க அமைப்புகளின் ஒன்றுகூடலின் போதே இப்புதிய அமைப்பு உருவாக்கப் பட்டுள்ளது.

மூதூர் பிரதேசத்தில் வாழும் மக்களை உள்ளடக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள இந்த அமைப்பில் ஜம்மியதுல் உலமா சபையின் மூதூர் கிளை, கதீப்மார்கள் சம்மேளனம், பள்ளிவாசல்கள் சம்மேளனம்,மீனவர் சமாஜம், விவசாய சம்மேளனம், வர்த்தகர் சங்கம், பீப்பிள்ஸ் போரம், நபால்தீன் நற்பணி மன்றம், ஜம்மியதுல் ஷாஷாதிய்யா ஆகிய அமைப்புக்களோடு மூதூர் பீஸ் ஹோம் அமைப்பும் கைகோர்த்துள்ளது.

சம்பூரில் அமைக்கப்படவுள்ள அனல் மின்சாரதிட்டத்தினால் ஏற்படும் பாதிப்புக்கள் சம்பந்தமாக சகல தரப்பினருக்கும் விழிப்புணர்வூட்டுவதோடு அதனை இல்லாமற் செய்வதற்கு இறுதிவரை அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவதெனவும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

அச்சுதன்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU


# உலகச் செய்திகள்

வட கொரியா

## மீண்டும் அணுஆயுத பரிசோதனை

வடகொரியா 800 கிலோ மீற்றர் தூரம் சென்று தாக்கக் கூடிய மேலும் ஒரு ஏவுகணையை நேற்று கடலில் வீசி பரிசோதித்துள்ளதாக தென்கொரிய மற்றும் அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். எனினும் இது தொடர்பாக வடகொரியா எந்தவொரு கருத்துக்களையும் வெளியிட வில்லை. முதலாவது ஏவுகளை பரிசோதிக்கப்பட்ட பின்னர் இரண்டாவது ஏவுகணையை வடகொரியா பரிசோதித்துள்ளதாக அமெரிக்க பாதுகாப்பு ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

வடகொரியாவிற்கு எதிராக அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா புதிய பொருளாதார தடைகளை விதித்த நிலையில் வடகொரியா இரு புதிய ஏவுகணைகளை பரிசோதித்துள்ளது. இதேவேளை, வடகொரியா இரண்டாவதாக பரிசோதித்த ஏவுகணை அமெரிக்க ரேடார்களில் இருந்து மறைந்துள்ளதாகவும் இரண்டாவது ஏவுகணை தாக்கிய இலக்கின் தூரம், விழுந்த இடம் போன்ற விடயங்கள் அமெரிக்காவினால் கண்டுபிடிக்க முடியவில்லை எனவும் குறிப்பிடப்படுகிறது.



## வீடியோவை ஆராய்கிறது - ஜப்பான்

சிரியா

சிரியாவில் வைத்து கடந்த வருடம் ஜுன் மாதம் காணாமற்போன ஜும்பி யசூதா என்ற ஜப்பானிய ஊடகவியலாளர் ஒருவர் தன்னைக் காப்பாற்றக்கோரும் வீடியோவை ஜப்பானிய அதிகாரிகள் ஆராய்ந்து வருகின்றனர்.



ஆனால் தன்னை யார் தடுத்து வைத்துள்ளார்கள், அவர்களது கோரிக்கைகள் என்னவென்பதை அவர் கூறவில்லை. இந்த ஊடகவியலாளர் அல்-கைதாவுடன் தொடர்புடைய, அல்-நுஸ்ரா முன்னணி கிளர்ச்சிக் குழுவால் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக ஜப்பானிய ஊடகம் தெரிவித்துள்ளது. ஜப்பானிய பாதுகாப்பு செய்தியாளர் ஒருவரும் ஆலோசகர் ஒருவருமாக இருவர் இஸ்லாமிய அரசு என்று தங்களை அழைத்துக்கொள்ளும் தீவிரவாதிகளால் கடந்த வருடம் சிரியாவில் கழுத்து வெட்டப்பட்டுக் கொலை செய்யப்பட்டனர். இந்த விடயத்தைக் கையாண்ட விதம் தொடர்பில் ஜப்பான் அரசு மீது விமர்சனங்கள் எழுந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## கொடூரத்தின் உச்சத்தில் உள்ள ஐ.எஸ்.ஐ.எஸ்

உலக நாடுகளுக்கு அச்சுறுத்தலாக விளங்கி வரும் ஐ.எஸ் தீவிரவாதிகள், தங்களுக்கு எதிராக உளவு வேலையில் ஈடுபடுபவர்களை கொடூரமான முறையில் கொலை செய்து வருகின்றனர். இந்நிலையில் ஈராக் அரசாங்கத்துக்காக தங்கள் அமைப்பை உளவு பார்த்த 6 பேரை கொலை செய்யும் வீடியோவை அவர்கள் வெளியிட்டுள்ளனர். அவர்களில் ஒருவரின் கழுத்தில் வெடிகுண்டு இணைக்கப்பட்ட கம்பியின் மூலம் முடிச்சு போடும் தீவிரவாதிகள், வெடிக்குண்டை வெடிக்க செய்து கொலை செய்துள்ளனர்.

அடுத்ததாக அவர்களின் பிடியில் உள்ள இரண்டு காவல்துறையினரை தலையில் சுட்டுக்கொலை செய்கின்ற காட்சிகளும் அந்த வீடியோவில் அடங்கியுள்ளன. தங்கள் இயக்கத்தில் உள்ளவர்கள் பெயர்கள் மற்றும் விபரங்களை கசியவிட்ட குற்றம், அரசாங்கத்துக்கு ஆதரவாக செயல்பட்டது போன்ற குற்றங்களுக்காக அந்த ஆறு பேரையும் கொன்றதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.



## தன்னாட்சியை தொடங்கும் குர்திஷ்

சிரியா

சிரியாவில் ஐந்தாண்டுகளாக நிகழும் போரினை முடிவுக்கு கொண்டு வருவதற்கான பேச்சுக்கள் சுவிஸ்லாந்தில் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கையில், வடக்கு சிரியாவிலுள்ள குர்திஷ்களால் கட்டுப்படுத்தப்படும் பகுதிகளில் சமஷ்டி முறையிலான ஆட்சி அறிவிக்கப்படவுள்ளதாக குர்திஷ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். மேற்படி நகர்வின் மூலம், வடக்கு சிரியாவிலுள்ள, குர்திஷ்கள் தலைமையிலான தன்னாட்சிப் பிரதேசங்களும் சமஷ்டி ஆட்சி அலகு ஒன்றுக்குள் வரவுள்ளது.

இந்த நகர்வானது, நிச்சயமாக சிரியாவின் அயல் நாடான துருக்கியை ஆத்திரப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. சிரியாவில் அதிகரிக்கும் குர்திஷ் சக்தி காரணமாக, தனது நாட்டிலுள்ள குர்திஷ் சிறுபான்மையினமும் பிரிந்து செல்வது ஊக்குவிக்கப்படும் என துருக்கி அஞ்சுகிறது. இதற்கான அறிவிப்பு விரைவில் வெளிவரும் எனவும் தெரிவித்தார்.

## முஷாரப்பிற்கான தடை நீக்கம்

பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப் வெளிநாடுகளுக்கு செல்ல விதிக்கப்படிருந்த தடையை நீக்கி அந்நாட்டு உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இதற்கமைய அவர் டுபாயிலுள்ள வைத்தியசாலையில் சிகிச்சை பெற அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 72 வயதான அவர் மீதான தேசவிரோத வழக்கு விசாரணை கடந்த 2013 ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வருகிறது. அத்துடன் முன்னாள் ஜனாதிபதி பெனாசீர் புட்டோ படுகொலை தொடர்பிலும் அவர் மீது விசாரணை நடைபெற்று வருகிறது.

## "ஒபாமாவை சந்திக்க மகாராணியார் மறுப்பு"

ஐரோப்பிய கூட்டமைப்பில் உறுப்பினராக பிரித்தானிய நீடிப்பதா அல்லது தனியாக பிரிந்து செல்வதா என்பது தொடர்பான வாக்கெடுப்பு எதிர்வரும் யூலை மாதம் நடைபெற உள்ளது.

இந்நிலையில் பிரித்தானிய பிரதமரான டேவிட் கமெரூன் 'ஐரோப்பிய கூட்டமைப்பில் பிரித்தானிய தொடர்ந்து நீடிக்க வேண்டும்' என்பதையே விரும்புகிறார். இதை வரவேற்றுள்ள அமெரிக்க அதிபர் ஒபாமாவும் 'ஐரோப்பிய கூட்டமைப்பில் பிரித்தானியா தொடர்ந்து நீடிப்பது தான் சிறந்த முடிவு' எனக் கூறிவருகிறார்.

எனினும் ஐரோப்பிய கூட்டமைப்பில் இருந்து விலகி பிரித்தானியா தனியாக செயல்பட வேண்டும் என்பதையே மகாராணி விரும்புவதால், இது தொடர்பாக எதிர்க் கருத்து கூற வரும் ஒபாமாவை சந்திக்க மகாராணி விரும்பவில்லை என தெரிகிறது.

இது தொடர்பாக அடுத்தமாதம் பிரித்தானிய நாட்டிற்கு ஒபாமா வருகை தந்து பிரதமரை நேரில் சந்திக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், ஐரோப்பாவில் நீடிப்பதால் பிரித்தானியாவிற்கு என்னென்ன [illegible] ஏற்படும் என்பது [illegible] விரிவாக பொதுமக்களிடம் பேச வேண்டாம் எனவும் ஒபாமாவுக்கு அரண்மனை அதிகாரிகளால் ஏற்கனவே ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் பரபரப்பு தகவல்கள் வெளியாகியுள்ளன.



## வருமானம் குறைவாக பெறுவோர் வெளியேற்றப்படுவர்

குறைந்தபட்ச ஆண்டு வருமானமாக 35,000 பவுண்ட்ஸினைக் கொண்டிராதவர்களை நாட்டை விட்டு வெளியேற்ற பிரிட்டன் அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதனால், அங்குள்ள வெளிநாட்டவர்கள் இலட்சக்கணக்கானோர் பாதிக்கப்படுவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. வெளிநாடுகளில் இருந்து பிரிட்டன் சென்று குடியேறுபவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்ற நிலையில், குடியேற்றவாசிகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இத்திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்த நடைமுறை அடுத்த மாதம் முதல் அமலுக்கு வரவுள்ளது. ஐரோப்பிய ஒன்றியம் தவிர்ந்த ஏனைய நாட்டினர், குறிப்பாக 10 ஆண்டுகளுக்கும் குறைவாக பிரிட்டனில் வசிப்பவர்கள் 35,000 பவுண்ட்ஸினை ஆண்டு வருமானமாக கொண்டிருக்காத பட்சத்தில், இந்த நடைமுறையின் அடிப்படையில் அவர்களுக்கு நிரந்தர வதிவிட உரிமம் வழங்காமல் நாட்டை விட்டு வெளியேற்றப்படுவார்கள் என கூறப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவில் இருந்து தமிழர்களுக்கு.... மக்கள் முரசு

➡ வித்தியா சாகரன்




அதாவது அவசரமாக உதவிக்காக ஒரு Helicopter தரையிறக்கத் தேவைப்பட்ட பொழுது பச்சைப்பசேல் என்ற வெளியில் இறக்கிவிட்டார்கள். ஆனால் இறக்கிய Helicopters அப்படியே நீரில் மூழ்கிப் போனது. பின்னர்தான் அமேரிக்கா புரிந்து கொண்டது அது வியட்நாமியர்களால் மிகவும் நுணுக்கமாக உருமறைக்கப்பட்டுள்ளது தெளிவானது. இந்த இடத்தில் ஒன்றைக் கவனிக்கலாம். "உருமறைப்பு" என்கின்ற விடயம். போரியலில் அல்லது இராணுவத் துறையில் மிகவும் பிரதானமான முக்கியமான விடயம். "உருமறைப்பு" என்கின்ற விடயத்தில் அதியுச்ச அக்கறை கொள்ளாத எந்த இராணுவமும் போரில் வென்றதாக சரித்திரம் இல்லை. இராணுவத்தின் சீருடை அலங்காரம் என்பது கூட இந்த அடிப்படைத் தத்துவத்தில் இருந்தே தொடங்கியது என்பது உண்மை. இன்றைய உலகநாடுகள் அதாவது வல்லரசுகள் உட்பட இந்த வியட்நாமியர்களின் போர்த் தந்திரங்களை தமதளவில் என்பதையும் கடந்து உலகளவில் அவற்றை ஆய்விட்குட்படுத்தி தமது இராணுவத் துறைக்குள் தனியான கற்கை நெறிகளாக வைத்து இருக்கின்றன. வியட்நாமியர்கள் இந்த உலகுக்கு ஒரு வழிகாட்டிகளாகவே ஆகிப் போனார்கள்.

அடுத்தது, வியட்நாமியர்களின் முக்கியமான போர்த்தந்திரங்கள் சிலவற்றைப் பார்க்கலாம். ஒரு கட்டமைக்கப்பட்ட பெரும் வல்லரசு இராணுவத்திற்கு எதிராக, அவர்களின் ஆயுத ஆள் பலங்களுக்கு முன்னால் மனோபலம் என்கின்ற ஒன்று மட்டுமே வெற்றியடைய முடியும். இதனை நூற்றுக்கு நூறு நிரூபித்துக் காட்டியவர்கள் முதலில் வியட்நாமியர்கள்தான். ஏனென்றால் மரபுவழி இராணுவத்தை வடக்கு வியட்நாம் கொண்டிருந்தாலும், தெற்கு வியட்நாம் நோக்கி அவர்கள் மிகவும் அவதானத்துடன் நகர்ந்தாலும், வியட்காங் போராளிகள் குழு மேற்கொண்ட அசாதாரண போர் நடவடிக்கைகள்தான் வியட்நாமியர்களின் விடுதலைக்கு வலுச் சேர்த்தது என்றால் மிகையில்லை.

கெரில்லா பாணியிலான (Guerrilla warfare) அதாவது கட்டமைக்கப்படாத போர் நெறிகளை, அமெரிக்காவிற்கு எதிராக மிகவும் நுணுக்கமாகப் பயன்படுத்தி வியட்நாமியர்கள் வெற்றி கண்டார்கள். இந்த Guerrilla warfare என்பதற்குள் பதுங்கித் தாக்குதல் (ambushes), நாசவேலை (sabotage), திடீர் தேடுதல் (raids), சிறு தாக்குதல்கள் (petty warfare), தாக்கிவிட்டு தப்பித்தல் (hit-and-run) ஊடுருவி நகர்தல் (mobility) போன்ற போர் தந்திரோபாயங்களை வெகு இலாவகமாக கையாண்டு வெற்றி பெற்றவர்கள் இந்த வியட்நாமியர்கள். அதனுடன் கண்ணிவெடிகள், பொறிவெடிகள் (land mine) இவற்றையும் சந்தர்ப்பங்களில் பயன்படுத்திக் கொண்டார்கள். அதிலும் ஒரு போரின் திசையை மாற்றியமைக்கக் கூடிய வல்லமை இந்த பதுங்கிச் சுடுபவர்களுக்கே (Snipers) உரித்தானது. இந்த பதுங்கிச் சுடுபவர்களால் அமெரிக்க இராணுவம் சின்னாபின்னமாக்கப்பட்டதை அமெரிக்கா எந்த அவமானமும் இன்றி வரலாற்றில் பதிந்து வைத்து இருக்கிறது.

மேலும், வியட்நாமின் காடுகளுக்குள் நகர்ந்து கொண்டிருந்த அமெரிக்கா இராணுவத்திற்கும், வியட்நாம் போராளிகளுக்கும் இடையிலான போர் இடைவெளி சில அடி தூரம் மட்டுமே. அமெரிக்கர்களின் அருகிலேயே, மரங்களோடு மரங்களாக, பற்றைகளாக, நிலத்தின் துளைகளுக்குள், நீரின் பரப்புகளில் என்று எங்கும் பரவி இருந்தார்கள். சொல்லப்போனால் போக விட்டு புற மண்டையில் அடித்தார்கள் என்றே சொல்லலாம். கதிகலங்கிப் போனது அமெரிக்க இராணுவம். நூறு நூறாக அமெரிக்கா இராணுவம் எந்த ஒரு நியாயமான காரணமும் இன்றி வேறொரு மண்ணில் செத்து விழுந்து கொண்டிருந்தார்கள். காயப்படுத்தப்பட்டு அமெரிக்காவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுக் கொண்டிருந்தார்கள். சவப்பெட்டிகள் வந்து கொண்டிருந்தன.

காத்திருங்கள் ...

# நிகழ்வுகள்


## மகோற்சவப் பெருவிழா

➡ சேனையூர் நிருபர்

திருகோணமலையில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற கோவிலான ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானத்தில் அம்பாளுக்கு மகோற்சவப் பெருவிழா இடம்பெற்று வருகின்றது.

மிகவும் சக்தி வாய்ந்த கோவிலான இக்கோவிலில் அம்பாளுக்கு விசேட பூசைகளும், அபிஷேகங்களும் இடம்பெற்று வருகின்றது.

அடியார்கள் பலரும் கலந்து கொண்டு அம்பாளுக்கு நேர்த்திக் கடன்களை செலுத்தியவாறும் மிகவும் பக்தியுடன் அம்பாளின் இஷ்ட சக்திகளை பெற்றேகுகின்றனர். எதிர்வரும் 22ம் திகதி அம்பாளின் தேர்த்திருவழா இடம்பெற உள்ளமை குறிப்பிடத்தக்கது.



## நினைவுத் தொகுதி திறப்பும் கல்லூரி சஞ்சிகை "மகுடம்" வெளியீடும்

➡ கதிரவன்

ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லுரிரியில் கடந்த 12.03.2016 அன்று கல்லூரியின் முன்னை நாள் அதிபரான மறைந்த திருமதி திலகவதி ஆறுமுகம் அவர்களின் நினைவுத் தொகுதி நிகழ்விற்கு பிரதம அதிதியாக கலந்து கொண்ட கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் கௌரவ சிங்காரவேலு தண்டாயுதபாணி அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது.

அத்துடன் அன்றைய தினம் கல்லூரியின் சஞ்சிகை ஒ்னறும் வெளியிடப்பட்டுள்ளது.

நிகழ்விற்கு தலைமை தாங்கிய பாடசாலை அதிபர் திருமதி சுலோசனா ஜெயபாலன் அவர்களினால் கல்வி அமைச்சர் அவர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டதுடன் முதல் பிரதியும் அவரிற்கு வழங்கி வைக்கப்பட்டது.

அத்துடன் பாடசாலை மாணவர்களின் பரத நாட்டிய நிகழ்வும் பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிமுரசு

## வெள்ளாடுகளை அழைக்கும் வெள்ளை ஓநாய்கள்!

பணிப்பெண்ணே பணிப்பெண்ணே
தயக்கம் ஏனடி - எங்கள்
பணியதனின் பெருமைகளை
அறிந்து கொள்ளடி

முகவ ராகத்தானே நாமும்
செயற்படு கின்றோம் - உங்கள்
முன்னேற்றம் கருதித் தானே
பாடு படுகின்றோம்

ஐந்து சதிலாப மின்றி
பயிற்சி தருகின்றோம் - உங்கள்
சந்ததிகள் மீட்சி பெற
நாங்கள் உழைக்கின்றோம்

பொது நலமே எங்களது
நோக்கந் தானடி - ஒரு
பொய்பிரட்டு ஏது மில்லை
எங்கள் பணியிலே

ஒட்டகமாய் வாழ்வதற்கு
பழகிக் கொள்ளடி - அது
உறக்க மின்றி பாலையிலே
உழைக்க வில்லையா?

பெட்டகமாய் பெண்க ளென்றும்
வாழ லாகுமா - உங்கள்
கட்டழகை 'கட்டி' வைத்து
கண்ட தென்னடி?

பணிப் பெண்ணாய் பிறதேசம்
பறந்து செல்லலாம் - வா
பணத்தினிலே தினம் புரண்டு
சொர்க்கம் காணலாம்.

--ஷெல்லிதாசன்--

## போயிற்றாமே?

-- தாமரைத்தீவான் --
[ஈச்சந்தீவு, கிண்ணியா]

எழுத்தாளரானவர்கள்
எழுதிய நூல்கள் எல்லாம்
எழுத்தல - பாவாணர்நூல்
எழுதிய பின்னர் பார்த்தால்...?

வள்ளுவர் எழுத்தைப் போன்று
வாழ் எழுத்தாளர் எல்லாம்
உள்ளுவ தெல்லாம் உள்ளி
உயர்வுற எழுதவில்லை!

வடமொழி வரலாறாய்ப் பா
வாணரின் நூலைப் போன்று
அட, கெடுவாய் யாராலும்
ஆக்கிட முடியாதையா!

பாவாணர் போனதாலே
பைந்தமிழ் வருந்துதையோ?
நாவார்ந்த சுவையில் பாதி
நலமதும் போயிற்றாமே!

## வாட்டி என்னை



அத்தை பெற்றெடுத்த
அழகு மயில் சித்திரமே
உன்னை நினைத்து நானும்
உருகுகின்றேன் தினம் தோறும்
மெல்லிய உடுப்பணிந்து
மேனியெல்லாம் காட்டுகின்றாய்
என்னால் பொறுக்க முடியவில்லை
ஏந்தியளை
என்ன செய்ய சொல்லுகின்றாய்
அன்ன நடையழகி நீயோ
ஆயிரம் பூ மணத்தழகி
விண்மீன்கள் போல்வந்து
வாட்டி என்னை எடுக்காதே

--சீ.என்.துரைராஜா--

## புலராத பொழுதுகள்




-- சேனையூர் இரத்தினா --
பொன்னாவரை நூலிலிருந்து

தினம் விடியலுக்காய்
ஏங்கும்
இதயங்கள்தான் எத்தனை
வயது வந்தும்
வாழ்வு கிடைக்காதோர்
உயர் கல்வி கற்றும்
உத்தியோகத்திற்காய்
தினம் ஏங்குவோர்
உறவுகள் பல இருந்தும்
தனிமையை வாழ்வாக்கியோர்
அரசு தீர்வுகள் இன்றி
தினம் பேச்சிலே
நாட்களாகத் தீர்த்தவர்கள்
ஆசை இருந்தும்
அன்பினைப் பெறாது
ஆண்டுகள் பலவற்றைத்
தொலைத்தவர்கள்
பிள்ளைகள் இருந்தும் ஏதிலியாய்
இறுதி நாளை எதிர்ப்போர்
காத தூரத்தில்
சொந்த ஊர் இருந்தும்
சேர முடியாது
கனவுகளாகச் சுமந்தவர்கள்
உறவுகள் பக்கத்திலிருந்தும்
உணர்வுகளோடு எதிர்பார்ப்பே
வாழ்வாக கழித்திருப்போர்
இன்று விடியும்
நாளை புலரும் என்று
நாட்கள் நகர்ந்ததேயன்றி
ஏமாற்றமும்
எதிர்பார்ப்புக்களுமே
எஞ்சியவையாயிற்று
இவர்கள் வாழ்வில் - இருந்து
விடியலுக்காய்
விழித்திருக்கின்றார்கள்
தினம் ஏக்கங்களைச்
சுமந்த இதயங்களோடு....

## ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான - மகோற்சவ திருவிழா

--- சேனையூர் நிருபர் அ.அச்சுதன்



ஈழத்திரு நாட்டின் தெட்சன கைலாயம் என வர்ணிக்கப்படும் அடிக்கொரு சிவலிங்கம் உள்ள புண்ணிய சிவ பூமியான திருகோணமலையில் நகரத்தின் இதயம் போல் விளங்குவது அருள் மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயமாகும். இவ்வாலயத்தில் இருந்த வண்ணமே வரலாற்று சிறப்பு மிக்க எம் பெருமான் திருக்கோணேஸ்வரர் ஆலயத்தை தரிசிக்கும் சிறப்பும் இவ்வாலயத்திற்கு உள்ளது. இச்சிறப்பு பொருந்திய அன்னை பத்திரகாளிக்கு ஆண்டு தோறும் இடம்பெறுகின்ற பிரமோற்சவ நிகழ்வானது திருகோணமலையில் வாழும் இந்துக்கள் மத்தியில் புத்துணர்ச்சி-யையும் எழுற்சியையும் ஏற்படுத்தி விடும் என்றால் அது மிகையாகாது.

அவ்வாறானதொரு பிரமோற்சவம் இவ்வாண்டு 2016 மார்ச் மாதம் 13ம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி உள்ளது. அன்னையின் திருவருள் திருகோணமலையில் உள்ள எந்த ஒரு ஆலயத்திற்கும் இல்லாத ஒரு தனிச் சிறப்புகள் பல அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்திற்கு உள்ளது.

அவற்றில் மிக முக்கியமானது இவ்வால-யத்தில் வழிபடும் பக்தர்கள் இன மத வேறுபாடின்றி அனைவரும் பயம் கலந்த பக்தியுடன் இந்த ஆலயத்தில் அம்பாளை வழிபடுவது ஒரு சிறப்பாகும்.

அவ்வாறு பயபக்தியுடன் அனைத்து மதத்தவராலும் வழிபடும் அளவிற்கு இந்த ஆலயத்தில் என்ன நேர்ந்துள்ளது என பார்க்க இவ்வாலத்தின் வரலாறு தொடர்பான நாம் சற்று அறிந்திருக்க வேண்டும் அல்லவா?

இவ்வாலயம் உருவாகிய காலம் தொடர்பாக திட்டவட்டமாக கூறமுடியா-விட்டாலும் இவ்வாலத்தில் உள்ள கல்வெட்டுக்கள் மற்றும் விக்கிரகங்-களை வைத்து பார்க்கும் போது முதலாம் இராஜேந்திர சோழனுடைய 1100ம் ஆண்டு காலப்பகுதியில் இவ்வாலயம் மிகவும் சிறப்புற்று விளங்கியதாக பல்வேறு வரலாற்று நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே அவ்வாண்டிற்கு முற்பட்ட ஆலயமாக இவ்வாலயம் இருந்திருக்க வேண்டும்.

மேலும் இவ்வாலயம் தொடர்பாக இன்றும் மிகவும் வயதான எனது பாட்டன் பூட்டன்மார்கள் குறிப்பிட நான் கேட்டிருக்கிறேன் மிகவும் உக்கிரமாக தற்சுருவமாக பேசிய தெய்வம் இந்த பத்ரகாளி அம்பாள். யாருடன் விளையாடினாலும் இவ்வாலய அம்பாளிடம் விளையாட்டு விட முடியாது என்று கூற நான் கேள்வியுற்றுள்ளேன். இதற்கு பல ஆதாரமான சம்பவங்களையும் சொல்லியிருந்தனர். மேலும், பல வரலாற்று நூல்களிலும் இவை எழுத்து வடிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறான ஓரிரு சம்பவங்களையும் நாம் பாரக்கலாம்.

சிம்ம வாகனம் ஒன்றை ஏற்றிக் கொண்டு இந்தியாவில் இருந்து வந்த கப்பல் ஒன்று இந்து சமுத்திரத்திலே அம்பாளின் ஆலயத்திற்கு நேரே பழுதடைந்து அந்த இடத்திலேயே நின்றுள்ளது. அன்றிரவு நங்கூரம் இடப்பட்டு அங்கேயே நின்றபோது கப்பலின் அதிகாரி கண்ட கனவில் பிறப்பிக்கப்பட்ட கட்டளைக்கு அமைய அந்த சிம்ம வாகனம் இவ் ஆலயத்திற்கு கொண்டு வரப்பட்டு ஆலயத்தில் சேர்த்ததன் பின்னரே கப்பல் ஓடத் தொடங்கியதாகவும் அறியப்படுகிறது. இந்த சிம்ம வாகனம் இன்றும் இவ்வாலயத்தில் உள்ளது.

மேலும் சுமார் நானூறு ஆண்டு-களுக்கு முன் மேலும் இவ்வாலயத்தின் மீது பய பக்தியை ஏற்படுத்தும் இன்னுமொறு சம்பவமும் இடம் பெற்றுள்ளது.

இவ்வாலயத்தன் முன் அனாச்சாரமாக நடந்து கொள்ள அனைவரும் பயப்படும் சம்பவம் இது தான். இவ்வாலய வீதியில் மக்கள் சென்று வரும் பாதையாக இருந்த போது யாவகப்பெண் ஒருவர் அம்பாளை பொருட்படுத்தாது தலைவிரி கோலமாக சென்ற போது அவருடைய கழுத்து திரும்பியதாகவும் அதற்கு பிரயாச்சித்தமாக அவருடைய தலைமுடியை கத்தரித்து ஆலயத்திற்கு வழங்கிய பின்னர் அவர் குணமடைந்-தாகவும் கர்ண பரம்பரை கதை ஒன்று உலாவுகிறது. ஆயினும் அந்த தலைமுடியானது ஆலயத்தில் இடம் பெறும் மகிடா சூட கம்காரத்தின் போது அம்பாளின் சடைமுடியோடு கட்டப்-படுவது இன்றும் வழக்கத்தில் உள்ளது.

இவ்வாறான சிறப்பு பொருந்திய அம்பாளின் பிரமோற்ஸவ திருவிழா நிகழும் மங்களகரமான மன்மத வருடம் மாசி மாதம் 30ம் நாள் அதாவது 13.03.2016 ஞாயிற்றுக் கிழமை அன்று காலை 8.00 மணியளவில் கொடியேற்றம் இடம்பெற்று தொடர்ந்து பங்குனி மாதம் 9ம் நாள் 22.03.2016 செவ்வாய்க்கிழமை காலை 08.00 மணிக்கு இரதோற்சவமும் பங்குனி மாதம் 10ம் நாள் 23.03.2016 புதன்கிழமை உதயத்தில் தீர்த்தோற்சமும் இரவு கொடியிறக்கமும் இடம் பெறவுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிறிலங்கா : போர்க் குற்றவாளிகளின் கூடாரம்

## அவுஸ்திரேலிய ஊடகம்

நித்தியபாரதி
www.puthinappalakai.net



மேற்குலகின் அதிகாரத்துவ நாடுகளான அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் அவுஸ்திரேலியா போன்ற நாடுகள், தமது சொந்த பூகோள-அரசியல் நலன்களை அடைந்து கொள்வதற்காகவே இலங்கைத் தீவு தொடர்பாக பொய்ப் பரப்புரை செய்கின்றன என்பது வெட்கம்கெட்ட செயலாகும்.

இவ்வாறு அவுஸ்ரேலியாவைத் தளமாகக் கொண்ட **Red Flag** ஊடகத்தில் **TREVOR GRANT** எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். இதனைப் புதினப்பலகைக்காக மொழியாக்கம் செய்துள்ளவர் நித்தியபாரதி.

இராணுவ மனோநிலையுடன் கூடிய மிக்கொடிய ஆட்சி தற்போதும் சிறிலங்காவில் தொடர்வதாக அம்பலப்படுத்தப்பட்டுள்ளதானது, இந்தியா மற்றும் அமெரிக்காவின் மறைமுக உதவியுடன் ஆட்சிக்கு வந்த சிறிலங்காவின் புதிய அதிபர் மைத்திரிபால சிறிசேனவின் அரசாங்கம் தொடர்பான மக்களின் நம்பிக்கையை தகர்க்கச் செய்துள்ளது.

> முள்ளிவாய்க்கால் கரையோரத்தில் 70,000 வரையான அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்ட உள்நாட்டுப் போரானது ஏழு ஆண்டுகளுக்கு முன்னர் முடிவிற்கு வந்தாலும் கூட தமிழ் மக்கள் மீதான சிங்கள இராணுவத்தின் ஆக்கிரமிப்பு யுத்தம் இன்னமும் முடிவிற்கு வரவில்லை.

முள்ளிவாய்க்கால் கரையோரத்தில் 70,000 வரையான அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்ட உள்நாட்டுப் போரானது ஏழு ஆண்டுகளுக்கு முன்னர் முடிவிற்கு வந்தாலும் கூட, தமிழ் மக்கள் மீதான சிங்கள இராணுவத்தின் ஆக்கிரமிப்பு யுத்தம் இன்னமும் முடிவிற்கு வரவில்லை.

நீதி மற்றும் நல்லிணக்கம் போன்றன நாட்டில் நிலைநாட்டப்படும் என சிறிசேன வாக்குறுதி வழங்கிய போதிலும், இராணுவம் என்பது சிறிலங்கா அரசாங்கத்திற்கு இன்னமும் மிக முக்கிய ஒன்றாகக் காணப்படுகிறது.

குறிப்பாக 2009ன் ஆரம்பத்தில் சிறிலங்காவின் தரை, கடல் மற்றும் வான் படையினர் ஒன்றாக இணைக்கப்பட்டு தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்டும் எஞ்சியவர்கள் பாடசாலைகள், வைத்தியசாலைகள், கோயில்கள் மற்றும் திறந்த வெளிகளில் இடம்பெயர்ந்து பல்வேறு துன்பங்களை அடைந்த போது சிறிலங்கா இராணுவத்தினர் எவ்வளவு முக்கியமாக விளங்கினார்களோ அதேயளவு முக்கியத்துவத்தையே உள்நாட்டுப் போர் முடிவடைந்து ஏழு ஆண்டுகள் கடந்த நிலையிலும் தற்போதும் இவர்கள் பெற்றுக் கொள்கின்றனர் என்பதே உண்மை.

சிறிலங்காவில் இடம்பெற்ற யுத்த மீறல்களில் ஈடுபட்ட மேஜர் ஜெனரல் ஜகத் டயஸ் மற்றும் போர்க் கால இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா ஆகியோர் நாட்டின் முதன்மைப் பதவிகளில் அமர்த்தப்பட்டனர். உண்மையில் இவர்கள் இருவரும் சிறிலங்காவில் நீதி நிலைநாட்டப்பட்டிருந்தால் தற்போது ஹேக் நீதிமன்றின் சிறையில் அடைக்கப்பட்டிருப்பார்கள்.

மேஜர் ஜெனரல் ஜகத் டயஸ் இராணுவப் படைகளின் இரண்டாவது நிலைத் தளபதியாக நியமிக்கப்பட்டதுடன், பீல்ட் மார்சல் நிலைக்குத் தரமுயர்த்தப்பட்ட சரத் பொன்சேகா கடந்த மாதம் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டுப் பின்னர் அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தீவிர யுத்த மீறல்களில் ஈடுபட்ட சிறிலங்கா இராணுவத்தின் முதனிலைத் தளபதிகளாகச் செயற்பட்ட டயஸ் மற்றும் பொன்சேகா ஆகிய இருவரும் 'போர்த் தவிர்ப்பு வலயத்தில் தஞ்சம் புகுந்திருந்த 300,000 தமிழ்ப் பொதுமக்கள் மீதான திட்டமிட்ட தாக்குதல்களுக்குப் பொறுப்பானவர்களாவர்.

சிறிலங்கா இராணுவத்தின் 57வது பிரிவின் கட்டளைத் தளபதியாகச் செயற்பட்ட டயஸ், போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பின்னர் ஜேர்மனிக்கான சிறிலங்காத் தூதராக நியமிக்கப்பட்டார். இவர் மீதான யுத்தக் குற்றச்சாட்டுக்களை சுட்டிக்காட்டிய அனைத்துலக சமூகமானது இவர் மீது போர்க் குற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும் என அழுத்தம் கொடுத்ததைத் தொடர்ந்து இவர் இவரது இராஜதந்திரப் பதவியை இழக்க வேண்டியேற்பட்டது.

இதுமட்டுமல்லாது, இவர் மீதான போர்க் குற்றச்சாட்டுக்கள் காரணமாக அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் அவுஸ்திரேலிய அரசாங்கங்கள் தமது நாடுகளுக்கான நுழைவு விசாவை வழங்க மறுத்தன. டயஸ் மீது அனைத்துலக சமூகத்தால் யுத்தக் குற்றம் சுமத்தப்பட்ட போதிலும், தீவிர சிங்களவர்கள் மத்தியில் யுத்தக் கதாநாயகனாக இவர் நோக்கப்படுகிறார்.

சிறிலங்காவின் முன்னாள் அதிபர் மற்றும் இனவாத சிங்களவர்கள் மத்தியில் டயஸ் ஒரு கதாநாயகனாகத் திகழும் அதேவேளையில், போருக்குப் பின்னான காலப்பகுதியில் பொன்சேகா பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்.

குறிப்பாக இவர் 2010ல் இடம்பெற்ற அதிபர் தேர்தலில் முன்னாள் அதிபர் ராஜபக்சவை எதிர்த்துப் போட்டியிட்டார். இதனால் இவரது இராணுவ நிலை, பதக்கங்கள், விருதுகள் போன்றன முன்னாள் அதிபர் ராஜபக்சவின் அரசாங்கத்தால் பறிமுதல் செய்யப்பட்டதுடன் இவர் இரண்டு ஆண்டுகளுக்கும் மேல் சிறைவாசம் அனுபவித்தார்.

யுத்தத்தின் இறுதியில் சரணடைந்த புலி உறுப்பினர்களைக் கொலை செய்யுமாறு பாதுகாப்புச் செயலரும் அதிபரின் சகோதரருமான கோத்தபாய ராஜபக்ச உத்தரவிட்டிருந்ததாக சரத் பொன்சேகா நேர்காணல் ஒன்றில் தெரிவித்திருந்தார். இதற்காக இவர் மேலும் மூன்று ஆண்டுகள் சிறைவாசம் அனுபவிக்க வேண்டும் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. எனினும், சரத் பொன்சேகா அழுத்தத்தின் காரணமாக இக்கூற்றைப் பின்வாங்கியதால் தனது சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

தற்போது சரத் பொன்சேகா நாடாளுமன்றில் அங்கம் வகிப்பதுடன், பிராந்திய அபிவிருத்திக்கான அமைச்சராகவும் சத்தியப்பிரமாணம் செய்துள்ளார். எனினும் இவர் தனது கைகளில் 70,000 வரையான அப்பாவித் தமிழ் மக்களின் இரத்தக்கறையைக் கொண்டுள்ளார் என்பதை அனைத்துலக ஊடகங்களில் ஒருபோதும் கூறமுன்வரவில்லை.

இந்த விடயம் சிறிலங்காவின் புதிய அதிபருக்கும் பொருந்தும். ஏனெனில் இவர் தனது தேர்தல் பரப்புரையின் போது போரின் இறுதிக்-கட்டத்தில் பதில் பாதுகாப்பு அமைச்சராகச் செயற்பட்டதாக தற்புகழ்ச்சியுடன் தெரிவித்தார். அத்துடன் ராஜபக்சாக்கள், பொன்சேகா, டயஸ் மற்றும் சிறிலங்கா அரசாங்கத்தின் மூத்த அதிகாரிகள் மற்றும் இராணுவ அதிகாரிகள் போன்று சிறிசேனவும் போர்க் காலத்தில் கட்டளைகளை வழங்கியதன் மூலம் போர்க் குற்றங்களில் ஈடுபட்டார் என்பதே உண்மை.

இந்நிலையில் அனைத்துலக நீதிபதிகள் அடங்கிய போர்க் குற்ற விசாரணைக் குழுவை அமைப்பதற்கு தடையாக சிறிசேன உள்ளார் என்பது மாதங்களின் முன்னர் இடம்பெற்ற ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் அமர்வின் போது அனைத்துலக நீதிபதிகளை போர்க் குற்ற விசாரணைக்கு அனுமதிப்பதாக சிறிசேன தெரிவித்திருந்தார். ஆனால் தற்போது இவர் தன்னால் வழங்கப்பட்ட வாக்குறுதியை நிராகரிக்கிறார் என்பதிலிருந்து இவரது நிலைப்பாடு என்ன என்பதை விளங்கிக் கொள்ள முடியும்.

**சிறிலங்காவின் அதிபரின் பெயரில் மாற்றம் ஏற்பட்டுள்ளதே தவிர, வேறெதிலும் மாற்றங்கள் ஏற்படவில்லை என்பதே உண்மை.**

சிறிசேன தற்போது தான் ஓடி ஒளிந்து கொள்வதற்கான துளை ஒன்றைத் தேடி ஓடிக்கொண்டிருக்கிறார்.

இதைவிட, மேற்குலகின் அதிகாரத்துவ நாடுகளான அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் நடுத்தர அதிகாரங்களைக் கொண்ட அவுஸ்திரேலியா போன்றன சிறிலங்காவில் சிறந்த மாற்றங்கள் ஏற்படுவதாக அனைத்துலக சமூகத்திற்கு பொய்யுரைத்து வருகின்றன. இந்த நாடுகள் தமது சொந்த பூகோள -அரசியல் நலன்களை அடைந்து கொள்வதற்காகவே இலங்கைத் தீவு தொடர்பாக பொய்ப் பரப்புரை செய்கின்றன என்பது வெட்கம்கெட்ட செயலாகும்.

அமெரிக்கா போன்ற நாடுகள் சிறிலங்கா மற்றும் அதன் பிராந்தியம் மீதான சீனாவின் செல்வாக்கைக் குறைப்பதற்காகவும் அவுஸ்திரேலியாவானது தனது கடற்பரப்பிற்குள் தமிழ்ப் புகலிடக் கோரிக்கையாளர்கள் நுழைவதைத் தடுப்பதற்காகவுமே சிறிலங்கா தொடர்பாக பொய்ப் பிரச்சாரம் செய்கிறார்கள். போர்க் குற்றவாளிகளைத் தாம் பாதுகாக்கிறோம் என்பதை இந்த நாடுகள் கவனத்திற் கொள்ளவில்லை.

**70 ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் மக்களுக்கு எதிராக திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் இனப்படு கொலைக்கு அனைத்துலக சமூகமும் தனது ஆதரவைத் தொடர்ந்தும் வழங்கி வருகிறது என்பதற்கு இது பிறிதொரு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாழ்வியல் 96**

'வாயிருந்தால் வங்காளம் போகலாம் என்று ஒரு பழமொழி உண்டு. அப்படி ஒரு சக்தி வாய்க்கு உண்டு! கஷ்டமோ, நஸ்டமோ... இன்பமோ, துன்பமோ... வெற்றியோ, தோல்வியோ... எதுவாக இருந்தாலும் எமது வாழ்க்கையை சோடை போகாதபடி ஓட்ட முடிகின்றது என்றால் அதற்கு பிரதான காரணம் வாய்தான்.!

அப்படிப்பட்ட வாயின் வெற்றிக்கு அடிப்படை காரணம் என்னவென்று ஆராய்ந்தால் அது எமது மனம் தான். 'வாய் ஒன்று சொல்ல மனம் ஒன்று

வைத்துக்கொண்டு வீட்டுக்கு கல் எறியும் விழும். அயலவரின்ரை ஒத்தாசை இல்லாமல் அதெல்லாம் நடக்காது.

'உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு.' என்று வள்ளுவர் சொன்னவர். நாங்களும் அப்படித்தான் சொல்லுறம். ஆனால் மனம் அப்படி சொல்லாது.!

'நான் என்னுடைய நண்பனுக்காக அவனுடைய வீட்டிலை கூலிவேலையும் செய்வன். மதில் கட்டுறது முதல் வீட்டிற்கு 'பெயின்ற்' அடிக்கிறவரைக்கும் எல்லா ஒத்தாசையும் கொடுப்பன். எங்கடை வீட்டிலை ஒரு உதவி ஒத்தசை தேவை என்றால் நண்பன் மெதுவாய் மாறிவிடுவான். நண்பன் வசதியானவன். எனது தங்கையின்ரை சாமத்திய




(வி.என்.சந்திரகாந்தி)

புடவை என்று எதிர்பார்ப்பா... சில வேளை யோசித்தால் ஏன்தான் மாமியின்ரை உதவியை பெற்று வெளிநாட்டுக்கு வந்தனோ என்று இருக்கும்..."

எம்மை இந்த உலகத்திற்கு அறிமுகப்படுத்தியவர்கள் எமது பெற்றோர்கள். எமது வாய் அவர்களை பாராட்டாத

# மாறுபட்ட மனோநிலைகள்



நினைக்கும்' என்பதுதான் தத்துவம்.. அந்த சுவாரசியமான அனுபவத்தை பிறரும் எம்முடன் பகிர்ந்து கொண்டால் எப்படி இருக்கும் என்று ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

சரி பார்ப்போம்.... "ஆசிரியர்கள்" தான் எமது முன்னேற்றத்திற்கு வழிகாட்டிகள். அதனை எவரும் வாயால் ஏற்றுக் கொள்வர். ஆனால் மனம் அப்படி ஏற்றுக் கொள்ளாது....

'இன்று நான் இந்த நிலைக்கு வந்ததற்கு காரணம் ஆசிரியர்கள் என்று எப்படி சொல்வது. என்னுடைய முயற்சி இல்லாமல் எதுவும் நேர்ந்திருக்காது... இரவு பகல் என்று பாராமல் நித்திரை முழித்ததின் பயன் தான் எனது வெற்றி... ஆசிரியர்களுக்கு தாம் படித்தது எல்லாம் மறந்துவிட்டது. ஒரு கேள்விக்கு மறுமொழி சொல்ல பெரும் கஷ்டப்படுவர். நான் எத்தனை பொது நூலகங்களில் ஏறி இறங்கி அறிவை வளர்க்க வேண்டியிருந்தது. விளையாட்டுப் போட்டி... தமிழ் தினபோட்டி கலைநிகழ்ச்சி என்றால் மட்டும் போட்டி போட்டுக்கொண்டு வேலை செய்வர். "தனியார் கல்வி நிறுவனங்கள் காசுக்கும் கலாச்சாரத்திற்கும் கேடு" என்று பிரச்சாரம் வேறு.. எங்கடை முன்னேற்றத்திலை அக்கறை கிடையாது!."

இனி அயலவருடைய ஒத்தாசை இல்லாமல் நாம் ஒரு வீட்டில் தனித்து வாழ்வது என்பது அசாத்தியம். நல்ல அயலவரால் வீட்டின் பெறுமதி கூட உயரும் வாய்ப்புண்டு. எனவே நாம் எப்போதும் எமது அயலவர் பற்றி புகழ்பாடவே செய்வோம். ஆனால் மனதில் வேறு எண்ணங்கள் ஓடும்...

"வரவர எங்கடை அயலவர் தலை நகரிலை வாழ்கிறவர்கள் மாதிரி வந்துவிட்டார்கள். பக்கத்து வீட்டிலை யார் யார் இருக்கிறார்கள்... அங்கு என்ன நடக்கிறது என்று எதையுமே கருத்திற்கு எடுக்காத நிலைதான் நீடிக்கின்றது. தற்செயலாக வீட்டில் நாம் எவரும் இல்லாத நேரத்தில் தபால்காரன் வந்து "பெல்" அடி அடி எண்டு அடிச்சாலும் எட்டி ஏன் என்று கேட்க ஆளில்லை. சில வாரங்களுக்கு முன்னர் சாமத்திலை யாரோ கள்வர் எங்கடை வீட்டு கதவை திறக்க முயற்சித்தவங்கள். அன்று வீட்டில் பெண்கள் தான் அதிகம் பேர். 'கள்ளன் கள்ளன்' என்று பயத்திலை விடிய விடிய கத்தினவை. எந்த ஒரு அயலவரும் ஏன் என்று கேட்கவில்லை. இதுபோக, ஏதும் மனத்தாங்கலை

வீட்டிற்கு ஒரு இலட்சம் கடன் தந்தவன். நாளும் இழுபட்டு போய்விட்டதுதான். நான் என்ன பணத்தை வைச்சுக் கொண்டா திருப்பிக் கொடுக்காமல் இருக்கிறன்."

குல தெய்வம் என்று ஒன்று எல்லோருக்கும் இருக்கும். நாம் வாழும் வளவுக்குள்ளாகவே உள்ள வைரவர் கோயிலில் நம்பிக்கை வைத்து தீபம் ஏற்றுதல் மடை வைத்து வேள்வி செய்தல் என்று உறவினர் ஒரு குறையும் வைக்கமாட்டார்கள். எவரும் எதிர்த்து கதைக்கவும் துணிய மாட்டார்கள். ஆனால் மனம் மட்டும் வேறு வழியில் சிந்திக்கும்...

'இந்த வேப்ப மரத்திலை வைரவர் இருக்கிறார் என்று சொல்லுகினம். உண்மையில் வைரவர் ஒரு தெய்வம் எண்டு சொன்னால் தனக்கென்று ஒரு பெரிய ஆலயத்தை கட்டாமல் மரத்திலை இருப்பாரா? "வைரவர் எங்கடை காவல் தெய்வம். நாங்கள் அவரை நேரிலை கண்டிருக்கிறம்" என்று எங்கடை மூதாதையர் சொன்னவையாம். அதேன் எனக்கு மட்டும் அவர் காட்சி தாறாரில்லை. நான் 'செக்கண்ட் ஷோ' படம் முடிந்து சாமத்திலை வைரவர் கோயிலடியாலை வந்திருக்கிறன், எனக்கெண்டால் எந்த அசுமாத்தமும் இல்லை. வைரவர் மடை வைக்கச் சொல்லியோ வேள்வி செய்யவோ எவரையாவது கேட்டிருப்பாரா? சனம் தனக்கு தேவையானதை வைரவருடைய பெயரை சொல்லி அனுபவிக்குது...!"

வாழ்க்கையில் தங்கள் தங்களுடைய உறவுகளுக்கு கைகொடுத்தவர் பல பேர் இருப்பார்கள். அதுவும் இந்நாட்களில் வெளிநாட்டில் உள்ளவர்கள் தமது சொந்தங்களை அழைத்து தொழில் வாய்ப்பையும் பெற்றுக்கொடுத்துள்ளார்கள். அவர்களை சம்மந்தப்பட்டவர்கள் வாயார போற்றவே செய்வார்கள். ஆனால் அது சிறிது காலம்தான். பிறகு மனம் குற்றம் காண தொடங்கிவிடும்...

'கனடாவுக்கு நான் செல்ல மாமிதான்' ஸ்பொன்சர்' பண்ணினவா... அதுக்காக நான் அவவுக்கு அடிமையாக சேவகம் செய்யலாமா? அவாவின்ரை செலவிற்கெல்லாம் நான் வட்டியோடை கொடுத்திட்டேன். ஆனால், "நான் தான் அவனை கனடாவிற்கு எடுத்து விட்டன்" என்று சொல்லித்திரிவது மட்டும் இன்னும் குறையவே இல்லை. நான் அவாவுடைய கோபக்காரரோடை கதைச்சு சிரிக்க கூடாது. உறவாடக்கூடாது. தொலைபேசி எடுக்க கூடாது. யாரும் எனக்கு தங்கடை வீட்டு விசேஷங்களுக்கு அழைத்தால், "அங்கை கண்ட கண்ட எல்லோரும் வருவினம்... நான் போறன் தானே.. நீ போகாதே" என்று தடுத்துவிடுவா.. தங்கடை வீட்டு விசேஷங்களுக்கு என்னிடமிருந்து காசு நகை,

நாட்களே இருக்காது. ஆனால் முதுமை என்பது பெற்றோரை மட்டுமே விட்டு வைப்பது அல்லவே, அப்போது எம் பெரும்தன்மை எப்படி இருக்கின்றதென்று பார்ப்போம்...


'அவரும் நானும் வேலைக்கு போக வேணும். பிள்ளைகள் இருவரையும் நேரத்திற்கு பாடசாலைக்கு அனுப்ப வேணும். வீட்டிலை 'காஸ்' அடுப்பு இருக்கு. அம்மா தவண்டு தவண்டு எண்டாலும் சமையல் வேலையை செய்யலாம் தானே. அப்பா எந்த நேரம் பார்த்தாலும் 'ஈஸி சேயருக்குள்ளை' முடங்கிக்கிடந்து கொண்டு புத்தகம் பேப்பர் வாசிக்கிறதுதான் வேலை. 'வோஷிங் மெசின்' இருக்கு. அம்மாவின்ரையும் தன்னுடையதுமான உடுப்புக்களை துவைக்கலாம் தானே. வெளிநாட்டிலை எல்லோரும் பெற்றோரை முதியோர் இல்லத்தில தான் விட்டு பராமரிக்கினம். ஒரு வயது வந்திட்டால். அவைக்கும் தொந்தரவு இல்லாமல் எங்களுக்கும் பாரமில்லாமல் போய்விடவேண்டும்!.

இனி, கணவன் மனைவி உறவென்பது மிகவும் தூய்மையானது. 'கல் என்றாலும் கணவன் புல் என்றாலும் புருஷன்' என்று பெண்கள் வாயார புகழ்வார்கள். ஆனால் நடைமுறையில் அப்படியெல்லாம் இருக்காது.

'இவர்தான் ஒரு புதுவிதமான மனுஷன். அலுவலகம் அலுவலகம் என்று காலையில் விழுந்தடித்து ஓடினால் வீடு வர இரவு எட்டு மணியாகும். கேட்டால் "ஓவர் டைம்" என்று சொல்லுவார். எந்த காவாலி பெட்டைகளோடை இருந்து கதைத்துவிட்டு வாராரோ ஆருக்கு தெரியும். கலியாணம் முடிச்ச புதிசிலேயே எனக்கு ஒரு சந்தேகம் இருந்தது. இந்தாளுக்கு முந்தியே பெண்கள் தொடர்பு இருந்திருக்கும் எண்டு. பிள்ளைகள் பிறக்க பிறக்க என்னிலை நாட்டமும் குறைந்து கொண்டு போகுது. எந்த நேரமும் கைபேசியிலை கதைக்கிறதுதான் வேலை. கேட்டால் சண்டையும் அடிபுடியும் தான்.

இனி கணவனை பற்றிய மனைவியின் நினைப்புக்கு அப்பால் கணவன்மாரின் மனைவி பற்றிய நினைப்பு ஒன்றும் தாழ்ந்ததில்லை...

'இவள் ஒருநாள்... நான் உங்கடை சொந்தகாரி... என்னை ஏன் நீங்கள் கலியாணம் முடிக்க கூடாதென்று" கேட்கப்போய்தானே நான் ஓமென்று இவளுக்கு வாழ்வு கொடுத்தனான். இவள் இப்படி எத்தனை பேரை கேட்டிருப்பாள் என்று நான் அப்போ யோசிக்கவில்லை. இப்ப தானே இவளுடைய துடியாட்டம் தெரியுது. முகநூலிலை எனக்கு அறிமுகமில்லாத நூற்றுக்கணக்கானவர்களோடு சினேகிதம். 'வைபரிலை' நீண்ட உரையாடல்கள். சனி விடுமுறை என்று வேலைக்கு போறது. கந்தோராலை சுற்றுலா போறது.. கொஞ்சம் அவதானமாய் தான் இருக்க வேணும்."



**நாக்குக்கு நரம்பு இல்லை. அதே போன்று மனதுக்கு கட்டுப்பாடு கிடையாது. நாம் தான் விழிப்பாக இருக்கவேண்டும்.!**

# விநோதங்கள்

## மருத்துவரின் உதவியுடன் தற்கொலை

கனடாவில் உள்ள மனிடோபா மாகாணத்தில் பெயர் வெளியிடப்படாத நோயாளி ஒருவர் கடந்த சில வருடங்களாக சிகிச்சை பெற்று வருகிறார். இந்த நபருக்கு ஏற்பட்டுள்ள நோயை குணப்படுத்த முடியாது என்பதால், மருத்துவர் உதவியுடன் தற்கொலை செய்துக்கொள்ள கோரிக்கை விடுத்துள்ளார். ஆனால், இவரது கோரிக்கையை மருத்துவர்கள் நிராகரித்ததால் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். நோயாளியின் உடல்நிலை அவர் அனுபவிக்கும் வேதனை உள்ளிட்டவைகளை கருத்தில் கொண்டு மனிடோபா மாகாணத்திலேயே முதன் முறையாக மருத்துவர் உதவியுடன் தற்கொலை செய்துகொள்ள கடந்த செவ்வாய் கிழமை நீதிபதி ரகசிய அனுமதி அளித்துள்ளார்.

## நாய்களிற்கான புதிய சட்டம் அமுலில்



பிரித்தானிய நாட்டின் தண்டனை வழங்கும் கவுன்சில் கடந்த வியாழக்கிழமை வெளியிட்ட அறிக்கையில், '2014ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட ஆபத்துமிக்க நாய்கள் சட்டத்தில் சில திருத்தங்கள் செய்யப்படவுள்ளன. இந்த திருத்தங்கள் மூலம் நாய்களை வளர்க்கும் உரிமையாளர்கள் மீது கடுமையான விதிமுறைகள் நடைமுறைக்கு வரவுள்ளன. அவற்றுள் சில.

ஆபத்தான மற்றும் அரசால் தடை செய்யப்பட்ட நாய்களை பொதுமக்கள் வளர்க்க கூடாது. நாய்கள் மற்றவர்கள் மீது மிகுந்த ஆவேசம் அடையும் வகையில் அவற்றிற்கு பயிற்சி அளிக்க கூடாது. நாய்களினால் மற்றவர்களுக்கு காயம், படுகாயம் ஏற்பட்டால் அந்த நாயின் உரிமையாளருக்கு 2 முதல் 5 ஆண்டுகள் வரை சிறை தண்டனை விதிக்கப்படும். மற்றும் ஒரு நாயால் ஒருவர் உயிரிழக்க நேரிட்டால், அந்த நாயின் உரிமையாளருக்கு 14 ஆண்டுகள் வரை சிறை தண்டனை விதிக்கப்படும் உள்ளிட்ட புதிய மாற்றங்கள் நடைமுறைக்கு வரவுள்ளன.

## இரட்டை சகோதரிகளின் ஒற்றை வாழ்க்கை



உலகில் இரட்டை குழந்தைகள் பிறப்பது ஒன்றும் புதிதான விடயம் அல்ல, ஆனால் அவுஸ்திரேலியாவில் வசித்து வரும் இரட்டை சகோதரிகள் இருவரும், Ben Byrne என்ற நபரை காதலித்து திருமணம் செய்து கொண்டனர். திருமணத்திற்கு பிறகு ஒரே படுக்கையை பகிர்ந்துகொள்ளும் இவர்கள், சாப்பிடும் உணவு மட்டுமின்றி, குடிக்குத் தண்ணீரின் அளவு கூட ஒரே அளவாக இருக்கும். தற்போது இருவரும் செயற்கை கருத்தரித்தல் முறையினை பயன்படுத்தி ஒரே நேரத்தில் கர்ப்பம் தரித்து ஒரே நேரத்தில் குழந்தை பெற்றுக்கொள்ள ஆசைப்படுகிறோம் என தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சினிமுரசு

## "போக்கிரி ராஜா"

நடிகர் : ஜீவா
நடிகை : ஹன்சிகா
இசை : இமான்
இயக்குனர் : ராம் பிரகாஷ் ராயப்பா

அடுத்த வார இதழில்



## திரை விமர்சனம்

## "பிச்சைக்காரன்"

நடிகர் : விஜய் ஆண்டனி
நடிகை : சாத்னா டைடஸ்
இயக்குனர் : சசி
இசை : விஜய் ஆண்டனி
ஒளிப்பதிவு : பிரசன்ன குமார்

விஜய் ஆண்டனி படங்களுக்கு நம்பி போகலாம் என்ற மனநிலையை அவர் ஏற்கெனவே மக்கள் மனதில் பதித்து விட்டார். இதை தொடர்ந்து ட்ரைலரிலேயே ஹிட் அடித்து, பெரிய எதிர்ப்பார்ப்புடன் வெளிவந்திருக்கும் படம் பிச்சைக்காரன். இப்படத்தை இயக்குனர் சசி இயக்க, விஜய் ஆண்டனியே நடித்து தயாரித்துள்ளார்.

சுமார் 900 கோடி ரூபா சொத்துகளுக்கு அதிபதி விஜய் ஆண்டனி. தனக்கு எல்லாமே தன் அம்மா என்று வாழ்பவர், இவரின் தொழிற்சாலையில் ஒரு நாள் எதிர்பாராத விபத்தால் விஜய் ஆண்டனி அம்மா கோமா நிலைக்கு செல்கிறார். எதற்கு இயல்பு நிலைக்கு திரு[illegible] நிலையில் ஒரு சாமிய[illegible] அறிவுரையால், 8 நாட்களுக்கு தான் ஒரு கோடிஸ்வரன் என்பதை மறந்து தன் அம்மாவிற்காக பிச்சைக்காரனாக வாழ்கிறார். ஒரு பிச்சைக்காரனாக தன்னை தயார்படுத்தி பிச்சை எடுக்கையில், பல பேரின் மூலம் இவருக்கு இன்னல்கள் வருகின்றது. விஜய் ஆண்டனியின் வேண்டுதல் நிறைவேறி அவருடைய அம்மா குணமானாரா? தனக்கு வரும் இன்னல்களை முறியடித்தாரா? என்பதை சசி மிக உணர்ச்சிப்பொங்க கூறியிருக்கிறார்.



கோடீஸ்வர வாழ்க்கையில் இருந்து பிச்சைக்காரனாக அவர் மாற எடுக்கும் முயற்சிகள், தன் அம்மாவிற்காக ஏங்கும் மகனாகவும் நன்றாக செய்கிறார். விஜய் ஆண்டனி ஒரு பிச்சைக்காரன் என்பது தெரியாமல் அவருடன் சேர்ந்து ஊர் சுற்றுகிறார், சந்தோஷமாக காதலிக்க, ஒரு கட்டத்தில் அவரு பிச்சைக்காரன் என்று தெரிந்து அவரை விட்டு விலக நினைத்தாலும், காதலால் அவருடனே பயணிப்பது என ரசிகர்களை கவர்கிறார் கதாநாயகி.

எத்தனை பேர் வந்தாலும் அடித்து துவம்சம் செய்கிறார், அது யதார்த்தத்தை மீறி நிற்கின்றது.

மொத்தத்தில் இந்த பிச்சைக்காரன் எல்லோராலும் கவனிக்கப்பட வேண்டியவன்.

= :: = :: = :: = :: = :: = :: = :: = :

## கபூரின் உலகளவு சாதனை



பாலிவுட் திரையுலகின் முன்னணி நடிகை சோனம் கபூர். இவர் தனுஷுடன் அம்பிகாபதி படத்தில் நடித்திருந்தார். இதன் மூலம் தமிழ் சினிமா ரசிகர்களுக்கும் இவர் பிரபலம். இந்நிலையில் இவர் நடிப்பில் கடந்த மாதம் வெளிவந்த படம் நீரஜா. இப்படம் இந்தியாவில் மட்டும் ரூ 73 கோடி வசூல் செய்ய, உலகம் முழுவதும் ரூ 100 கோடியை தாண்டிவிட்டது. படத்தில் ஹீரோ இல்லாமல், ஒரு ஹீரோயினாக ரூ100 கோடி கிளப்பில் இணைந்தது சோனம் கபூர் மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது.

= :: = :: = :: = :: = :: = :: = :: = :

## ஜெய்யின் இரகசியம்

உதயம் NH4 படத்தினைத் தொடர்ந்து மணிமாறன் இயக்கத்தில் வெளியாகவிருக்கும் படம் புகழ். ஜெய், சுரபி நடிப்பில் உருவாகியிருக்கும் இப்படம் மார்ச் 18ல் வெளியாகவிருக்கிறது. சில சுவாரஸ்யங்களை ஜெய் பகிர்ந்துகொண்டார், எங்கேயும் எப்போதும் படம் வெளியான நேரத்தில் எனக்கும் அஞ்சலிக்கும் நல்ல புரிதல் இருந்தது. பின்னர் தெலுங்கு படங்களில் அவர் பிஸியாகிவிட்ட நிலையில் நானும் அவரும் அவ்வளவாக பேசிக்கொள்வதில்லை. பின் சில மாதங்களுக்கு முன்பு நானும் அஞ்சலியும் சந்தித்தோம். சில பொது இடங்களுக்கு சேர்ந்தே சென்றோம். எங்கள் இரண்டு பேருக்கும் இடையே நல்ல நட்பு இருக்கிறது. அது, பின்னாளில் காதலாக மாறலாம் என்றார் ஜெய்.

காதல் மலர்ந்தால் திருமணம் தானே என்று கேட்டதற்கு, "திருமணத்தில் எனக்கு நம்பிக்கையில்லை, இப்போ உள்ள காலத்தில் திருமணமான ஜோடிகள் அதிகமாக விவாகரத்து செய்துகொள்கிறார்கள். காதலர்கள் ஒருவரையொருவர் புரிந்துகொண்டால் கல்யாணம் செய்து கொள்ளாமலே சேர்ந்து வாழலாம் என்றுள்ளார்.

## குதிரைக்காக பொங்கிய திரிஷா



நடிகை த்ரிஷாவுக்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதாக பரபரப்பு செய்தி வெளியாகியுள்ளது.

கௌரவக் கொலைகள் தொடங்கி மனிதர்களுக்கு என்ன நடந்தாலும் அதைப்பற்றி கவலைப்பட மாட்டார் த்ரி'ா. அதே நேரம் ஆடு, மாடு, நாய், குதிரை போன்ற ஜீவராசிகளுக்கு ஏதாவது என்றால் உடனே டுவிட்டரில் பொங்குவார்.

உத்தராகண்ட் மாநில அரசுக்கு எதிராக பாஜக சார்பில் போராட்டம் நடைபெற்றது. அப்போது, பாஜக எம்எல்ஏ கணேஷ் ஜோஷி, ஒரு குதிரையை தாக்கினார். அடிபட்ட குதிரை நிலை குலைந்து கீழே விழுந்து கிடப்பது போன்ற புகைப் படங்கள் மற்றும் செய்திகள் சமூக வலைத்தளத்தில் வெளியாகின.

விலங்குகள் நல அமைப்பினா பீட்டாவின் விளம்பர தூதராக இருக்கும் த்ரிஷா, சம்பவத்திற்காக பாஜக எம்.எல்.ஏ.வை டுவிட்டரில் கடுமையாக "மிகவும் வெட்கக்கேடான செய்கை. நீங்கள் நரகத்துக்குச் செல்ல நான் இறைவனை வேண்டுகிறேன்" என சாடியதும் நடிகை த்ரிஷாவுக்கு சம்மந்தப்பட்ட கட்சியிலிருந்து மிரட்டல்கள் வந்ததாக சொல்லப்படுகிறது. இருப்பினும் இந்த செய்தியை த்ரிஷா உறுதிப்படுத்தவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டும் பையன்

INFOMATION TECHNOLOGY

MOBILE

## குறட்டையை ஒழிக்க "ஒட்டும் பட்டை"

குறட்டை என்பது பாரிய நோய் இல்லை எனினும் இது பலரது தூக்கத்தை தொலைக்கக்கூடியது. இதனால் விவாகரத்துக்கள் இடம்பெற்ற சம்பவங்கள் அதிகம்.

குறட்டையினை குறைப்பதற்கு பல்வேறு வழிமுறைகள் பின்பற்றப்படுகின்ற போதிலும் அவை வெற்றியளிப்பதில்லை. ஆனால் தற்போது இதற்கான மாற்றுவழி ஒன்றினை கண்டுபிடித்துள்ளனர்.

அதாவது குறட்டையை நிறுத்த முடியாவிட்டாலும் அதன் மூலம் வெளியேறும் சத்தத்தினை குறைப்பதற்கு ஒட்டும் பட்டை (Patch) ஒன்றினை அமெரிக்காவினை தளமாகக் கொண்டு இயங்கும் தொழில்நுட்ப நிறுவனம் உருவாக்கியுள்ளது.

இந்த பட்டையினை தூக்கத்திற்கு செல்லும்போது மூக்கின் மீது ஒட்டினால் போதும் சத்தம் குறைக்கப்படுவதால் நாம் மட்டுமின்றி நம்மை சுற்றியிருப்பவர்களும் நிம்மதியாக தூங்க முடியும்.





OTHER

## புறாக்கள் மூலம் வேவு பார்க்க திட்டம்

பிரித்தானியாவின் லண்டன் நகரில் காற்றில் உள்ள மாசுவின் அளவு அதிகரித்து வருவதாக கூறப்படுகிறது. இதன் காரணமாக ஐரோப்பிய ஒன்றியத்தின் காற்று மாசுவுக்கான அளவையும் அந்நகரம் கடந்துள்ளது. அடுத்த 5 வருடங்களில் லண்டன் உள்ளிட்ட மற்ற நகரங்களில் நைட்ரோஜன் டை ஆக்சைடின் அளவு கணிசமாக உயர்வதற்கான வாய்ப்புகள் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து லண்டன் நகரின் மாசு அளவை கண்காணிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

முதல் கட்டமாக புறாக்களின் உடலில் நுண்ணிய கருவிகள் பொருத்தி அதன் மூலம் மாசுவின் அளவை கண்காணிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த கருவிகள் காற்றில் உள்ள நைட்ரோஜன் டை ஆக்சைட், ஓசோன் வாயுக்கள் போன்றவற்றை ஆய்வு செய்யும். இதை வைத்து நகரின் மாசு அளவு அதிகமாக உள்ளதா அல்லது நடுத்தர அளவில் உள்ளதா என்பது கணிக்கப்படும்.



## உலகின் அதிவேக இணைய உலாவி உருவாக்கம்



உலகின் முன்னணி இணைய உலாவிகளில் ஒன்றான Firefox உலாவியினை அறிமுகம் செய்த மோசில்லா (Mozilla) நிறுவனம் தற்போது Mozilla Servo எனும் அதி வேகமாக செயற்படக்கூடிய மற்றொரு இணைய உலாவியினை அறிமுகம் செய்யவுள்ளது.

இந்த புதிய உலாவியினை சம்சுங் நிறுவனத்துடன் இணைந்து மோசில்லா நிறுவனம் உருவாக்கி வருகிறது. Rust எனப்படும் புதிய கணினி மொழியினைப் பயன்படுத்தி வடிவமைக்கப்பட்ட இந்த உலாவியானது எதிர்வரும் ஜூன் மாதம் பரிசோதனை ரீதியாக அறிமுகம் செய்யப்படவுள்ளது.

இவ் இணைய உலாவியானது 64bit Linux, 64bit OSX, Android, மற்றும் Gonk (Firefox OS) ஆகிய இயங்குதளங்களில் செயற்படக்கூடியதாக இருக்கும் எனவும், இது பயனர்களுக்கு இணைய தேடலில் புதிய அனுபவத்தினை வழங்கும் எனவும் மோசில்லா நிறுவனம் தெரிவித்துள்ளது.


## சிகரட் துண்டிலிருந்து பிளாஸ்டிக் உருவாக்கம்

சிகரட்டின் மீதி துண்டுகளில் காணப்படும் சேதன மற்றும் அசேதன சேர்வைகளின் சிக்கல் தன்மை காரணமாக அவற்றினை மீள் சுழற்சிக்கு உட்படுத்துவதில் பல நிறுவனங்களும் தோல்வி கண்டிருந்தன. ஆனால் நியூ ஜேர்சியிலுள்ள TerraCycle எனும் நிறுவனம் முதன் முறையாக சிகரட் துண்டுகளினை பிளாஸ்டிக்காக மீள்சுழற்சிக்கு உட்படுத்தி சாதித்துள்ளது. இவ்வாறு மீள் சுழற்சிக்கு உட்படுத்தப்பட்ட சிகரட் துண்டுகளிலிருந்து ரயில் தண்டவாளத்திற்கு தேவையான ஸ்லீப்பர்ஸ், ஆஷ்ட்ரே (Ashtray), கப்பல் படுக்கை என்பன உருவாக்கப்பட்டுள்ளன. இதற்காக 2000ம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் அமெரிக்கா, ஐரோப்ப நாடுகள் மற்றும் அவுஸ்திரேலியா உட்பட 9 நாடுகளிலில் இருந்து சிகரட் துண்டுகளை கொண்ட 7,000 கூடைகளை (Bins) பெற்று இவ் ஆராய்ச்சியினை அந்நிறுவனம் மேற்கொண்டிருந்தது.




## கோள வடிவில் டயர்கள் அறிமுகம்

மனிதனால் உருவாக்கப்பட்ட அனைத்து சாதனங்களுக்கும் குறித்த ஒரு ஆயுட்காலம் காணப்படுகின்றது. எனினும் தனது புதிய தொழில்நுட்பங்கள் மூலம் அவ் ஆயுட்காலங்களை அதிகரிப்பதற்கு மனிதன் ஒருபோதும் பின்னடித்ததே இல்லை.



Eagle–360 எனும் கோள வடிவில் அமைந்த டயரே அதுவாகும். இந்த டயர்களை Goodyear நிறுவனம் வடிவமைத்து அறிமுகம் செய்யவுள்ளது. இதில் காணப்படும் சென்சாரின் ஊடாக பாதையினை கண்காணித்து கால நிலைக்கு ஏற்ப வாகனம் பயணிக்கக்கூடிய வசதியை தருதல் சிறப்பம்சமாகும்.

## பிளாஸ்டிக் அழிப்பு - பக்டீரியா உருவாக்கம்

பொதுவாக எல்லாவிதமான பொருட்களையும் பக்டீரியாக்கள் தின்று அழித்து விடும். இதனால் சுற்றுச் சூழல் பாதிப்பு தவிர்க்கப்படும். ஆனால் பிளாஸ்டிக் பொருட்களை மட்டும் பக்டீரியாக்கள் சாப்பிடுவது இல்லை. இதன் காரணமாக அவை அழியாமல் பூமியிலேயே கிடக்கின்றன.

இந்நிலையில் ஜப்பான் விஞ்ஞானிகள், பிளாஸ்டிக் பொருட்களை அழிக்கக்கூடிய பக்டீரியாக்களை கண்டுபிடித்துள்ளனர். ஜப்பானிலுள்ள பிளாஸ்டிக் மறுசுழற்சி ஆலையில் ஆய்வு நடத்திய போது கொயட்டா மற்றும் கேயோ பல்கலைக்கழக விஞ்ஞானிகள் இவற்றை கண்டுபிடித்துள்ளனர்.

## அறிந்திராத பல அம்சங்கள்

இணையம் என்றதுமே நமது அனைவரின் நினைவுக்கு வருவது என்றால் அது கூகுள் மட்டும் தான். இன்றளவும் மில்லியன் கணக்கான பயனாளர்களை கொண்டு வெற்றிகரமாக முன்னணியில் உள்ளது. இப்படிபட்ட கூகுளை பற்றி பலருக்கும் தெரியாத அம்சங்கள் இங்கு தொகுக்கப்பட்டுள்ளன.


கூகுள் தேடலில் ***Flip A Coin*** என்று டைப் செய்தால் பூவா தலையா போட முடியும்.




***Roll A Dice*** என டைப் செய்தால் தாயம் விளையாடலாம், ஒவ்வொரு முறையும் கிளிக் செய்யும் போது வெவ்வேறு எண்களை காணலாம்.




***Askew*** என டைப் செய்தால் தேடல் விபரங்கள் ஒருபுறம் சரிந்திருப்பதை காணலாம். இதேபோன்று ***Do a barrel roll*** என டைப் செய்தாலும் கூகுள் தேடல் ஒரு பக்கமாக சாய்வதை காணலாம்.




***Zerg Rush*** என டைப் செய்தால் பதில் தானாக இடிந்து விழுவதை காணலாம்.

கூகுளில் ***'Google Gravity'*** என டைப் செய்து ***I'm Feeling Lucky*** பட்டனை க்ளிக் செய்தால் கூகுள் இடிந்து கீழே விழுவதை திரையில் பார்க்க முடியும். இதேபோல் கூகுளில் ***'Google Orbit'*** என டைப் செய்து ***I'm Feeling Lucky*** பட்டனை க்ளிக் செய்தால் தேடல் முழுவதும் சுற்ற ஆரம்பிக்கும். கூகுளில் ***'Google Pacman'*** என டைப் செய்து பேக்மேன் விளையாட்டை விளையாடலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாதாரணமானவனின் மனது

சஞ்சயன் செல்வமாணிக்கம்

# விமர்சிப்பவன் எதிரியா??

ஒரு விமர்சனம் உடன்பாடற்றதாக இருக்கலாம். ஆனால் அது தேவையற்றதாக இருக்க முடியாது. மனித உடலில் வலியின் செயற்பாட்டை இது ஒத்திருக்கிறது. அதாவது இது நலமற்ற நிலையின் மீது கவனத்தைக் குவிக்கச் செய்கிறது. என்று விமசனம் பற்றி Winston Churchill கூறுகிறார்.

சுதந்திரத்திற்கான அச்சுறுத்தல் விமர்சனமின்மையே என்கிறார். 1986ல் இலக்கியத்திற்காக நோபல் பரிசுபெற்ற நைஜீரிய நாட்டு எழுத்தாளரும் நாடகசாரியருமான இவர்.

எமது சமுதாயம் விமர்சனங்களை ஏற்றுக் கொள்ளுமளவுக்கு பண்படைந்-துள்ளதா அல்லது நெகிழ்ச்சித் தன்மையுள்ளதா?

எமது சமுதாயம் விமர்சனத்தை எவ்வாறு பார்க்கிறது? விமர்சனம் செய்பவர் எவ்வாறு சமூகத்தால் நோக்கப்படுகிறார்? விமர்சிப்பவருக்கும், விமர்சிக்கப்-பட்டவருக்குமான உறவு எவ்வாறு இருக்கிறது என்று நோக்குவோமெனில் நாம் கடந்து செல்லவேண்டிய பாதை அதிகமாய் இருப்பதுபோல இருக்கிறது.

எமது சமுதாயம் உணர்ச்சிகளினால் கட்டுண்டது. பலரும் விமர்சனங்களை அறிவார்த்தமாக பகுத்தாராய்வு செய்வதில்லை. தன்னைச் சூழவுள்ள மனிதர்கள், நெருக்கமானவர்கள், தாம் சார்ந்துள்ள நிறுவனங்கள், குழுக்கள் என்று விமர்சனங்களை பல வித நிறங்களைக் கொண்ட கண்ணாடிகளுக்குள்ளால் பார்ப்பதே வழமையாக இருக்கிறது. அதன் காரணமாக விமர்சனம் புகழ்ச்சியாக இருக்கும்போது மட்டுமே பலராலும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. மாற்றுக் கருத்துடைய விமர்சனங்கள் பெரும்பாலும் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. மாற்றுக் கருத்துடைய விமர்சனத்தை முன்வைப்-பவரை எதிரியாகநோக்கும் சிந்தனை-யையும் கொண்டது எமது சமூகம். எவையும் விமர்சனத்திற்கு அப்பாற்பட்டது கிடையாது.



அதேவேளை விமர்சனத் தர்மம், விழுமியங்கள், நெறிமுறைகளுக்கு உட்பட்டு விமர்சனம் அமையவேண்டும் என்பதும் மிகவும் அவசியம்.

பலரிடம் உள்ள பலவீனம் என்னவென்றால், அவர்கள் புகழ்ச்சியினூடாக பாழாகிப்போவதையே விரும்புகிறார்கள், விமர்சனத்தினூடாக மீட்கப்படுவதைவிட என்கிறார் Norman Vincent Peale என்னும் அறிஞர்.

புகழ்ச்சியை அதிகம் உள்ளடக்காது, மாற்றுக்கருத்துக்களை முன்வைத்து எழுதப்படும் விமர்சனங்களால் விமர்சகருடன், விமர்சிக்கப்பட்டவரும் அவரது ஆதரவாளர்களும் முரண்பட்டுக்கொள்ளும் நிலையே எமது சமூகத்தில் அதிகம் காணப்படுகிறது. இது வளமான ஒரு பண்பட்ட சமூகத்திற்கு உகந்ததல்ல.

விமர்சனங்களும் விமர்சிக்கப்-படவேண்டும் என்னும் கருத்துடையவன் நான். ஆனால் விமர்சனங்கள் விமர்சிக்கப்படும்போது மிக முக்கியமாக அந்த கருத்துப்பரிமாற்றல் விவாதமாக மாறிவிடாதிருப்பது அவசியம். மற்றையவரின் நியாயமான கருத்தை அல்லது விமர்சனத்தை புரிந்துகொள்ளும் நெகிழ்ச்சித்தன்மை எம்மிடம் இல்லாது-விட்டால் நாம் எமது முன்னேற்றத்தின் படிக்கட்டுகளை மூடிவிடுகிறோம் என்றே நான் கருதுகிறேன்.

நோர்வேயில் விமர்சனங்களை முதுகுக்குப்பின்னே விமர்சிக்கும் தன்மையே அதிகம். நேருக்கு நேர் தமக்கு கூறப்பட்டு புகழ்ச்சி தவிர்ந்த விமர்சனங்களை விமர்சித்து வளமான உரையாடலை நடாத்துபவர்களும் இருக்கிறார்கள். ஆனால் அவர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். விமர்சனங்களில் உள்ள குறைகளை சுட்டிக்காட்டாது இருப்பதும் விமர்சனத்தை விரும்பாத தன்மையை ஒத்ததுதே.

வேதனை என்னவென்றால் பல மாபெரும் கலைஞர்களுக்கும், மனிதர்களுக்கும், கல்வி-மான்களுக்கும் மேலே கூறப்பட்ட நெகிழ்ச்சித்தன்மை இல்லாதிருப்பதே ஆகும். தற்பெருமையும், அதீத சுயநம்பிக்கையும் தேவைக்கு அதிகமாகும்போது வரட்டுக் கௌரவம் அதிகரித்து, நெகிழ்ச்சித்தன்மை அற்றுப் போகிறது. இதுவே வளர்ச்சியை தேக்கநிலையடையவைக்கிறது. அண்மையில் ஒரு பேராசிரியரை எனது நண்பர் ஒருவர் சந்தித்தார். அப்பேராசிரியர் தமிழர்களிடத்தில் மட்டுமல்ல, இலங்கையிலும், வேறு பல நாடுகளிலும் தனது ஆராய்சிகளை மேற்கொண்டு தனக்கென்றொரு தனி இடத்தை கல்விமான்களுக்கிடையில் பெற்றுக்கொண்டவர். பல் மொழி வித்துவர். தலைசிறந்த அறிஞர்.

எனது நண்பரோ நோர்வே-யில் 27 வருடத்திற்கும் அதிகமாக வசிப்பவர்.

தொடரும்

---

# அளவு மீறிய நேசம் கொள்ளல் (தன்யா)




கடந்தவார தொடர்ச்சி .. ..

குருணாகல் மாவட்டத்தில் வ்சித்து வந்த சுமனாவதி மற்றும் சமன்குமார இருவரும் காதலித்து திருமணம் செய்துகொண்டனர். இருவரும் ஒருவரில் ஒருவர் மிகுந்த பாசம் கொண்டிருந்தனர். எனினும் சமனது குடிப்பழக்கம் சுமனாவதியின் மரணத்திற்கு விழி சமைத்தது. அவனை விட்டு விலக முடியாத அவள் அவனை பார்ப்பதற்காக ஒரு நாளில் ஒரு தடவை வருவது வழமை. **இனி.......**

அவனுக்கு உரைத்தது வருவது தனது மனைவியே என. என்னதான் விருப்பத்திற்குரிய மனைவியாக இருப்பினும் ஒரு ஆவியை காதலிக்கவா முடியும்??

அவனுள மெல்ல நடுக்கம் ஆரம்பித்தது. எனினும் தன் மீதுள்ள விருப்பத்தில் தான் அவள் வருவதாகவும், தன்னை எதுவும் செய்து விட மாட்டாள் எனவும் மிகவும் நம்பிக்கை கொண்டான் சமன்.

வழமையில் ஒரு நாளும் தனது நண்பர்களை வீட்டிற்கு அழைத்து வந்து மது அருந்தியதில்லை அவன். அன்று நண்பர்களின் வற்புறுத்தலில் எதுவும் கூறமுடியாது சம்மதித்தான். நால்வர் முற்றத்தில் இருந்து மது அருந்திக் கொண்டிருந்தனர். நேரம் இரவு 11.30 ஆகியிருந்தது. மது போத்தல்கள் காலியாகின. இருப்பினும் அவர்களுக்கு போதாமல் இருந்ததால் சமனது முச்சக்கர வண்டியை எடுத்துக் கொண்டு நண்பன் ஒருவன் மதுபான கடைக்குச் சென்றான். திரும்பி வரும்வழியில் அதே சந்தியில் ஓர் அழகிய பெண் வெள்ளை நிற சாறி அணிந்து, அப்போது தான் நீராடியது போல் ஈரம் சொட்டச் சொட்ட தலைமுடி விரித்தவாறு நின்றிருந்தாள். வண்டி அவளருகில் நின்றது. இவன் அவளிடம் ஏறச் சொன்னான்.

அவளிடம் இருந்து வந்த முதல் கேள்வியே அவனது வண்டியில் இந்நேரத்தில் நீ எதற்காக வந்தாய்?

அவன் விடை பகரும் முன் அடுத்த வினா. யாரைக் கேட்டு எனது வீட்டில் மது அருந்துகிறீர்கள்?

தொடர்ந்தது வினாக்கள்.....

மெல்ல மெல்ல குரலில் தடிப்பு கூடியது. கரகரத்தது. கோபம் அனல்விட்டது. நல்லவேளையாக வண்டி வீட்டை அண்மித்தருந்தது. எதுவும் பேசாது வளவிற்குள் வண்டியை செலுத்தினான். அவளைக் காணவில்லை. உள்ளே சென்றிருந்த தனது நண்பர்களிடம் நடந்தவற்றை கூறினான். நேரம் இரவு 12.15 ஆகியிருந்தது.

வெள்ளை நிற ஒரு உருவம் அங்கும் இங்குமாக அலைவது சமனைத் தவிர ஏனைய அனைவருக்கும் தென்பட்டது. ஏற்றியிருந்த போதை சர்ர்ரென இறங்கியது. "மச்சான், இங்க ஏதோ பிரச்சினை இருக்கு.... நாங்கள் போறோம். உனக்கு பயமாக இருந்தாள் என்னுடன் வந்து தங்கு விடிந்ததும் யோசிப்போம்" என்றான்.

ஆனால் இவனோ, அவள் எப்போதோ இருந்தே இங்கு தான் இருக்கிறாள் என்பது எனது ஊகம்.... எனது மனைவி தானே என்னை எதுவும் செய்துவிட மாட்டாள். நீங்கள் செல்லுங்கள் என கூறி அவர்களை அனுப்பிவிட்டு தனியே அவ்வீட்டின் ஹால் நிலத்தில் அமர்ந்தான்.

அதன்பின் மந்திரங்கள் அறிந்த அவன் அவளை முன்னே கொணர்ந்து நிறுத்தினான். அவளது கோபத்தை அவனால் உணரமுடிந்தது. உனக்கு என்ன வேண்டும்? வினவினான். நீ இந்த நொடியே குடியை நிறுத்த வேண்டும் அல்லது மரணிக்க வேண்டும். எனக் கூறியவாறே அவன் சுதாகரிப்பதற்குள் இரத்தக் கறைகளுடனான நீண்ட பற்கள் வெளித்தெறிய கை நகங்களும் பெரிதாகி அவன் மது பாய்ந்து கழுத்தை கௌவியது. விடியற்காலை..... நண்பர்கள் வந்து பார்த்த போது இரத்த வெள்ளத்தில் கழுத்தில் காயத்துடன் நீலமாகிப்போன பிணமாய்க் கிடந்தான்.

முற்றும்

---

# வளரும் பயிரையா? கருக்க நினைப்பது

கல்வியில் தமிழ் மொழியினர்கள் தகஷமகள் கொண்டு வளர்வதை விரும்பாத சில விசமிகள் பல ஆண்டுகளுக்கு முன்பே இருந்து வந்தாலும் இன்றைய காலகட்டத்-திலும் மிகவும் நெருக்கமானவர்-களாலும் மனம் வருந்தத்தக்கதாகவுள்ள பல இடர்களை இன்றும் சந்தித்து வருகின்றோம். இதில் ஒன்றை ஞாபகமூட்டலாம் என நினைக்கின்றேன்.

கடந்த வாரம் சக்தி ஊடக இரவு நேர செய்தியில் எமது அதிமேதகு கௌரவ சனாதிபதி நாட்டை விட்டு வெளியேறிய புத்தி ஜீவிகளை மீண்டும் வந்தடைந்து நாட்டின் அபிவிருத்தியில் பங்கு கொள்ளுமாறும் வேண்டியிருந்தார்.

எமது மொழியையே இழந்து வரும் நாம் துறை சார்ந்து சிறந்து விளங்குபவர்களை சீரழிக்கலாமா?

இவ்வாறே எம் நாட்டில் வளர்ந்து வரும் அரும்புகளான குழந்தைகளை பாடசாலைகளில் தட்டிக் கொடுப்பதை விட கூட இருந்து குழி பறிப்பவர்களாகவே சில குரோத உணர்வுகள் முளைவிடுகின்றது.

11.02.2016 அன்று எமது மாவட்ட நகரப் பாடசாலை ஒன்றில் நடந்த சம்பவம் ஒன்று குறித்து மாணவி ஒருவர் பகிர்ந்து கொண்டது....

வகுப்பிலும், வளாக மட்டத்-திலும் முன் மாதிரியான மாணவர்-களில் இவளும் ஒருத்தி. அனைத்து பாடங்களிலும் மிகவும் திறமை-யானவள். அப்பியாசக் கொப்பியில் அதிகம் நன்று, மிகநன்று மட்டுமே ஆசிரியர்கள் எழுதியிருப்பதை அவதானிக்க முடிந்தது.

வகுப்பறையில் வகுப்பு நிறைவில் அப்பியாசக் கொப்பிகள் ஆசிரியரது பணிப்பின் பெயரில் சேர்க்கப்பட்டு திருத்தப்பட்டு மறுநாள் காலையில் கொப்பிகள் மீண்டும் மாணவர்களிடம் கையளிக்கப்படுவது வழமை. அவ்வாறே அன்றும் அப்பியாசக் கொப்பிகள் சேர்க்கப்பட்டு கையகப்படுத்தப்பட்டன. மறுநாள் கொப்பி வழங்கப்பட்ட போது, குறித்த அம்மாணவியின் கொப்பியில் மாத்திரம் தாள்களில் கிறுக்கப்பட்டும், முக்கியமான பகுதிகள் மற்றும் மிகநன்று போடப்பட்ட தாள்கள் கிழிக்கப்பட்டும் காணப்பட்டது.

வீடு வந்து சேர்ந்த அம்மாணவி கொப்பியை பெற்றோரிடம் காட்டி தேம்பித் தேம்பி அழுதாள். அதனைத் தொடர்ந்து பெற்றோர் பாடசாலை அதிபரிடம் சென்று முறையிட்ட போது, இவ்வாறான சிறு சிறு தவறுகள் தம்மையும் மீறி நடப்பதாகவும், இதற்கான தகுந்த நடவடிக்கைகள் இனி வருங்காலத்தில் எடுக்கப்படும் எனவும் கூறினார்.

ஒரே கூடத்தில் காணப்படு-வோரிடையே ஏன் இந்த வேறுபாடு காணப்படுகின்றது??? இது அறியாமல் செய்த தவறு அல்லவே. தற்காலத்தில் பழிவாங்குதல், பொய்யுரைத்தல், பொறாமை உள்ளம் என்பன மாணவர் மத்தியில் தலைவிரித்தாடுகின்றது. இதனை ஆசிரிய குலாம் மற்றும் பொறுப்பானவர்கள் வளர்க்காமல் அப்பிழைகளை சுட்டிக்காட்டி வளர்ந்து வரும் எம் மாணவச் செல்வங்களை சீர திருத்த முற்பட வேண்டும்.

இதற்கு பார்க்கப்படுகின்ற சினிமா படங்களும், நாடகங்களும் உறுதுணையாக அமைகின்றன. தமிழை, தமிழ் இனத்தை கட்டிக் காப்பாற்ற வேண்டிய தலையாய கடமை மாணவர்களுக்கே உள்ளது என்பதை அவர்களுக்கு உணர வைத்து சிறந்த பிரஜைகளாக உருவாக்க எத்தனிப்போம்.

**அளவிட முடியாத அன்புக்குரியவர்களே!**
**குதூகலம் நிறைந்த குறும்புத் தனமான தளிரரும்புகளே!**
**அவள் சாலினி உங்கள் சிநேகிதி......**

*மலைநேயன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நிலைமைகளை கையாளுவதற்கு விரைவான நல்லிணக்க முயற்சிகள் தேவையாகவுள்ளன. அதாவது, இந்த ஆண்டிற்குள் ஜி.எஸ்.பி. பிளஸ் (விருப்பத்தேர்வுகளின் பொதுமைப்படுத்தப்பட்ட முறைமை) வரிச்சலுகையினை பெற்றுக் கொள்ள வேண்டிய தேவை அரசாங்கத்திற்கு ஏற்பட்டு இருக்கின்றது. இவ் ஆண்டுக்குள் ஜி.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகை கிடைக்கப் பெறும் என்ற நம்பிக்கையையும் விருப்பத்தையும் கூட அரசாங்கம் பகிரங்கமாகவே வெளிப்படுத்தியுள்ளது. அதேபோன்று மீன்பிடி ஏற்றுமதி ரீதியான நடவடிக்கைகளிலும் முன்னேற்றம் காண வேண்டிய தேவை பொருளாதார ரீதியில் அரசாங்கத்திற்கு எழுந்துள்ளது. தரக்குறைவாக நடத்துதல் - தண்டனை என்பவற்றுக்கு எதிரான சர்வதேச ஒப்பந்தம் என்பவற்றை உள்ளடக்கியதாக இருபத்து மூன்று மிக முக்கிய சர்வதேச பொது இணக்கங்களை அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் நடைமுறைப்படுத்த சர்வதேசம் ஜி.எஸ்.பி. பிளஸ்க்கு உள்ளாக எதிர்பார்க்கின்றது.

இந் நடைமுறைகள் யுத்தத்தின் போதும் யுத்தத்தின் பின்னரும் மீறப்பட்டதன் விளைவும் மீறப்பட்ட மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்புச் சொல்லாமை, பயங்கரவாதச் சட்டம் போன்ற கடும்போக்கான நடவடிக்கைகளில் தீவிர ஆர்வம் செலுத்தியமை என்பன கடந்த ஆட்சியாளர்களுக்கு நெருக்கடியாக அமைந்தன. புவிசார் அரசியலில் அவ் அரசாங்கம் கொண்டிருந்த நிலைப்பாடு உரிமைப் பிரச்சினைகள் யாவும் முடிவுக்கு வந்துள்ளது என்றும் இதனை பெறுவதற்கு வெளிவிவகார அமைச்சர் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படுவதாகக் கடந்த வருட இறுதியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார். அடிப்படையில் நாட்டில், தற்போதும் பொறுப்புச் சொல்ல வேண்டிய பலவிடயங்கள் நிலுவையில் இருக்கும் போது மனித உரிமைப் பிரச்சினைகள் முடிவுக்கு வந்துள்ளது என்ற பிரதமரின் கருத்தை மிகைப்படுத்தப்பட்ட கருத்தாகவே பார்க்க வேண்டியுள்ளது.

நல்லிணக்கத்திற்காக மேற்கொள்ளும் திட்டங்கள் ஜி.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகையைப் பெறுவதற்காக நிபந்தனையாகவும் உள்ளன. தற்போதைய அரசாங்கம் அவற்றில் அவதானம் மைத்திரிபால சிறிசேன கலந்துரையாடியுள்ளார். இவ்வாறாக அண்மைய காலப் போக்கில் அரசாங்கம் ஏற்றுமதியில் சர்வதேச சந்தையைப் பெறுவதில் அதிக கரிசனை செலுத்தி வருகின்றது. இக் கரிசணைக்கு தடைகள் காணப்படாத வண்ணம் நாட்டில் ஏற்படுத்தப்பட்டு வரும் மாற்றங்களை வெளிப்படுத்தி வருகின்றது.

நாட்டின் பொருளாதார நலன்களை கவனத்தில் கொண்டும் சில விடயங்களை மேற்கொள்ள இலங்கை அரசாங்கம் முயற்சிக்கின்றது. எது எப்படியிருந்த போதும் இவ் அரசியல் முயற்சிகள் தமிழ் மக்களுக்கு நன்மையளிப்பதாக இருப்பது வரவேற்கத்தக்கது.

**எனினும், அரசாங்கத்-தினால்**

# இலங்கைக்கான சர்வதேச பொருளாதார நலன்களில் தமிழர் நிலைப்பாடு

**நிருபா குணசேகரலிங்கம்**
www.globaltamilnews.net



இவ்வாறாக, பொருளாதார நலன்களை சர்வதேசத்திடம் இருந்து பெறுவதற்கான முயற்சிகளில் அரசாங்கம் வெகுவாக ஈடுபட்டு வருவதனைக் அண்மைய போக்குகளில் காண முடிகின்றது.

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை என்பது, அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்காக ஐரோப்பிய ஒன்றியத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட ஏற்றுமதியின் போதான விசேட திட்டமாகும். இதன் மூலம் உள்நாட்டு ஆடை ஏற்றுமதி, கைத்தொழில் துறை, அதிக நன்மைகளைப் பெற்று வந்தது. எனினும் இவ் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை கடந்த மகிந்த ராஜபக்ச அரசாங்கத்தின் காலப்பகுதியில் இழக்கப்பட்டது. மனித உரிமைகள் விடயத்தில் மேம்போக்கினை கடைப்பிடிப்பதற்கு அவ் அரசாங்கம் முன்வராமையினாலேயே அவ் இழப்பு நேர்ந்தது.

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையினைப் பெற்றுக்கொள்வதற்கு அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் ஐ.நா மற்றும் சர்வதேச தொழிலாளர் தாபனத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சில நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டி உள்ளன. மனித உரிமைகள், நல்லாட்சிச் செயன்முறை மற்றும் சூழல் பாதுகாப்பு என்பவை தொடர்பான குடியியல் மற்றும் அரசியல் பொது இணக்க ஒப்பந்தம், பொருளாதாரம், சமூகம் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச பொது இணக்க ஒப்பந்தம், இனப்படுகொலைகளைத் தடுத்தல் மற்றும் இனப்படுகொலைகளில் ஈடுபடுவோர்களைத் தண்டிப்பதற்கான ஒப்பந்தம் மற்றும் குழந்தைகளின் உரிமைகள் தொடர்பான சர்வதேச ஒப்பந்தம், இனப்பாகுபாடுகள் மற்றும், பெண்களுக்கெதிரான பாகுபாடுகளை ஒழிப்பதற்கான சர்வதேச ஒப்பந்தம், சித்திரவதை மற்றும் ஏனைய கொடூரமான மனிதாபிமானமற்ற அல்லது களும் இலங்கையை மேற்குலகில் இருந்து கடந்த ஆட்சியில் தனிமைப்படுத்தியது.

ஆட்சியில் இருந்த மகிந்த ராஜபக்ச அரசாங்கம் கடந்த 2010 இல் ஜி.எஸ்.பி வரிச்சலுகையினை நீடிப்பதற்கு ஐரோப்பிய ஒன்றியம் விதித்த நிபந்தனைகளை "நாட்டின் இறைமையினை மீறும் ஏற்றுக்கொள்ள முடியாத நிபந்தனைகள்" எனத் தெரிவித்து நிராகரித்திருந்தது. அவ்வாறு நிராகரித்தமை மாத்திரம் அன்றி இவ் வரிச்சலுகையை பெற முடியாது போக உள்நாட்டு விவாதங்களுக்கு முகங்கொடுக்கும் நோக்கில், ஜி.எஸ்.பி பிளஸ் சலுகை மூலம் வருடாந்தம் 85 மில்லியன் யுரோக்களே பெறப்பட்டன எனவும் அதனை தாம் தற்போது வேறு மார்க்கங்களின் ஊடாகப் பொறுவதற்கு முயற்சிப்பதாகவும் தெரிவித்திருந்தது.

இவ்வாறாக, ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. வரிச்சலுகையினை இழந்த போதும் அதனால் தமக்கு பாதிப்புக்கள் ஏற்படவில்லை என்றே இலங்கை மத்திய வங்கியும் ஏனைய நிறுவனங்களும் கூட அப்போது தெரிவித்து வந்தன. ஆடை உற்பத்தித் துறையில் இது வெகுவாகத் தாக்கத்தினை ஏற்படுத்தியிருந்தும் இலங்கை ஏற்றுமதி புடவைக் கைத்தொழிலாளர் சங்கமும் ஜி.எஸ்.பி வரிச்சலுகை இழக்கப்பட்டதனால் தமக்கு பாதிப்பு இல்லை எனத் தான் தெரிவித்திருந்தது. இதற்கு நிறுவனங்கள் அரசியல் மயப்படுத்தப்பட்டிருந்தமையும் காரணமாகும்.

மகிந்தவின் ஆட்சியில் இழக்கப்பட்ட வரிச்சலுகையினை ஆட்சி மாற்றத்தின் பின்னர் பெறுவதிலும் சிக்கல்கள் இருந்து கொண்டே தான் வருகின்றன. இவ் வரிச் சலுகையை இலங்கைக்கு வழங்குவது தொடர்பில் கடந்த வருட இறுதியில் கருத்துத் தெரிவித்த ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர் டேவிட் டெலி, இடை நிறுத்தப்பட்ட ஜி.எஸ்.பி. வரிச் சலுகையினைத் திருப்பிக்கொடுப்பது பற்றி இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை. இந்த நடைமுறை விரைவாக மேற்கொள்ளக் கூடியதல்ல. மாறாக ஓர் சிக்கல் மிக்க நடைமுறை எனவும் தெரிவித்திருந்தார்.

எனினும் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையைப் பெறுவதற்கு மனித செலுத்துவதை அவதானிக்க முடிகின்றது. அதாவது அரசியலமைப்பு மாற்றம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தினை மாற்றியமைப்பதில் கவனம் செலுத்துகின்றது. ஐக்கிய நாடுகள் சபையுடன் மனித உரிமைகள் விடயத்தினில் ஒருங்கிணைந்து செயற்பட ஆமோதிக்கின்றது. அடிப்படையில், ஜி.எஸ்.பி பிளஸ்க்கு தேவையானவற்றினை மேற்கொள்வதில் அரசாங்கம் கவனம் செலுத்துகின்றது. கடந்த நவம்பரில் அறிக்கை ஒன்றை வெளியிட்ட ஐரோப்பிய ஒன்றியம், மேற்படி நிபந்தனைகளை தனது அறிக்கையில் இலங்கையில் எதிர்பார்த்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இவற்றுக்கு மேலாக இராணுவ பிரசன்னம் குறைக்கப்பட வேண்டும் எனவும் ஐரோப்பிய ஒன்றியம் தனது கோரிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. இதிலிருந்து பொருளாதார நலன்களுக்குள்ளாக சர்வதேச அரசியல் நகரும் விதம் கூர்ந்து அவதானிக்கத்தக்கது.

தற்போதைய நிலையில் ஜெர்மன் ஊடாக ஜி.எஸ்.பி வரிச்சலுகையிகைப் பெறுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச் சலுகையினைப் பெற்றுக்கொள்வதற்கு ஜெர்மன் ஆதரவளிக்கும் என பிரதி வெளிவிவகார அமைச்சர் கர்சா டி சில்வா தெரிவித்திருக்கின்றார். கடந்த காலங்களில் ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச் சலுகையினைப் பெறுவதற்கு ஐரோப்பிய நாடாளுமன்ற அனுமதி தேவையில்லை எனவும் தற்போது அதனையும் பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளதாகவும் இந் நிலையில் ஜெர்மனியின் ஒத்துழைப்பு இலங்கைக்கு சாதகமாக அமையும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் ஏற்றுமதியில் ஐந்து சதவீதத்தினை கொள்வனவு செய்யும் நாடு ஜெர்மனி என்பது குறிப்பிடத்தக்கது. இந்த வகையில், ஜெர்மன் ஜனாதிபதி எஞ்சலோ மார்கெல்லை இலங்கை ஜனாதிபதியை சந்தித்து பேசியுள்ளார். பொருளாதார முன்னேற்றங்கள் பற்றி இருதரப்பு கலந்துரையாடல்கள் நடைபெற்றன.

அடுத்த படியாக மீன் ஏற்றுமதி தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியத்தின் தடைகள் பற்றியும் ஒஸ்திரியா ஜனாதிபதி கெய்ன் பிஸரைச் சந்தித்து ஜனாதிபதி



**மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் நல்லிணக்கத்திற்கான முன்னேற்றகரமான விடயங்கள் என்ற அடிப்படையில் முழுமையான தீர்வுத் திட்டம் முன்வைக்கப்பட முன்னர் சர்வதேசம் தன் பிடியாகவுள்ள விடயங்களை முழுமையாக இலங்கையிடம் விட்டுக்கொடுப்பது நாட்டில் ஓர் சாதக சூழ்நிலைக்கானதாக அமையுமா என்ற கேள்வியுள்ளது?**

இலங்கைக்கு அழுத்தம் தரும் விடயங்களை, தமக்கு ஓர் நிரந்தரத் தீர்வு முன்வைக்கப்படாமல் முழுமையாக விட்டுக்கொடுப்பது தமிழ் மக்களைப் பொருத்தளவில் உள்நாட்டில் நியாயமானதான மாற்றங்களைக் கொண்டுவராது என்ற பயமும் இருக்கின்றது. போரின் பின்பாக அரசியல் தீர்வை முன்வைக்க கிடைத்த சந்தர்ப்பங்களை கடந்த மகிந்த ராஜபக்ச அரசாங்கம் உதாசீனம் செய்தது. அதன் பின்னர் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தில், சமாதானத்தின் பின்னராக முழு இலங்கையும் அனுபவிக்க வேண்டிய நலன்களை இந்த நல்லிணக்கத்தினை அடைவதற்கான நகர்வுகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இக் காலகட்டத்திலேயே வழங்கிவிடுவது பொருத்தமானதாக இருக்குமா என்பது கேள்வியே!

**இவ்வாறாக நிலைமைகள் காணப்பட்ட போதும் நாட்டில் இனங்களுக்கிடையே நல்லிணக்கத்திற்காக தற்போது ஏற்படுத்த முயற்சிக்கப்படும் விடயங்கள் எல்லாம் ஓர் ஆரம்ப கட்ட முயற்சியாகவே உள்ளன. இம் முயற்சிகள் நீடித்து நிற்கத்தக்க தீர்வை தருவதற்கு முன்பாக. பொருளாதாரம் தொடர்பில் இலங்கைக்கு அழுத்தமாகவுள்ள விடயங்கள் யாவும் தணிந்து போவதை தமிழ் மக்களுக்கான நியாயமான தீர்வு வழங்கப்படுவதில் எவ்வாறான விளைவினை ஏற்படுத்தும் என்பது ஆராயப்படவேண்டியதாகும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சமையல் சமையல்

## தக்காளி அவல்

**தேவையான பொருட்கள்**

அவல் - 1 கப், தக்காளி – 1, பச்சைப் பட்டாணி - ½ கப் (வேகவைத்தது), கரட் - 1 சிறியது, பெரிய வெங்காயம் - 1, கறிவேப்பிலை – சிறிதளவு, கொத்தமல்லி – சிறிதளவு, செத்தல் மிளகாய் - 3, பெருங்காயம் - 1 சிட்டிகை, மஞ்சள் - ½ தே.கரண்டி, உப்பு - தேவையான அளவு, எண்ணெய் - 4 கரண்டி, கடலைப்பருப்பு - 1 தே.கரண்டி, உளுத்தம்பருப்பு - 1 தே.கரண்டி, கடுகு - 1 தே.கரண்டி, எலுமிச்சைச் சாறு – 2 கரண்டி

### செய்முறை



அவலுடன் மஞ்சள், எலுமிச்சைச் சாறு, உப்பு, சிறிது நீர் சேர்த்து நன்கு கிளறி 10 நிமிடம் ஊறவைக்கவும். பின்னர் பச்சைப் பட்டாணியை வேக வைத்துக் கொள்ளவும். தொடர்ந்து பெரிய வெங்காயம், தக்காளி, கரட், கறிவேப்பிலை, கொத்தமல்லி ஆகியவற்றை சிறிதாக நறுக்கி வைத்துக் கொள்ளவும்.

அடுப்பில் தாச்சியை வைத்து எண்ணெயை ஊற்றவும். எண்ணெய் காய்ந்த பிறகு கடுகு, கடலை, உளுத்தம் பருப்பு, காய்ந்த மிளகாய் சேர்க்கவும். பிறகு பட்டாணி, நறுக்கி வைத்த அனைத்தையும் சேர்த்து பச்சை வாடை போகும்வரை வதக்கவும். அதனுடன் பருப்பு, ஊறவைத்த அவலை சேர்த்து நன்கு கிளறவும். பெருங்காயம் சேர்த்து இறக்கவும். சுவையான தக்காளி அவல் தயார்.

இதற்குள் விரும்பின் அவித்த சோயா அவரையும் சேர்க்கலாம்.

## இடுப்புப் பகுதியில் உள்ள சதையை குறைக்க வேணுமா!!



இடுப்பு மற்றும் தொடை பகுதிகளில் அதிகமான அளவு கொழுப்பு சேர்ந்து கொள்கின்றது. எனவே உடல் எடையை குறைப்பதற்காக ஜிம்முக்கு செல்கிறோம், ஆனால் வீட்டிலேயே மிக எளிமையான உடற்பயிற்சியின் மூலம் சரிசெய்யலாம்.

### *Twister Crunches*

இரண்டு கால்களையும் அகட்டிய நிலையில் நிற்க வேண்டும். கைகளுக்கு ஏதுவான அளவில், பிடிப்பாக ஒரு தடி ஒன்றை தலைக்கு பின்னால் இரண்டு கைகளாலும் பிடித்துக்கொள்ளவும். இப்போது, அப்படியே இடது பக்கமாக உடலைத் திருப்ப வேண்டும். பிறகு வலது பக்கமாக உடலைத் திருப்ப வேண்டும். இதுபோல் மாறி மாறி உடலைத் திருப்ப வேண்டும். கைகள் அதே நிலையிலேயே இருக்க வேண்டும். தொடர்ந்து 15 முறை செய்ய வேண்டும்.

### *Abdominal Stretch*

தரையைப் பார்த்தபடி படுத்து இரண்டு கைகளையும் முன்னால் ஊன்றிக்கொள்ளவும். உடலோடு சேர்த்து தலையையும் தரையில் இருந்து சிறிது அடி மேலே உயர்த்தவும். மொத்த அழுத்தமும் கைகளில் இருக்கட்டும். இதே நிலையில் ஐந்து நொடிகள் இருந்து, மீண்டும் உடலை பழைய நி[illegible]க் கொண்டு செல்லவும். சிறிது இடைவெளிக்கு பின்னர் மீண்டும் த[illegible]யையும் உடலையும் மேலே தூக்கி முன்னர் செய்தது போலவே செய்ய வே[illegible]டும்.

இந்த இரண்டு பயிற்சிகளையும் தொடர்ந்து செய்து வருவதன் மூலம் இடுப்பு மற்றும் தொடை பகுதியில் உள்ள தேவையற்ற சதைகளை குறைக்கலாம்.

அழகுக் குறிப்பு

## கைகள் மிருதுவாக இல்லையா! கவலை துறங்கள்


வீட்டு வேலைகள் உட்பட பல இதர வேலைகளை செய்கையில் பெண்களின் கைகள் சொரசொரப்பாகவும், கடினமாகவும் மாறிவிடுகின்றன. கைகள் சொரசொரப்பாக இருப்பதனால், கைகள் மட்டும் பாதிக்கப்படுவதில்லை. கைகளால் முகத்தைத் தேய்த்துக் கழுவும்போது, கண்களுக்குத் தெரியாத மெல்லிய கோடுகள் முகத்தில் உருவாகும்.

இதனால் நாளடைவில் முகம் தொய்வடையக்கூடும். எனவே, விரல்களின் மென்மையை காக்க வேண்டியது அவசியம்.

தினமும் இரவு ஒரு பாத்திரத்தில், கைபொறுக்கும் சூட்டில் தண்ணீர் எடுத்துக்கொள்ளவும். அதில் ஒரு கரண்டி விளக்கெண்ணெய், ஒரு கரண்டி கிளிசரின், ஒரு கரண்டி உப்பு சேர்த்து, தண்ணீர் நன்கு ஆறும்வரை கைகளை அதில் மூழ்கும்படி வைத்திருக்கவும். இதனால் கைகள் மென்மையாவதுடன், கை வலி நீங்கி ரிலாக்ஸ் ஆகும்.

பின்னர் கைகளைத் துடைத்து விட்டு, அரை கரண்டி தேங்காய் எண்ணெய் மற்றும் அரை கரண்டி தேன் எடுத்து தேய்த்துக்கொண்டு, கைகளை சர்க்கரையில் பிரட்டவும். கை முழுவதும் சர்க்கரை ஒட்டிக்கொள்ளும்.

இப்போது இரண்டு கைகளையும் நன்கு சூடுபறக்கும் வரை தேய்க்கவும். இதனால் சர்க்கரை கரையும். சர்க்கரையில் கிளைகாலிக் ஆசிட் இருப்பதால், இது கைகளில் உள்ள இறந்த செல்களை நீக்குவதுடன், சுருக்கங்களைப் போக்கி மலர்ச்சியாக்கும்.




கைகள் சொரசொரப்பாக ஆரம்பிக்கும், காலகட்டத்திலேயே தினசரி இந்த சிகிச்சையைத் தொடர்ந்தால், மென்மை மீட்கப்படுவதுடன் தொடர்ந்து மிருதுவாக இருக்கும்.

## "கண் திறந்தே உறங்குகின்றோமா???"

### உலக நீர் தினமும், சம்பூர் நிலக்கரி மின்நிலையத்தினால் எமக்கு ஏற்படவிருக்கும் நீர் வளப் பாதிப்புக்களும்

பாகம் – 01




சு.சிவசங்கரன் M.Sc. (PDN)
முதுவிஞ்ஞானமாணி
ஒருங்கிணைந்த நீரியல்வள முகாமைத்துவம்

மார்ச் 22ம் திகதி உலக நீர் தினமாகும். கோடை காலம் அரும்பி தண்ணீர் வரட்சி ஆரம்பிக்கின்ற வேளையில் உலக நீர் தினம் கடைப்பிடிக்கப்படுகின்றது. உலகின் உன்னதங்களில் நீரும் ஒன்றாகும். பாதுகாப்பான குடி நீர் என்பது ஒவ்வொருவரினதும் மனித உரிமையுமாகும். நீரானது எமது உடல், ஆரோக்கியம், எமது சூழல் மற்றும் உணவு உற்பத்தி என்பவற்றில் மிக முக்கியமான வகிபாகமாக இருக்கின்றது.

மனித நாகரீகங்கள் யாவும் நதிக்கரைகளிலேயே தோற்றம் பெற்று வளர்ச்சியடைந்திருந்தன. சனத்தொகைப் பெருக்கம் நீருக்கான தேவையை அதிகரித்தது. கைத்தொழிற் புரட்சியின் பின்னர் அனாயாசமான தெழிற்சாலைகளின் அதிகரிப்பும் நகரமயமாதலும் விவசாய இரசாயனங்களின் அபரிமிதமான பாவனையும் நீர் மாசடைதலுக்குப் பிரதான காரணிகளாக அமைந்தன. இவைகள் சுத்தமான குடி நீருக்கான அருமைத்தன்மையை இன்னமும் மேற்கோளிட்டுக் கொண்டிருக்கின்றன. அருகி வரும் நன்னீர் வளமானது இன்று ஒரு பொருளாதாரப் பண்டமாக மாற்றம் பெற்றுள்ளது. உள்ளக மற்றும் சர்வதேச அரசியல் பொருளாதார அரங்கில் நீர் ஒரு முக்கிய பேசும் பொருளாகவுள்ளது என்பதை மறுக்க முடியாது.

உயிரினங்களின் எடையில் நீரே பிரதானமான கூறாகக்காணப்படுகின்றது. மனித உடலின் எடையில் ஏறத்தாள மூன்றில் இரண்டு பாகம் நீராகும். அதுமட்டுமின்றி உயிரின் உடற்பொறியியலில் தொழிற்பாட்டில் நீர் இன்றியமையாததாகும். அது உடலினுள் பதார்த்தங்களின் கடத்தலையும் பதார்த்த மற்றும் வெப்ப சமநிலையையும் பேணுகின்றது. உயிர் வாழ்வதற்கு நீர் மிகவும் அத்தியாவசிமாவதைப் போன்று உடற் சுகாதாரத்திற்கும் இன்றியமையாததாகும். நீர் வீண்விரயத்தையும் மாசடைதலையும் கட்டுப்படுத்தாவிடில் 2025ம் ஆண்டளவில் உலக சனத்தொகையில் அரைவாசியினர் தமது தேவைகளுக்கு போதிய நீரின்மையினால் அவதியுறுவர் என நீரியல் விஞ்ஞானிகளால் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

அருகிவரும் நீர் வளத்தையும் அதன் முக்கியத்துவத்தையும் உலக மக்கள் உணரும் நோக்குடன் ஒவ்வெரு வருடமும் மார்ச் 22ம் திகதி உலக நீர் தினமாக ஐக்கிய நாடுகள் சபையினால் பிரகடனப்படுத்தப்பட்டடுள்ளது. நீரியல் வல்லுனர்களின் மதிப்பீட்டின்படி உலகில் இன்று ஏறத்தாழ ஒரு பில்லியன் மக்கள் சுத்தமான குடிநீர் இன்றித் தவிக்கின்றனர். கல்வி, சுகாதாரம், வறுமை மிக முக்கியமாக பெண்கள் சிறுவர்களின் பாதுகாப்பு போன்றவற்றில் நீர் பற்றாக்குறை மிகப்பிரதான தாக்குகாரணியாக தொழிற்படுகின்றது.

ஆபிரிக்காக் கண்டத்தில் மட்டும் வருடமொன்றுக்கு சுமார் 4 பில்லியன் மனித மணித்தியாலயங்கள் குடிநீருக்காகச் செலவழிக்கப்படுகின்றன. இது பிரான்ஸ் நாட்டின் மொத்த மனித வலுவுக்குச் சமனாகும். எனவே சிறந்த திட்டமிட்ட முறையிலான நீர்வளப் பங்கீடும் பாவனையும் மனிதவலுவை கல்வி, தொழில் முயற்சியில் ஈடுபடுத்தும் அதேவேளை சுகாதாரம் வாழ்க்கைத்தரம் என்பன உயரும். இதன் அடிப்படையிலேயே 2016ம் வருடத்திற்கான செயற்பாட்டுக் குறிக்கோள் "நீரும் தொழிலும்" என்பதாக வரையறுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் வழமையாக உலக நீர் தினத்தில் நீர் முகாமைத்துவத்துடன் தொடர்புடைய அமைச்சரின் செய்தியும் பத்திரிகைகளில் விசேட அனுபந்தங்களும் கட்டுரைகளும் வெளியாகுவதைத் தவிர மக்கள் மத்தியில் நீர் சிக்கனம், நீர்த்தூய்மை, நீர்ச்சேமிப்பு குறித்து உருப்படியான செயற்றிட்டங்கள் எதுவும் முன்னெடுக்கப்படுவதில்லை. அத்தோடு, அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படும் வேளைகளில் நீர் மூலங்கள் மற்றும் நீர் வளங்களின் மீதான தாக்கங்கள் குறித்து முன்மொழியப்படுவதோ அல்லது விவாதித்துப் பரசீலிக்கப்படுவதோ அரிதாகவே காணப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி - 21

1. ஒரு சதுரக் காணியின் ஒரு பக்கத்தில் 8 கம்புகள் நடப்பட்டுள்ளன. ஒரு கம்பின் விலை ரூ200 எனில், இக்காணியைச் சுற்றிவரகம்புகளை நட எவ்வளவு செலவாகும்?
   1. 6,400.00  2. 5,200.00  3. 5,600.00

2. வயல்வெளி ஒன்றின் நீளம் 8m அகலம் 5m. அதனைச் சுற்றி 2 முறை நடக்கும் ஒருவர் நடந்த மொத்த தூரம் யாது?
   1. 56m  2.50m  3. 52m

3. ஒரு பண்ணையில் ஆடுகளும், கோழிகளும் இருந்தன. அவற்றின் மொத்த கால்களின் எண்ணிக்கை 100 ஆகும். அங்கிருந்த ஆடுகள் 20 எனின், எத்தனை கோழிகள் உள்ளன?
   1. 15  2. 10  3. 30

4. காலை 7 மணியளவில் நான் பாடசாலைக்குச் செல்லும் போது எனது நிழல் எனது இடது கைப்பக்கம் வந்தது எனில், நான் எத்திசை நோக்கி செல்கின்றேன்?
   1. வடக்கு  2. தெற்கு  3. மேற்கு


5.



A B C D E F

1. AE BC DF  2. AE BF CD  3. AB CD EF

6.




A B C D E F

1. AD BF CE  2. AD BE CF  3. AD BC EF

7. கடிகாரத்தில் விரிகோணத்தைக் காட்டும் நேரம் எது?
   1. 1.50  2. 1.40  3. 1.10


8. தரப்பட்ட தொடர்புக்கான சரியான வரிப்படம்?
விலங்குகள், யானை, நாய்



1. 2. 3.

9. 4,9,8 எனும் இலக்கங்களைக் கொண்டு ஆக்கக் கூடிய மிகப் பெரிய எண்?
   1. 948  2. 984  3. 489

10. 10 பேரைக் கொண்டநண்பர்கள் குழு ஒருவருக்கொருவர் ரம்ழான் வாழ்த்துதெரிவித்துக் கொண்டால், நண்பர்களிடையே பரிமாற்றிக் கொள்ளப்பட்ட வாழ்த்துக்களின் எண்ணிக்கையாது?
   1. 9  2. 90  3. 100

11. ஒரு நேர்கோட்டில்  எனும் 5 வடிவங்கள் ஒழுங்கு வரிசையில் வைக்கப்பட்டுள்ளன. இதில் 40 தாவதாகக் காணப்படும் உரு எது?
   1. 

12. 1080ml ஐ l, ml இல் தருக.
   1. 1l 80ml  2.1l 800ml  3. 10l 80ml



**புலமைப் பரிசில் வழிகாட்டல்**
**ஆசிரியர் திரு.ந.மனோகரன்**

---

# சிறுவர் முரசு






## சந்தனமா? சவுக்கா?

ஒரு அரசன் வேட்டைக்கு வந்தபோது கூட்டத்திலிருந்து பிரிந்துவிட்டான். அவனுக்குத் தாகமும் பசியும் வாட்டியது. அதுவோ அடர்ந்த காடு. மனிதர்கள் கிடைப்பார்களா என அலைந்தான். தூரத்தில் ஒருவன் சுள்ளி பொறுக்கிக் கொண்டிருப்பதைக் கண்டு அவனருகில் சென்றான்.

தாகத்துக்கு நீர் கிடைக்குமா? என்று வினவினான். அந்த ஆள் தன்னுடைய குடுவையிலிருந்த நீரைக் கொடுத்ததோடு தான் கொணர்ந்திருந்த கம்பங்கூழையும் தந்தான்.

வறுமையிலும் இரக்கக்குணத்தோடு இருந்த அவனுக்கு ஏதாவது உபயோகமான பரிசை அளிக்க விரும்பினான் அரசன். தனக்குச் சொந்தமான சந்தன வனத்தைக் காண்பித்து, வேண்டிய மரங்களை வெட்டிக்கொள்! என்று அனுமதிச் சீட்டும் வழங்கினான்.

அதற்குள், அவனது பரிவாரங்களும் அவனைப் பார்த்துவிட்டன. அரசன் அவர்களோடு சென்றான். ஆறு மாதம் கழித்து மீண்டும் வேட்டையாட வந்தான். காட்டானை அவன் கண்கள் தேடின.

அவனும் அரசனைப் பார்த்ததும் ஓடிவந்து, நல்லாயிருக்கீங்களா? உங்க உதவிக்கு ரொம்ப நன்றிங்க! என்றான்.

இப்போ வசதியாயிருக்கியா? என்று விசாரித்தான் அரசன். ரொம்ப சௌகரியமா இருக்கேங்க. ஒருவேளை அரிசிச்சோறு சாப்பிடுகிறேன். முதல் நாள் மரத்தை வெட்டினப்போ அதிகாரிங்க வந்துட்டாங்க! அனுமதிச்சீட்டைக் காண்பிச்சதும், நீ சிரமப்படாதே நாங்களே வெட்டிக்க-றோம்ன்னுட்டாங்க. முந்தி தினம் கால் ரூவா கிடைக்கும். இப்ப ஒரு ரூபாய் தராங்களே! அதோட வேலை செய்த கை சும்மா இருக்குமா? கூடமாட வெட்டறதுதான்! என்றான் அப்பாவியாக.

அரசன், ஏமாற்றுப்பேர்விழிகள் இல்லாத இடமே இல்லையா? என்று அயர்ந்து போனான். சந்தனமரத்துக்கும் சவுக்குமரத்துக்கும் வித்தியாசம் காணாதவன் சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்தான்.

இதனால் உலக அறிவும் அதிர்ஷ்டத்தைப் புரிந்து பயன்படுத்திக் கொள்வதும் முன்னேற்றத்துக்கு முக்கியம் என்பது புரியுதா ...



**"உரியவருக்கே உதவியும் செய்தல் வேண்டும்"**

---

**சிந்திக்க**


**கண்டனங்களை தாங்கிக் கொள்ளும் திடமனம் இல்லையென்றால் கடமைகளை நிறைவேற்ற முடியாது**

**பாராட்டு பெறுவோர்**

*சிசீலக்சந்தராஜா யோகேஷினி*
*01, கதிர்காம தம்பி வீதி, உப்புவெளி*

*செல்வன். கு. சதுர்ஷன்,*
*14, ஸ்ரீலங்கா ரெலிகொம் வீதி*

# மலைமுரசு



தரப்பட்டுள்ள இப்படத்திற்கு நிறந்தீட்டி மலைமுரசு அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும்.
வயதெல்லை : 12 வயதிற்கு குறைந்த மாணவர்கள் மாத்திரம்

*அனுப்ப வேண்டிய முகவரி : மலைமுரசு. இல - 159அ, கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.*

## நான் வளர்க்கும் பூனைக்குட்டி

எனது அம்மா என்னுடைய பிறந்த தின பரிசாக ஒரு பூனைக்குட்டியை வழங்கினார். அதற்கு நான் ஜாக்கி என பெயரிட்டுள்ளேன். ஜாக்கியின் உடல் பஞ்சு போன்று காணப்படும். வெள்ளை நிறத்திலான எனது ஜாக்கி என்னுடன் விளையாடும். நான் அதற்கு உணவு அளிப்பேன். நானும் ஜாக்கியும் ஒன்றாகவே சாப்பிடுவோம். சிறியவனாக இருப்பதால் அவனால் எலியை பிடிக்க முடியவில்லை. பயத்தில் என்னிடம் ஓடி வருவான். எனது அண்ணாவிற்கு எனது ஜாக்கியில் மிகுந்த பிரியம்.

*வர்ணகுலசிங்கம் சுவேதா*
*102சீ, அன்புவழிபுரம், திருகோணமலை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரன தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

01. 1.00087 என்னும் எண்ணை விஞ்ஞான முறைக் குறிப்பீட்டில் எழுதுக

02. அடிப்பரப்பளவு 154cm ஆகவுள்ள செவ்வட்டக் கூம்பு 14cm உயரமுடையது. அதன் வளைமேற்பரப்பளவைக் காண்க.

03. இரு திண்மக் கூம்புகளின் உயரம் முறையே 5 : 3 என்ற விகிதத்திலும், அவற்றின் அடி ஆரைகளின் விகிதம் முறையே 2 : 1 என்ற விகிதத்திலும் இருப்பின் அவற்றின் கனவளவுகளின் விகிதத்தைக் காண்க.

04. 6cm ஆரையுடைய உலோகத்தாலான கோள வடிவத் திண்மம் உருக்கப்பட்டு மூன்று புதிய கோள வடிவத் திண்மங்கள் செய்யப்பட்டன. இவற்றுள் இரண்டினதும் ஆரைகள் முறையே 1.5cm உம் 2cm உம் ஆயின், மூன்றாவது கோளத்தின் ஆரையென்ன?

05. ஒருவர் குறிப்பிட்ட நிதி நிறுவனம் ஒன்றிலிருந்து ரூபா60,000 ஐக் கடனாகப் பெற்றார். இக்கடனையும் வட்டியையும் சம பெறுமானம் கொண்ட 36 மாதாந்தத் தவணைகளில் கட்டி முடிக்க ஒப்புக் கொண்டார். வட்டி குறையும் நிலுவையில் 6% ஆகும்.
1. ஒரு மாதத்தில் செலுத்தப்படும் கடன் பணம் எவ்வளவு?
2. ஒரு மாதக் கடன் பணத்துக்கான ஒரு மாத வட்டி எவ்வளவு?
3. வட்டி கணிக்கப்பட வேண்டிய மாத அலகுகள் எத்தனை?
4. மொத்த வட்டி எவ்வளவு?
5. ஒரு மாதக் கட்டுப்பணம் எவ்வளவு?

06. பெறுமதி காண்க.
1. மடx = மட125 + மட 8
2. மடx + மட15 = மட35 + 2மட2 + மட12

## பாடம் : வரலாறு

1. தீபவம்சம் மகாவம்சம் ஆகியன தோன்ற முன்னர் எழுதப்பட்ட நூல்கள் 3 தருக?
2. "புராதன காலகட்டத்தில் சட்டங்களின் மூலம் சூழல் பாதுகாக்கப்பட்டது" 3. இதனை 2 உதாரணங்கள் மூலம் விளக்குக?
4. விதியபண்டாரன் சிறந்த வீரன் எனக்கூறப்பட்டமைக்கான காரணங்கள் எவை?
5. கல்வி மறுமலர்ச்சி ஏற்பட்ட துறைகளுள் 4 தருக?
6. விஜயபாகு கொள்ளை என்றால் என்ன?
7. முன் வரலாற்றுக்காலம் என்றால் என்ன?
8. வரலாற்றுக்கால குடியேற்றங்களின் கட்டமைப்பையும் தன்மைகளையும் விளக்குக?
9. வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முன் வரலாற்றுக் காலம் வரலாற்றுக்காலம் ஆகிய 3 காலப்பகுதிகளையும் ஒப்பிடுக?
10. அரசு என்றால் என்ன? 11. பெருவிருப்பு என்றால் என்ன?
12. இல்லத்தலைவர்களின் கடமைகளை தருக?
13. இலங்கையில் அரச கோட்பாடு வளர்ச்சியடைந்த விதத்தை விளக்குக?
14. அரசியல் அதிகார வளர்ச்சிக்கு துட்டகைமுனு மன்னன் ஆற்றிய பங்களிப்பை விளக்குக?
15. விஞ்ஞான தொழில்நுட்பம் என்றால் என்ன விளக்குக?
16. மகாகம வளர்ச்சி அடைந்தமைக்கான காரணங்கள் எவை?
17. தம்பதெனியா மன்னன் 3ம் விஜயபாகுவின் சேவைகள் எவை?
18. போசத் விஜயபாகு மன்னன் பற்றிய தகவல்கள் எவை?
19. பொலநறுவை வீழ்ச்சியடைய வழிவகுத்த காரணிகள் எவை?
20. முதலாவது நகராக்கம் ஏற்படுவதற்கான காரணங்கள் 2 ஐ விளக்குக?

ஆசிரியர் . திரு.த.ராஜ்குமார் (N.C.A.T/ HNDA)
Oxford கல்வி நிலையம், இலிங்கநகர், திருகோணமலை.

## Grammar

***Match the events in column A with the years in column B***

**Column A**

1. ...................... Many families had money problems.
2. ...................... The single - parent home became the most common family structure.
3. ...................... Families started moving to the suburbs.
4. ...................... The great Depression and World war II
5. ...................... The divorce rate fell.
6. ...................... The birthrate began to fall.
7. ...................... The nuclear family replaced the extended family as the most common family structure.
8. ...................... Many women went to work in factories.

**Column B**

a. early 1900s b. 1930s - 1940s c. 1950s d. 1990s

## பாடம் : தமிழ்மொழியும் இலக்கியமும்

தமிழ் இலக்கணம்

### இலக்கணத் தொடர்கள்

### பதவியல்

**குறிப்புவினைப்பெயரெச்ச விகுதிகள்**

கரிய (அ)

**தெரிநிலைவினையெச்ச விகுதிகள்**

நடந்து (உ) ஓடி (இ) உண்ணா (ஆ)
உண்ண (அ) உண்டால் (ஆல்) உண்ணாமல் (மல்)
போய் (ய்)

**குறிப்பு வினையெச்ச விகுதிகள்**

மெல்ல (அ) அன்றி (றி) அல்லது (து)
அல்லாமல் (மல்) அல்லாவழி (வழி) அல்லால் (ஆல்)
அல்லாவிடத்து (இடத்து)

**பிறவினை விகுதிகள்**

செய்வி (வி) உருட்டு (டு) போக்கு (கு) பாய்ச்சு (சு)
நடப்பி (பி) நடத்து (து) எழுப்பு (பு) பயிற்று (று)

**செயப்பாட்டு வினை விகுதி**

கட் ட்டான் (படு) கட்டுண்டான் (உண்)

**வியங்கோள் வினை விகுதி**

வாழ்க (க) வாழிய (இய) வாழியர் (இயர்)

**இடைநிலை**

பகுபதங்களில் பகுதிக்கும் விகுதிக்கும் நடுவில் நிற்கும் இடைச் சொற்கள் இடைநிலை எனப்படும். அவை பெயரிடைநிலை, வினையிடைநிலை என இருவகைப்படும்.

அ) பெயரிடை நிலைகள் - இவை காலங்காட்டுவதில்லை
எடுத்துக்காட்டு: அறிஞன் (அறி+ஞ்+அன்)
ஓதுவான் (ஓது+ வ்+ ஆன்)



**தமிழ் இலக்கியத் தொகுப்பு**

ஆசிரியர் : A. ரவீந்திரன் B.A.(Hons)Tamil Special Dip.In.Education
மாணவர் ஒளி கல்வி வளாகம்,
திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை

## பாடம் : விஞ்ஞானம்

### இரசாயனவியல்

01. A. சில இரசாயனத்தாக்கங்கள் விரைவாகவும் வேறு சில மந்தமாகவும் நடைபெறுகின்றன.

(1) இரசாயனத்தாக்கவீதம் என்றால் என்ன?

(2) இரசாயனத்தாக்கம் நடைபெற்றுள்ளது என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான சான்றுகள் 3 தருக.

(3) இரசாயனத்தாக்கத்தை அளவிடுவதற்கு எடுக்க வேண்டிய இரு அமசங்களைக் குறிப்பிடுக.

(4) திரவ, திண்ம நிலையிலுள்ள தாக்கங்களின் தாக்கவீதம் தங்கியுள்ள காரணிகள் யாவை?


(5) (1) வாயு நிலையில் தாக்கிகள் அமையும் போது தாக்கவீதம் வேறொரு காரணியில் தங்கியுள்ளது. அக்காரணி யாது?

(2) அக்காரணியுடன் தாக்கவீதம் எவ்வாறு அமையும்?

(3) மேலே உள்ள சந்தர்ப்பத்தில் நீர் கூறிய கருத்துக்கு அமைவாக தொழிற்பாடு எவ்வாறு நடைபெறுகின்றது என்பதை விளக்குக.

(6) பெரிய விறகுத்துண்டு தீப்பற்றுவதை விடசிறிய விறகுத்துண்டு இலகுவாகத் தீப்பற்றும், இதனை விளக்குக.

(7) உயிர் இரசாயனத்தாக்கங்களில் பங்குபற்றும் ஊக்கிகள் எவ்வாறு அழைக்கப்படும்? 2 உதாரணம் தருக.




01. B. படத்தில் காட்டிய உபகரணத்தை பன்சன் சுடரடுப்பில் வெப்பமேற்றுக.

(a) (1) உமது அவதானம் யாது?

(2) மாணவன் ஒருவன் தக்கை மீது சிறிதளவு எண்ணெய் பூசுமாறு கூறினான். இதனை நீர் ஏற்றுக்கொள்கிறீரா, காரணம் தருக.

(3) மேலே 2 இல் உமது அவதானத்திற்குரிய காரணம் தருக.

ஆசிரியர் . திரு.த.சேகரன் (B.Sc Agric (Hons))
Oxford கல்வி நிலையம், இலிங்கநகர், திருகோணமலை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 1957ல் திருமலை....

கொள்ளாமலே வடக்கும்கிழக்கும் சுமார் இருபத்தினான்கு வருடங்களுக்கும் மேலாக இணைக்கப்பட்டிருந்தன. முஸ்லிம் காங்கிரசைப் பொறுத்தளவில் ஸ்ரீலங்காவில் வாழும் முஸ்லிம்களைக் கருத்திலெடுக்காமல் தமிழ்த் தலைவர்களால் முன்வைக்கப்படும் இனப்பிரச்சனைக்கான எந்தவொரு தீர்வும் நிலைத்து நிற்கப் போவதில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

"நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக்கொள்ளாமல் எவராலும் அரசியலமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது. மக்கள் கருத்துக் கணிப்புக் கூட சில அடிப்படைகளின் மீதுதான் மேற்கொள்ளப்பட முடியும். ஆகவே ஒரே இரவில் இனப்பிரச்சனைக்கான தீர்வைப் பெற்றுவிட முடியாது. எனவே இனப்பிரச்சனைக்கான தீர்வைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு அனைத்துக் கட்சிகளிடையேயும் ஒரு ஒருங்கிணைப்பு அவசியமாகின்றது" எனத் தெரிவித்துள்ள ஹக்கீம் வடக்குகிழக்கு மக்கள் நினைத்தால் மட்டும் வடக்கையும் கிழக்கையும் இணைத்துவிட முடியாது. ஸ்ரீலங்காவில் வாழும் அனைத்து மக்களும் அதனை விரும்ப வேண்டும்.

இவ்வாறு வடக்கையும்கிழக்கையும் இணைப்பது தொடர்பாகச் சிலர் மலிவான கருத்துக்களை முன்மொழிந்து வருவதைப் போல அவ்விணைப்பு ஒன்றும் மலிவானதல்ல. அதனை இராசதந்திர ரீதியாகவே அனுக வேண்டும் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## திருகோணமலையில்.....

தொழிலாளர்கள் அந்தப் பாதையில் கூட்டமாக நிற்கும் சிலரால் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டு கப்பம் செலுத்துமாறு நிர்ப்பந்திக்கப்படுகின்றனராம்.

அவ்வாறு கப்பம் செலுத்தாது விட்டால் அப்பாதையின் ஊடாகப் பயணிக்க முடியாது என்று தெரிவிக்கப்படுவதுடன் கப்பம் செலுத்தாமல் நடந்து செல்ல முயற்சிப்பவர்களின் மீது தாக்குதல் நடத்தப்படும் என்றும் கூலித் தொழிலாளிகள் அச்சுறுத்தப்படுகின்றனர் எனும் நம்பத்தகு தகவல் வெளியாகியுள்ளது.

## அதிகாரிகளே....

ஊடலாடிக் கொண்டு தமிழ் மக்களுடைய நிலங்களைக் கொடுப்பதற்கு அதிகாரிகள் ஒத்துழைப்பு வழங்குவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மக்களுடைய நிலங்களை பறிகொடுப்பதற்குத் துணைநிற்கின்ற அரச அதிகாரிகளை மக்கள் அடையாளம் கண்டு செயற்பட வேண்டும் எமது மண்ணைக் காப்பாற்று- வதற்காக தேசியப் போராட்டத்தை முன்னெடுத்திருந்த போதிலும், தற்போதுள்ள அரச அதிகாரிகள் அவர்களது சுய இலாபங்களுக்காக மக்களுடைய நிலங்களைப் படையினருக்கும், ஏனையவர்களுக்கும் வழங்கிக் கொண்டிருப்பதாகவும் இவ்வாறான அதிகாரிகளின் வெட்கக்கேடான செயற்பாடுகளை மக்கள் மத்தியில் சுட்டிக்காட்ட கடமைப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## அனல் மின்நிலைய....

மக்களுக்கு அனல்மின் நிலையப் பாதிப்புக்கள் தொடர்பாக அறிவூட்டும் செயற்பாடு முன்னெடுக்கப் பட்டிருந்தது.

குழுக்களாகவும் தனியாகவும் குடும்பங்களைச் சந்தித்துள்ள இளையோர் அணி இந்நடவடிக்கைகளைச் சிறப்பாக முன்னெடுத்ததாக அறியக் கிடைத்துள்ளது.

இதேவேளை கொழும்பில் இருந்து வருகை தந்திருந்த சுற்றுச் சூழல் நிறுவனமொன்றின் அங்கத்தவர்கள் சம்பூர் அனல் மின் நிலையப்பகுதிகளைப் பார்வையிட்டுச் சென்றிருப்பதுடன் அவ்வனம் மின் பணிகள் தொடர்பாக பசுமை இயக்கம், திருகோணமலை அமைப்பினருடன் கலந்துரையாடிச் சென்றிருப்பதாகவும் தெரிகின்றது.

சுற்றுச் சூழல் அபிவிருத்திக் கம்பனி என்ற அமைப்பின் உறுப்பினர்களே இவ்வாறு வருகை தந்துள்ளனர்.



## உல்லாசத்துறை...

அத்துடன் இவ் அமைப்பின் இணையத்தள முகவரியாக www.easttourism.net எனும் இணையத்தள முகவரி உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த கிழக்கு மாகாண முதலமைச்சர், சுற்றுலாத்துறையினை பொறுத்தவரையில் கிழக்கு மாகாணத்தில் அனைத்து வசதிகளும் வளங்களும் காணப்படுகிறது என்று நினைத்தால் மட்டும் போதாது. அவற்றை நாம் அபிவிருத்தி செய்ய வேண்டும். குறிப்பாக மாகாணத்தை முதல்தர சுற்றுலாப் பிரதேசமாக மாற்ற நாம் முயல வேண்டும் மாகாணத்தில் உள்ள அனைத்து முதல்தர விடுதிகளும் வெளி மாவட்ட முதலாளிகளால் நடத்தப்படுகிறது. இந்த நிலைமை மாற்றப்பட வேண்டும் என அவர் கோரினார்.

## இந்தியாவில் இருந்து...

விநியாகித்து வருகின்றது.

மேலும் இந்த பிரச்சாரத்தின் ஒரு அங்கமாக தற்போது தமிழகத்தில் உள்ள இலங்கை தமிழ அகதிகளை கணக்கெடுக்கும் அத்துடன் அவர்களுடைய தேவைகளை பூர்த்தி செய்வது போலவும் மீள இலங்கைக்கு செல்லுவது போன்ற விடயங்களையும் அறியும் நோக்கில் 3 பக்கங்களில் அமைந்த புதிய படிவம் ஒன்று விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

குறித்த இந்த படிவ விநியோகத்திற்கு தமிழக காவல்துறையினரின் மற்றும் தமிழக அரசின் பூரண ஒத்துழைப்பு உள்ளதாகவும் அந்நிறுவனத்தின் கள அதிகாரிகள் தெரிவித்து தமிழகத்தில் உள்ள இலங்கை தமிழ அகதிகளின் விபரங்களை சேகரிக்கும் பணியில் முடுக்கி விடப்பட்டுள்ளனர்.

இந்த நிறுவனத்தின் செயற்பாடுகளை www.australia.gov.au/novisa எனும் இணையத்தில் பார்வையிடலாம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது தமிழகத்தில் தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் இந்த செயற்பாடு தமிழக அகதிகளின் மத்தியில் பரபரப்பையும் அச்சத்தையும் தோற்றுவித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## காணாமலாக்கப்பட்...

துணைப்பங்காற்றியிருந்தன.

கடந்த நவம்பர் மாதம் சர்வதேசத்தைச் சார்ந்திருந்த இரண்டு அமைப்புக்களாலும் மேற்கொள்ளப்பட்ட சந்திப்புக்களுக்கு மேலாக, காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பாக முதன்மைப்படுத்தப்பட வேண்டிய விடயங்களான ஸ்ரீலங்காவில் காணாமலாக்கப்பட்டவர்களைக் கண்டறிவதற்கான குறிக்கோள்களான உண்மையில் எத்தனைபேர் காணாமலாக்கப்பட்டுள்ளனர், காணாமலாக்கப்பட்டவர்களுக்கான அலுவலகம் போன்ற அரசின் கடமைப்பாடுகள், காணாமலாக்கப்பட்டோரியனது அவர்களது உறவினரதும் உரிமைகளை உறுதிபடுத்தத் தக்க வகையில் ஸ்ரீலங்காவின் நீதித்துறை போன்ற ஏனைய அரச நிறுவனங்களின் செயற்பாடுகள் போன்ற பல குறிக்கோள்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

## தரவையில் பெரும்....

போது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிக்காது முஸ்லிம் வேட்பாளருக்கு வாக்களித்துள்ளதை நான் வாக்கு எண்ணும் நிலையத்தில் நேரடியாகக் கண்டேன். இந்த சம்பவமானது தமிழ் மக்களை மிகவும் பாதித் திருந்தது. எமது இளைஞர்களின் போராட்டத்தை நேரடியாக பார்த்த இந்த பிரதேச மக்கள் அவர்களின் தியாகங்களை மறந்து அவர்களை கொச்சைப்படுத்தும் வகையில் மாற்றுக் கட்சிக்கு வாக்களித்துள்ளீர்கள்.

தமிழர்களுடன் இணைந்து இஸ்லாமிய மாணவர்கள் கல்வி கற்கக்கூடாது என இஸ்லாமியர்களுக்கு தனியானதொரு கல்வி வலயத்தை உருவாக்கி இனவாதத்தை தூண்டிய பிரதியமைச்சர் அமீர் அலிக்கு இந்த பிரதேச மக்கள் வாக்களித்துள்ளீர்கள். தமிழ், முஸ் லிம் மாணவர்கள் ஏன் இணைந்து படிக்க முடியாது?

அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட சமுர்த் திக் கொடுப்பனவை நேரில் சென்று வழங்கினார் என்பதற்காக தமிழ் இனத்தின் ஒரேயொரு உரிமையாக இருக்கின்ற வாக்குகளை இஸ்லாமிய மகனுக்கு வழங்கி எமது இனத்தை கொச்சைப்படுத்தியிருக்கிறீர்கள்.

உங்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிடிக்கவில்லை என்றால் ஏனைய கட்சிகளில் போட்டியிட்ட தமிழனுக்கு வாக்களித்திருக்கலாம். தமிழ் மக்கள் தமது சொந்த நிலத்தில் நிம்மதியாக வாழ வேண்டும் என்பதற்காக நாங்கள் இன்றுவரை போராடிக் கொண்டிருக்கிறோம்.

இந்த பிரதேச மக்கள் வாக்களிக்கவில்லை என்பதற்காக நாங்கள் அபிவிருத்தி நடவடிக்கைகளை புறந்தள்ள மாட்டோம். சகல அபிவிருத்தி நடவடிக்கைகளும் இந்த பிரதேசங்களில் நடைபெறும் அதில் பாரபட்சம் காட்டமாட்டோம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கிரான் பிரதேச செயலாளர் பிரிவில் குடும்பிமலை பகுதியில் திட்டமிட்டமுறையில் சிங்களவர்கள் குடியேற்றப்பட்டுள்ளார்கள். பெரும்பான்மை இனத்தவர் எங்களது பிரதேசத்தை சுவீகரிப்பதற்காக எமது இனத்தின் விடுதலைக்காக, எமது மக்களுக்கு நியாயபூர்வமான சுதந்திரத்தைப் பெற்றுக்கொடுப்பதற்காக தங்களைத் தியாகம் செய்து போராடி உயிர்நீத்த எமது உறவுகளை அடக்கம் செய்த துயிலும் இல்லத்திலிருந்த கட்டடங்களை இடித்து சிங்கள மக்களுக்கு காணி பெற்றுக்கொடுக்க நடவடிக்கையெடுக்கப்படுகிறது. இதனை நாங்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம். இறந்த உறவுகளின் கட்டடங்களை கூட பாதுகாக்க முடியாதவர்களாக எங்களை இந்த அரசாங்கம் உருவாக்குகிறது. நல்லாட்சி எனக் கூறும் அரசாங்கம் அதர்மமான செயல்களில் ஈடுபடக்கூடாது. எமது உறவுகள் அடக்கம் செய்யப்பட்ட பகுதிகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## மாணவர்களுக்...

காவல்துறையினரின் முன்பாக மன்னிப்புக் கோரியுள்ளார் என்று குறித்த மாணவரின் பாதுகாவலர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 16ம் திகதி பாடசாலை முடிவடைந்தபோது மாணவர்களைச் சமாளிப்பதற்காக நான்கு மாணவர்கள் ஆசிரியரொருவரால் தடியடிக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

குறித்த நான்கு மாணவர்களையும் கரும்பலகைக்கு முன்பாக நிறுத்தி கண்களையும் வாயையும் மூடும் படித் தெரிவித்தே இத்தடியடி நடந்துள்ளதாக மாணவரொருவர் தெரிவித்தார்.

முதுகுப்புறம் காயமடைந்த மாணவரொருவர் வீட்டிற்குச் சென்று விடயத்தை வெளிப்படுத்தியவுடன் அதேதினம் மாலை 2.30 மணியளவில் தம்பலகாமம் காவல்துறையில் காயமடைந்த மாணவரின் பாதுகாவலரால் முறைப்பாடொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

காயமடைந்த மாணவனின் தகப்பனார் காணாமலாக்கப்பட்டவரென்பதும் தாயாரும் அம்மாணவனை விட்டுச் சென்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அடுத்தநாள் இவ்விடயம் தொடர்பான விசாரணைகளை கோட்டக்கல்வி அதிகாரி மேற்கொண்டிருந்ததாகவும் பின்னர் மாலை காவல்துறையில் மீண்டும் முறைப்பாடு தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்ட போது குறித்த ஆசிரியர் பாதுகாவலரிடம் மன்னிப்பைக் கோரி விடயத்தைச் சமாதானமாக முடித்துக்கொண்டதாகவும் தெரியவந்துள்ளது.

குறித்தவிடயம் தொடருபாகத் தகவலைப் பெற்றுக்கொள்ள பாடசாலை அதிபரிடம் வினவியபோது எவரும் மன்னிப்புக் கோரவில்லை என்றும் காவல்துறையால் சமாதானமாகப் போகும்படி கோரப்பட்டதை அடுத்துச் சமாதானமாகச் சென்றதாகவும் இவ்வாறான விடயங்களை வெளிக்கொணர்வது கல்விச் சமூகத்திற்கு நல்லதல்ல என்றும், செய்தி தவறாக இருப்பின் பத்திரிகையின் மீது வழக்குத்தாக்கல் செய்வேன் என்றும் தெரிவித்திருந்தார்.

## கூட்டமைப்பு இனிக்....

செல்வம் அடைக்கலநாதன், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் சார்பில் அதன் செயலாளர் சிவசக்தி ஆனந்தன் மற்றும் க.சர்வேஸ்வரன், இரா. துரைரெட்ணம் ஆகியோரும், தமிழரசுக் கட்சியின் சார்பில் மாவை சேனாதிராசா, எம்.ஏ. சுமந்திரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கடந்த காலங்களில் கூட்டமைப்பின் தலைவரும் சில முக்கியமானவர்களும் மட்டும் முடிவுகளை எடுத்துச் செயற்பட்டமை தொடர்பாக கவலை வெளியிடப்பட்ட போதே பங்காளிக் கட்சித் தலைவர்களிடையே பொது இணக்கப்பாடொன்று எட்டப்பட்டு இனிக் குழுவாகக் கூட்டமைப்பு இயங்கும் எனத் தெரிவிக்கப்பட்டதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## இப்றாஹீம் நபியின் விவாதம்
### (அல் குர் ஆனின் விளக்கம்)

தனக்கு அல்லாஹ் ஆட்சியைக் கொடுத்ததற்காக (கர்வம் கொண்டு) இப்றாஹீமிடம் அவரது இரட்சகன் விடயத்தில் தர்க்கம் செய்தவனை (நபியே!) நீர் கவனிக்கவில்லையா?
இப்றாஹீம், 'எனது இரட்சகனே உயிர்ப்பிப்பவனும் மரணிக்கச் செய்பவனுமாவான்' என்று கூறியபோது 'நானும் உயிர்ப்பிப்பேன், மரணிக்கச் செய்வேன்' என்றான். (அதற்கு) இப்றாஹீம் 'அப்படியானால் நிச்சயமாக அல்லாஹ் சூரியனைக் கிழக்கிலிருந்து உதிக்கச் செய்கின்றான். ஆகவே, அதனை நீ மேற்கிலிருந்து உதிக்கச்செய் (பார்க்கலாம்) என்றார். உடனே நிராகரித்த அவன் வாயடைத்துப் போனான். அல்லாஹ் அநியாயக்கார கூட்டத்தை நேர்வழியில் செலுத்தமாட்டான்.' (2:258)

இப்றாஹீம் நபியவர்கள் தனது காலத்தில் வாழ்ந்த அரசனுடன் நடத்திய விவாதம் குறித்து இந்த வசனம் பேசுகின்றது. நம்ரூத் எனப்படும் இவ்வரசனுக்கு அல்லாஹ் மகத்தான ஆட்சியைக் கொடுத்திருந்தான். ஆணவம் கொண்ட அவன் தன்னைத் தானே கடவுள் எனக் கூறிக் கொண்டான். இப்றாஹீம் நபியவர்கள் அல்லாஹ் ஒருவனை மட்டுமே வணங்க வேண்டும் என்று பிரச்சாரம் செய்தார்கள். உனது இறைவன் யார்? என இப்றாஹீம் நபியிடம் அவன் கேட்டான். அல்லாஹ்வின் இரண்டு பண்புகளை அவர் கூறினார். ஆக்கவும், அழிக்கவும் ஆற்றல் பெற்றவன். படைப்புக்களை புதிதாக உருவாக்குபவனும் அவற்றை அழிப்பவனுமாகிய அல்லாஹ்வே என் இறைவன் என்று கூறினார்கள்.

நான்தான் கடவுள் என்று கூறுபவனிடம் கடவுள் ஒருவன் இருக்கின்றான், அவன் ஆக்கவும், அழிக்கவும் ஆற்றல் பெற்றவன் என இப்றாஹீம் நபி கூறிய போது ஆணவம் கொண்ட அவன், ஆக்குபவனும் அழிப்பவனும் நானே என்று வாதிட்டான். அவனது இந்த வாதம் தவறானது.

தொடரும் .. ..

– இஸ்மையில் ஸலஃபி –

## ஜெபம்


**வானதூதர்களை கடவுள் படைத்ததாக விவிலியத்தில் சொல்லப்படவில்லை. அவர்களைப் படைத்தது யார்?**

நாயை கடவுள் படைத்ததாக விவிலியத்தில் சொல்லப்படவில்லை. இருந்தாலும் கடவுள்தான் நாயைப் படைத்தார். ஏனெனில் அனைத்தையும் படைத்தவர் கடவுளே! உடல் ஏதும் இல்லாமல் சுத்த அரூயஅஷ்பியான வானதூதர்கள் உட்பட.

அவருடைய தூதர்களே, நீங்கள் யாவரும் அவரைப் போற்றுங்கள் அவருடைய படைகளே, நீங்கள் யாவரும் அவரைப் போற்றுங்கள். அவை ஆண்டவரின் பெயரைப் போற்றட்டும் ஏனெனில், அவரது கட்டளையின்படி எல்லாம் படைக்கப்பட்டன. - திருப்பாடல்கள் 147:2,5

**எரியூட்டப்பட்ட உடலை கடவுள் எவ்வாறு உயிர்பிக்கமுடியும்?**

நம்மைப் படைத்தவர் கடவுள். நம்மை [illegible]டாக்கிய கடவுள் நாம் மண்ணில் [illegible]னாலும், சாம்பலாகப் புதைந்தாலும் நம உடலை உயிர்ப்பிக்கவல்லவர். உயிர்த்தெழும் போது அது சாதாரண உடலாக இருக்காது. மகிமைபெற்ற மாற்றுரு பெற்ற உடலாகவே அது



விண்ணகம் செல்லும்.

சகோதர சகோதரிகளே! இறந்தோரைப் பற்றி நீங்கள் அறிந்திருக்க வேண்டும் என நாங்கள் விரும்புகிறோம் எதிர்நோக்கு இல்லாத மற்றவர்களைப் போல் நீங்களும் துயருறக் கூடாது. இயேசு இறந்து உயிர்த்தெழுந்தார் என நாம் நம்புகிறோம். அப்படியானால், இயேசுவோடு இணைந்த நிலையில் இறந்தோரைக் கடவுள் அவருடன் அழைத்து வருவார். - 1தெசலோனிக்கர் 4:13-14.

**மோட்சம் நரகம் உண்டா?**

தொடரும் ..

www.bible.me

## இவ்வார இராசி பலன்

**மேஷம்** : தாழ்வு மனப்பான்மை விலகும். வளர்ச்சிப்பாதையில் நடைபோடுவீர்கள். எதிரியின் கெடுசெயல் பலமிழக்க வைக்கும். வியாபாரத்தில் விற்பனை அதிகரிக்கும்.

**ரிஷபம்** : தாமதமான பணிகளை சமயோசிதமாக விரைந்து முடிப்பீர்கள். பேச்சில் நிதானமாக இருப்பது நற்பெயர் பெற்றுத் தரும். சேமிப்பு பணத்தை செலவழிப்பீர்கள்.

**மிதுனம்** : உழைப்பிற்கான பலன் முழு அளவில் கிடைக்கும். வீட்டுக்கு தேவையான பொருட்கள் கிடைக்கும். பணவரவு அதிகரிக்கும். வழக்கு விவகாரத்தில் வெற்றி கிடைக்கும்.

**கடகம்** :வசீகரமாக பேசி காரியம் சாதிப்பீர்கள். செயல்களை திட்டமிட்டு நிறைவேற்றுவீர்கள். வழக்குகளின் நெருக்குதல் குறையும். லாபம் சுமாராக இருக்கும்.

**சிம்மம்**:மனதில் புத்துணர்வு பிறக்கும். பெரிய திட்டங்களை நிறைவேற்ற உரிய தருணம் வரை பொறுத்திருக்கவும். வியாபாரத்தில் அளவான மூலதனம் இட்டால் போதும்.

**கன்னி**:பணிகளை முழு முயற்சியுடன் நிறைவேற்றுவீர்கள். கடன் தொந்தரவு குறையும். பொறுமை தேவை. தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற கூடுதல் உழைப்பு உதவும்.

**துலாம்** : மனதைரியம் சிறப்பாக அமைந்து வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தும். உடல்நிலை சீராக இருக்கும். வழக்கு, விவகாரங்களில் வெற்றி கிடைக்கும்.

**விருச்சிகம்** :மற்றவர்கள் விடயத்தில் தலையிட வேண்டாம். உடல்நிலை சுமாராக இருக்கும். சுமாரான லாபம் இருக்கும். சலுகை கிடைக்க தாமதமாகலாம்.

**தனுசு** :உங்கள் எண்ணங்களில் புதுமையான கருத்து உருவாகும். உறவினர்கள் மனமறிந்து பேசி நற்பெயர் பெறுவீர்கள். அபிவிருத்தி பணி சிறப்பாக நிறைவேறும்.

**மகரம்** :கடந்த கால நற்செயலுக்கான நன்மை தேடி வரும். புதிய திட்டங்களை வடிவமைப்பீர்கள். சிரம சூழ்நிலைகளும் அனுகூலம் தருவதாக மாறும். பணவரவு அதிகரிக்கும்.

**கும்பம்**:ஆர்வமுடன் பணிகளில் ஈடுபடுவீர்கள். எதிர்பார்த்த சுபசெய்தி வரும். வியாபாரத்தில் வருகிற இடையூறுகளை சரி செய்வதால் பணவரவு சீராகும்.

**மீனம்** : திட்டமிட்ட செயல்கள் எளிதில் நிறைவேறும். பணவரவு சுமாராகவே இருக்கும். சிக்கனம் தேவை. எதிர்ப்புகள் விலகி வாழ்வில் முன்னேற்றம் உருவாகும்.

## காணல் நீர்

அம்மா எனும் சொல்லில் அவசரமாய் திரும்பினார் ஈஸ்வரி .அவரின் சின்ன மகள் அழைப்பு அது. கூடவே தங்கையின் கைகளிலே அடக்கமாயிருந்த பெரியமகள் மீராஅவள் அழகு. தேவதை தோற்றம் மெய்மறக்க செய்தது.

அன்று நடந்தது, இன்றுடன் ஆறுவருடங்கள் கடந்து விட்டன, ஆனால் அதன் பாதிப்பு, வடுவாய் வலியாய் இதயத்தில் அனலாய்! நினைக்க முடியாத கொடுமையாய். காலம் செய்த விதியின் கோலத்தால் இவர்கள் வாழ்விலும் தீராத சோகம்.

வீட்டின் செல்லமகள் மீராவின் திருமண ஏற்பாடுகள் மாமா மச்சாள் பெரியண்ணன் சின்னண்ணன் என வீடு முழுவதும் சந்தோசக் கலகலப்பு. மீரா., அழகிலே அத்தனை ஐஸ்வரியமும் அடங்கிய பெண்ணவள். பார்ப்பவர் கண்களை திரும்பி பார்க்கவைக்கும் காரிகை அவள் . பொன் மின்னும் மேணி பொன்னே தேவையில்லா புன்னகை அரசியவள்.

சிநேகிதி கல்யாணத்தில் கண்டு கொண்ட மாப்பிள்ளை வீட்டார் கனடாவில் இருக்கும் மகனுக்காய் பேசி வந்தார்கள். இருபக்க பேச்சும் முடிந்த பின்னர் இருவரும் சிட்டுக்களாய்ச் சிறகடித்தார்கள். அனுமதிக்கப்பட்ட காதலர்கள் அல்லவா 10 நாள் லீவில் வந்து சட்டப்படி விவாகப் பதிவு செய்து விட்டுச் சென்ற மாப்பிள்ளை, அடுத்த மாதமே வந்து நின்றார்.

மீராவை திருமணம் செய்வதற்காய் மனம் ஒத்து போன பின் தாமதம் ஏனோ. என இருவீட்டாரும் சந்தோஷமாய் ஏற்பாடுகளை கவனித்தார்கள் வேளாண்மை தொழிலானாலும் செல்வச் செழிப்போடு வாழ்ந்த குடும்பம் மீராவுடையது,

அவளுக்கும் தான் [illegible]

படிப்பு, அன்புத் தங்கை அண்ணன் என அமைதியான குடும்பம் நாட்டில் மட்டும் இடைக்கிடையே இன்னல். தமிழனின் தலைவிதி அது.

அதுதான் இவர்கள் வாழ்க்கையையும் புரட்டி போட்டதோ.. கல்யாணத்திற்கு இன்னும் இரண்டு நாட்கள் கல்யாணப் பெண்ணோ வெட்கத்தில். தோழிகள் மீராவுக்கு மருதாணி இட்டு அவளழகை இன்னும் மெருகேற்ற அந்த அறையே கலகலப்பானது.

திடீரென பல வெடிச் சத்தங்கள். அதைத் தொடர்ந்து கூடவே அழுகைக் குரல்கள் தொடந்து கேட்கையில் என்ன செய்வதென அறியாது அந்த குடும்பம் திகைத்து நிற்கின்றது. கண் முன்னே அடுத்த வீட்டில் குண்டு விழ, இவர்களும் இங்கு இருக்க முடியாது என புறப்படுகிறார்கள்.

ஆனால் மீரா மட்டும் தனது எதிர்காலக் கணவர் வசந்தன் வந்து நிற்கின்றாரே அவருக்கு ஏதும் ஆகிடுமோ என்ற பரபரப்பில் நிம்மதி இழந்தவளாக காணப்பட்டாள். அவள் நிலையைப் புரிந்து கொண்ட அண்ணன் குமரன், சரி நான் போய் பார்த்து வாரன் அவரை, என புறப்பட்டான் ..

கொஞ்சம் தூரம் போவதற்குள் சேதி வருகிறது, வசந்தன் வந்து கொண்டிருக்கும் போது குண்டு வீழ்ந்ததில் அந்த இடத்திலேயே அகால மரணம் என.... குடும்பமே ஸ்தம்பித்து நிற்கிறது.

மீரா சிரித்த இறுதி சிரிப்பு அது. இன்று உயிர் இருந்தும் நடைப்பிணமாய், இன்னொருவர் உதவியுடன் வாழ்கிறாள்! அவளின் கல்யாண வாழ்க்கை காணல் நீரானது. அத்துடன் முடிந்ததா இல்லை.

தொடரும் ...

– – கவிச்சுடர் சிவரமணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூர் விளையாட்டு செய்திகள்

விளையாட்டு முரசு

## வருடாந்த இல்ல விளையாட்டு போட்டி

## - விபுலானந்தா கல்லூரி -





விபுலானந்தா கல்லூரியின் வருடாந்த விளையாட்டுப்போட்டி பாடசாலையின் அதிபர் திரு. ஜெரோம் அவர்களின் தலைமையின் கீழ் வள்ளுவர், இளங்கோ, நாவலர் மற்றும் பாரதி எனும் நான்கு இல்லங்களுக்கிடையே இடம்பெற்றது. இதில் அதிதிகளாக உடற்கல்வி சேவைக்கால ஆலோசகர் திருமதி எஸ்.இராஜதுறை அவர்களும் மாவட்ட அரசாங்க அதிபர் என்.ஏ.ஏ. புஸ்பகுமார அவர்களும் மற்றும் வலயக்கல்வி அலுவலகத்தின் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி மைதிலி பாலகுமார் அவர்களும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

இப்போட்டியில் 333 புள்ளிகளுடன் நாவலர் இல்லம் 3ம் இடத்தையும், 453 புள்ளிகளுடன் இளங்கோ இல்லத்தினர் 2ம் இடத்தையும், 470 புள்ளிகளுடன் வள்ளுவர் இல்லம் இவ்வருடத்திற்கான சம்பியன் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

வெற்றி பெற்ற அனைவருக்கும் அதிதிகளினால் கோப்பைகளும், கேடயங்களும் வழங்கி வைக்கப்பட்டன.





## அரையிறுதிக்குள் நுழைந்தனர் செரீனா மற்றும் ரட்வன்ஸ்கா

டென்னிஸ்


இடம்பெற்றுவரும் பி.என்.பி பரிபஸ் பகிரங்க டென்னிஸ் தொடரின் (இந்தியன் வெல்ஸ்) பெண்கள் பிரிவின் அரையிறுதிச் சுற்றுக்கு செரினா வில்லியம்ஸ், அக்னியஸ்கா ரட்வன்ஸ்கா ஆகியோர் தகுதி பெற்றதோடு, ஆண்கள் பிரிவின் காலிறுதிச் சுற்றுக்கு நொவக் ஜோக்கோவிக், ர.ஃபேல் நடால், கெய் நிஷிகோரி, ஜோ-வில்பிரட் சொங்கா ஆகியோர் தகுதி பெற்றுள்ளனர்.

பெண்களின் காலிறுதிச் சுற்றுப் போட்டிகளில், உலகின் முதல் நிலை வீராங்கனையான செரினா வில்லியம்ஸ், உலகின் ஐந்தாம் நிலை வீராங்கனையான றோமானியாவின் சிமோனா ஹலெப்பை தோற்கடித்ததுடன், உலகின் மூன்றாம் நிலை வீராங்கனையான போலந்தின் அக்னியஸ்கா ரட்வன்ஸ்கா, ஒன்பதாம் நிலை வீராங்கனையான செக். குடியரசின் பெட்ரா குவிற்றோவாவை தோற்கடித்தார்.

ஆண்களின் நான்காம் சுற்றுப் போட்டிகளில், உலகின் முதல் நிலை வீரரான சேர்பியாவின் நொவக் ஜோக்கோவிச், ஸ்பெய்னின் பெலிசியனோ லொப்ஸியை தோற்கடித்ததுடன், உலகின் ஐந்தாம் நிலை வீரரான ஸ்பெய்னின் ர.ஃபேல் நடால் ஜெர்மனியின் அலெக்ஸான்டர் சுவேரிவ்வை தோற்கடித்தார்.

உலகின் ஆறாம் நிலை வீரரான ஜப்பானின் கெய் நிஷிகோரி, தரவரிசையில் 11ஆம் இடத்திலுள்ள ஐக்கிய அமெரிக்காவின் ஜோன் இஸ்னரை தோற்கடித்ததுடன், உலகின் ஒன்பதாம் நிலை வீரரான பிரான்ஸின் ஜோ-வில்பிரைட் சொங்கா, ஒஸ்திரியாவின் டொமினிக் தெய்மை தோற்கடித்தார்.





## மைதானத்தில் நிலை குலைந்த வீராங்கனை

கிறிக்கட்

மகளிர் டி20 உலகக்கிண்ணப் போட்டியில் மேற்கிந்திய தீவுகள் - பாகிஸ்தான் அணிகள் மோதிய ஆட்டத்தில் மேற்கிந்திய தீவுகள் அணி 4 ஓட்டங்களால் பாகிஸ்தானை வீழ்த்தியது. இந்த போட்டியின் போது பாகிஸ்தான் துடுப்பெடுத்தாடும் போது அந்த அணியின் தொடக்க வீராங்கனை ஜவேரியா கான் (27), பவுன்சர் பந்து தாக்கி காயமடைந்தார்.

மேற்கிந்திய தீவுகளின் வேகப்பந்து வீச்சாளர் மிலியா கானெல் பவுன்சராக வீசிய ஒரு பந்து, ஜவேரியா கானின் கையை பதம் பார்த்தது. பிறகு ஹெல்மெட்டையும் கடுமையாக தாக்கியது. இதில் ஜவேரியா கான் மைதானத்திலே நிலைகுலைந்து விழுந்தார். பின் உடனடியாக அவர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.



## ரஷ்யாவிற்கு பங்குபெற தடை

தடகள போட்டி

தடகளச் சம்மேளனங்-களுக்கான சர்வதேசச் சங்கத்தின் உலக உள்ளக சம்பியன்ஷிப் போட்டிகள் ஆரம்பமாகியுள்ள நிலையில், ரஷ்யாவைச் சேர்ந்த தடகள வீரர்கள், இத்தொடரில் பங்குபற்றுவதற்குத் தடை விதிக்கப்-பட்டதால் பங்குபற்றியிருக்கவில்லை. இந்நிலையில், இந்தத் தடை, இவ்வாண்டு இடம்பெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளிலும் தொடர வேண்டுமென, பிரித்தானியாவைச் சேர்ந்த தடகள வீரரான லின்சி ஷார்ப் தெரிவித்துள்ளார். ரஷ்ய அரசாங்கத்தால் ஆதரவளிக்கப்பட்டு, ஊக்கமருந்துப் பாவனை இடம்பெற்றதாகக் குற்றஞ்சாட்டி, ரஷ்ய தடகளச் சம்மேளனத்தை, தடகளச் சம்மேளனங்களுக்கான சர்வதேசச் சங்கம், கடந்தாண்டு நவம்பரில் இடைக்காலத் தடைக்கு உள்ளாக்கியிருந்தது. இதனால், அந்நாட்டு வீரர்கள், போட்டிகளில் பங்குபற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

2012ஆம் ஆண்டு ஐரோப்பிய சம்பியன் போட்டிகளில் வெள்ளிப் பதக்கம் வென்றிருந்த லின்சி, முதலிடத்தைப் பெற்ற ரஷ்ய வீராங்கனையான யெனிலா அர்ஸகோவாவின் பதக்கம், ஊக்கமருந்துப் பாவனை காரணமாகப் பறிக்கப்பட்ட போது, தங்கப் பதக்கத்தைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## ஐ.நா வின் தூதுவர் பதவி பறிமுதல்



தடைசெய்யப்பட்ட ஊக்கமருந்துப் பாவனை [illegible]ாக இடைக்காலத் தடைக்குள்ளாக்-கப்பட்டுள்ள ரஷ்யாவைச் சேர்ந்த டென்னிஸ் வீராங்கனையான மரியா ஷரபோவாவின், ஐக்கிய நாடுகளின் நல்லெண்ணத் தூதுவர் பதவி, இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மெல்டோனியம் என்ற ஒரு வகையான ஊக்கமருந்துப் பதார்த்தத்தை உட்கொண்டார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டே, மரியா ஷரபோவாவுக்கு இடைக்காலத் தடை விதிக்கப்பட்டிருந்தது. அவ்விடயம் தொடர்பான விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையிலேயே, ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்துக்கு 2007 முதல் அவர் நல்லெண்ணத் தூதுவராக இருந்து வந்த நிலையில், அப்பதவியே இடைநிறுத்தப்பட்டுள்ளது. உடலாரோ-க்கியக் காரணங்-களுக்காகக் கடந்த 10 ஆண்டுகளாக குறித்த மருந்தைப் பயன்படுத்தி வந்ததாகவும், இவ்வாண்டு ஜனவரி முதல் அது தடைப்பட்டியலில் சேர்க்கப்பட்ட-மையைக் கவனித்திருக்கவில்லை எனவும் ஷரபோவா தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "போக்குவரவைச் சீர் செய்வோம்"

## மாகாண முதலமைச்சரின் தலைமையில் கலந்துரையாடல்



கிழக்கு மாகாணத்தில் அதி சிறந்த பிரயாணிகள் போக்குவரவுச் சேவையை உறுதிப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் கடந்த 17ம் திகதி கிழக்கு மாகாணசபையின் ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்றது.

கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், கிழக்கு மாகாண சிரேட்ட பிரதிக் காவல்மா அதிபர் லலித் ஜெயசிங்க மற்றும் கிழக்கு மாகாண வீதி பயணிகள் போக்குவரவு அதிகார சபையின் தலைவர் சமந்த அபயவிக்கிரம உள்ளிட்ட பலர் கலந்கொண்டனர்....

பக் 17

# உல்லாசத்துறை மேம்பாட்டிற்கு இணையத்தளம்

கிழக்கு மாகாண சுற்று - லாத்துறை மேம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கிழக்கு மாகாண சுற்றுலா அபிவிருத்தி மன்றம் மற்றும் சுற்றுலா மன்ற- த்திற்கான இணையத்தள முகவரி என்பன ஆரம்- பித்து வைக்கப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் மற்றும் பல அரச அதிகாரிகள் உட்பட கிழக்கு மாகாணத்தில் காணப்படும் பிரதான ஹோட்டல்களின் உரிமையாளர்கள் கலந்து கொண்டனர்.

பக் 17



# அதிகாரிகளே அரச படைக்குக் காணிகளை வழங்கப் போட்டி

## பிரசன்னா இந்திரகுமார் குற்றச்சாட்டு

மட்டக்களப்பு மண்முனை தென்எருவில்பற்று பிரதேசக் காணியொன்றை விசேட அதிரடிப்படையினருக்கு வழங்குவதற்காக அதிகாரிகள் போட்டிபோட்டுக் கொண்டு செயற்படுவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபையின் பிரதித் தவிசாளர் பிரசன்னா இந்திரகுமார் குற்றஞ்சுமத்தி உள்ளார்.

மண்முனை தென்எருவில்-பற்றிலுள்ள காணியை அதிரடிப்படையினருக்கு வழங்குவதற்காக அதிகாரிகள் செயற்படுவதாகவும் , அதிகார த்தில் நிலைத்து நிற்க- வேண்டும், பதவியுயர்வுகள் கிடைக்க வேண்டும், என்ற நோக்கத்தோடு மத்திய அரசுடன்

பக் 17

# அரசு, த.தேகூவுடன் பேச வேண்டும்

இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்தப்பட வேண்டும் என வலியுறுத்தி பிரேரணை ஒன்றை நாடாளுமன்றத்தில் சமர்பிக்கப் - படவுள்ளதாக தெரிவிக்கப் - படுகின்றது.

கூட்டமைப்புடன் நடத்தப்படும் பேச்சுவார்த்தையில் எடுக்கப்படும் தீர்மானங்களை புதிய யாப்பில் உள்ளடக்க வேண்டுமெனவும் அந்தப் பிரேரணையில் வலியுறுத்தவுள்ளதாகவும் த.தே.கூ வின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# கூட்டமைப்பு இனிக் குழுவாகவே செயற்படும்

## இரா. சம்பந்தன் உறுதி



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது இனிவரும் நாட்களில் குழுவாகவே செயற்படும் என்றும் குழவா -கவே இயங்கும் என்றும், குழுவாகவே தீர்மானங் - களை மேற்கொள்ளும் என்றும் அக்கூட்ட - மைப்பின் தலைவரும், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பி - னரும், ஸ்ரீலங்காவின் எதிர்க்கட்சித் தலைவரு - மான இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார் எனச் சர்வதேச ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும் அச்செய்தியில் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடந்த 17ம் திகதி மாலை கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்ற போதே சம்பந்தன் இவ்வாறு தெரிவித்துள்ளார் என்றும்,

இக்கூட்டத்திற்கு புளொட் சார்பில் எவரும் கலந்து கொள்ளாத நிலையில் தமிழீழ விடுதலைக் கழகத்தின் சார்பில்.......

பக் 17

# புலமைப் பரிசிற் கல்விக்கான நிதியுதவி



கப்பல்துறை தமிழ் வித்தியாலயத்தின் புலமைப் பரிசில் கல்வி நடவடிக்கையை மேம்படு- த்தும் நோக்குடன் மாதிரி வினாப்பத்திரங்களைப் பெற்றுக்- கொள்வதற்கான நிதி உதவியை திருகோணமலையின் இளம் வர்த்தகர்களுள் ஒருவரான திரு. புஸ்கரன் அவர்கள் வழங்கி வைத்தார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி விடுத்த வேண்டுகோளுக்கு அமைய வழங்கப்பட்ட இந் - நிதியுதவியை அக்கட்சியின் திருகோணமலை மாவட்ட அமைப் - பாளர் இரா.சிறீஞானேஸ்வரன் பாடசாலை அதிபரிடம் கையளித்தார்.

# இந்தியாவிலிருந்து தமிழ் அகதிகளை அனுப்பும்

## நடவடிக்கை தீவிரமாக முன்னெடுக்கப்படுகிறது?


முதற்தடவையாக திருகோணமலையில் அனைத்து வசதிகளையும் கொண்ட ஒவ்செற் அச்சுப் பதிப்பு நிலையத்தை வாடிக்கையாளரின் வசதி கருதி நிறுவியுள்ளோம்

ஸ்ரீராம் பிறிண்டர்ஸ்

SHRIRAM PRINTERS

தங்களுடைய புத்தகங்கள், திருமண அழைப்பிதழ்கள், சஞ்சிகைகள், துண்டுப்பிரசுரங்கள், வாழ்த்துமடல்கள், மற்றும் அனைத்து வகையாக ஒவ்செற் அச்சுப்பதிப்புக்களும் வாடிக்கையாளர்களின் விருப்பத்திற்கேற்ப அழகாகவும் வர்ணமயமாகவும் திறம்பட செய்து தரப்படும்.

159A, கடல் முக வீதி.
திருகோணமலை.
0777 555 738


அகதிகளாக இடம்பெயர்ந்து இந்தியாவில் உள்ள ஈழத் தமிழ் அகதிகளை இரகசியமாக ஸ்ரீலங்கா - விற்கு அனுப்பும் திட்டமொன்று முன்னெடுக்கப்படுவதாகச் சர்வதேச ஊடகமொன்று செய்தி வெளியிட்டு - ள்ளது.

அச்செய்தியின் முழுவடிவமும் கீழே தரப்படுகின்றது.

தமிழகத்தில் வசித்து வரும் இலங்கை தமிழ் அகதிகளை மீளவும் இலங்கைக்கு அனுப்பும் நடவடிக்கைகள் இரகசியமாக மேற்கொள்ளப் படுவதாக தமிழகத்தில் உள்ள தமிழ் அகதிகள் தெரிவித்துள்ளனர்.

அவுஸ்திரேலிய அரசினது நிதி அனுசரணையில் தமிழகத்தில் இயங்கி வரும் ADRA எனும் நிறுவனமே இந்த செயற்பாட்டை மேற்கொண்டு வருவதாக



தெரியவருகின்றது.

அதன் அடிப்படையில் கடல் வழியாக ஆஸி செல்வதால் எதுவித பயனும் கிடையாது என்றும் அவ்வாறான செயற்பாடுகள் அனைத்தும் குற்றமாக கருதப்படும் என்றும் தெரிவிக்கும் நாட்குறிப்பேடுகள், பிரசுரங்கள், காகிதாகி எழுதுபொருட்கள் போன்றனவற்றை ADRA நிறுவனம் ஈழத்தமிழ் அகதிகளுக்கு

பக் 17

இவ்வாராந்தப் பத்திரிகை மலைமுரசு நிறுவனத்தினால் இல.159 ஏ, கடல் முக வீதி, திருகோணமலையில் இருந்து 19.03.2016ல் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org